LAUNCHING OFFER
1 வருடம்
₹2,520
₹999
60% Off
E-Paper
https://store.hindutamil.in

**இந்து தமிழ் திசை**
தமிழால் இணைவோம்
சென்னை பதிப்பு ● சனி, பிப்ரவரி 29, 2020
RNI No.TNTAM/2018/76449
● அச்சகம்: செ

https://t.me/daily_paper

காமதேனு வார இதழை
Courier மூலம் சிறப்புச் சந்தா விலையில் பெற
₹650 ~~₹910~~ அரையாண்டு சந்தா
https://store.hindutamil.in/print-subscription

https://www.hindutamil.in
● 20 பக்கங்கள் ₹ 7

ஒரே குடும்பத்தில் மூவர் கொலை

# ஆலங்குளம் இளைஞருக்கு தூக்கு தண்டனை விதிப்பு

● தென்காசி நீதிமன்றம் தீர்ப்பு

■ தென்காசி

ஆலங்குளம் அருகே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரை கொலை செய்த வழக்கில், இளைஞருக்கு தூக்கு தண்டனை விதித்து, தென்காசி நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே உள்ள நெட்டூரைச் சேர்ந்தவர் முத்துராஜ் என்ற ஆண்டவர் (36). இவர் மீது பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன. வழக்கு ஒன்றில் சிறையில் இருந்து வெளியே வந்த முத்துராஜ், கடந்த 12.2.2016-ல், அதேபகுதியைச் சேர்ந்த கோவிந்தசாமியின் மகள் பேச்சித்தாய் (48) மற்றும் பேச்சித்தாயின் மகள் கோமதி(21) ஆகியோரிடம் தகராறு செய்துள்ளார். இது தொடர்பாக பேச்சித்தாய் அளித்த புகாரின்பேரில், முத்துராஜிடம் ஆலங்குளம் போலீஸார் விசாரணை நடத்தி, எச்சரித்து அனுப்பினர்.

கடந்த 16.2.2016-ல் பேச்சித்தாயிடம், முத்துராஜ் மீண்டும் தகராறு செய்துள்ளார். இருவருக்கும் வாக்குவாதம் ஏற்படவே, பேச்சித்தாயை அரிவாளால் வெட்டினார் முத்துராஜ். இதில் சம்பவ இடத்திலேயே பேச்சித்தாய் உயிரிழந்தார். இதைப்பார்த்து அங்கு ஓடிவந்த பேச்சித்தாயின் மற்றொரு மகள் மாரியையும் அரிவாளால் தாக்கி, முத்துராஜ் கொலை செய்தார். முத்துராஜை, பேச்சித்தாயின் சகோதரர் முருகன் பிடிக்க முயன்றார். அப்போது முத்துராஜ், "உனது தந்தையையும் கொலை செய்வேன்" என்று கூறிவிட்டு தப்பியுள்ளார்.

### முதியவரும் கொலை

ஊருக்கு வடக்கு பகுதியில் உய்க்காட்டு சுடலைமாட சுவாமி கோயில் அருகே மாடு மேய்த்துக் கொண்டிருந்த முருகனின் தந்தை கோவிந்தசாமி (74), அரிவாளுடன் வந்த முத்துராஜைப் பார்த்தவுடன் தப்பி ஓடமுயன்றுள்ளார். ஆனால், கோவிந்தசாமியும் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். அடுத்தடுத்து, ஒரே குடும்பத்தில் மூன்று பேர் கொலை செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.


▲ முத்துராஜ்.

முத்துராஜை ஆலங்குளம் போலீஸார் கைது செய்து, அவர் மீது தென்காசி கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து விசாரணை நடைபெற்று வந்தது. இந்நிலையில் நேற்று தீர்ப்பு அளிப்பதாக நீதிபதி அறிவித்திருந்தார். அதன்படி முத்துராஜுக்கு தூக்கு தண்டனை விதித்து, நீதிபதி விஜயகுமார் தீர்ப்பளித்தார். போலீஸ் தரப்பில் அரசு வழக்கறிஞர் ராமச்சந்திரன் ஆஜரானார்.

இன்றைய நாளிதழுடன்
சொந்த வீடு
+
நலம் வாழ
உயிர் மூச்சு
நிலமும் வளமும்
இணைப்புகள் கேட்டு வாங்குங்கள்

ஆட்டோக்கள், டாக்ஸிகள் இயங்கின

# டெல்லியில் பதற்றம் தணிந்தது

● உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 42 ஆக உயர்வு

■ புதுடெல்லி

கலவரத்தால் பாதிக்கப்பட்ட டெல்லியில் பதற்றம் தணிந்து இயல்பு வாழ்க்கை திரும்பி வருகிறது.

மத்திய அரசின் குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு எதிராக வடகிழக்கு டெல்லியில் உள்ள ஜாப்ராபாத் பகுதியில் கடந்த சனிக்கிழமை போராட்டம் நடைபெற்றது. இதில் 500-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

அதேசமயத்தில், இந்த சட்டத்துக்கு ஆதரவாக ஜாப்ராத்துக்கு அருகே உள்ள மவுஜ்புரி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை ஏராளமானோர் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, இரு தரப்புக்கும் இடையே மோதல் வெடித்து கலவரமாக மாறியது. இதில் இரு பிரிவினரும் ஒருவரையொருவர் கடுமையாக தாக்கிக் கொண்டனர்.

இதுகுறித்து வாட்ஸ் அப், தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடகங்களில் தகவல் வெளியானதை அடுத்து, சாந்தாபாக், கோகுல்புரி, கர்டாம்புரி, குரேஜ்காஸ், பஜன்புரா ஆகிய பகுதிகளுக்கும் கலவரம் பரவியது. அந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இரு தரப்பாக பிரிந்து மோதிக் கொண்டனர். தொடர்ந்து 4 நாட்களாக நடைபெற்ற இந்தக் கலவரச் சம்பவங்களில் ஏராளமான வீடுகள், கடைகள், வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. 200-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

### 42 பேர் உயிரிழப்பு

இந்தக் கலவரத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை முதலில் 28-ஆக இருந்த நிலையில், தற்போது படிப்படியாக உயர்ந்து 42-ஐ எட்டியுள்ளது. காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கும் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இதனிடையே, இந்தக் கலவரச் சம்பவங்கள் தொடர்பாக டெல்லி போலீஸார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர். கலவரத்தை தூண்டிவிட்டது யார், வெளி மாநிலத்தைச் சேர்ந்த சமூக விரோதிகள் டெல்லிக்குள் நுழைந்து கலவரத்தில் ஈடுபட்டார்களா என்பன உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் போலீஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

அதேபோல், இந்த சம்பவங்கள் குறித்து விசாரிப்பதற்காக பிரத்யேகமாக 2 சிறப்பு புலனாய்வுக் குழுக்களும், 20-க்கும் மேற்பட்ட தனிப்படைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, வாட்ஸ் - அப், பேஸ்புக் போன்ற சமூக வலைதளங்களில் கலவரத்தை தூண்டும் விதமாக வதந்திகளை பரப்பியவர்களை கண்டுபிடிக்கவும் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.


▲ டெல்லியில் பதற்றம் தணிந்து இயல்பு நிலை திரும்பி வருகிறது. வடகிழக்கு டெல்லியில் உள்ள பிரிஜ்புரி பகுதியில் கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்கின்றனர். படம்: பிடிஐ

### 630 பேர் கைது

இந்நிலையில், வடகிழக்கு டெல்லியில் நடந்த கலவரச் சம்பவம் தொடர்பாக இதுவரை 630 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், 123 முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

இருதரப்பு மோதல் காரணமாக சில நாட்களுக்கு முன்பு கலவர பூமியாக காட்சியளித்த தலைநகர் டெல்லி, படிப்படியாக இயல்பு வாழ்க்கையை நோக்கி நகரத் தொடங்கியுள்ளது. மீண்டும் கலவரம் ஏற்படாமல் தடுப்பதற்காக பதற்றம் நிறைந்த பகுதிகளில் ஒரு மாத காலத்துக்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆயிரக்கணக்கான போலீஸாரும், துணை ராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருக்கின்றனர்.

கடந்த இரண்டு நாட்களாக அசம்பாவிதச் சம்பவங்கள் ஏதும் நடைபெறாததால் மக்கள் அச்சமின்றி நேற்று வெளியில் நடமாடுவதைக் காண முடிந்தது. பல்வேறு பகுதிகளில் ஆட்டோக்கள், டாக்சிகள், இ-ரிக்‌ஷாக்கள் வழக்கம் போல இயங்கின. ஆங்காங்கே கடைகளும், உணவகங்களும் திறக்கப்பட்டிருந்ததால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை திரும்பி வருகிறது.

இதேபோல், வரும் திங்கட்கிழமை முதல் பள்ளிகளை திறக்க ஏதுவாக தலைமை ஆசிரியர்களும், ஆசிரியர்களும் தங்கள் பள்ளிகளுக்கு இன்று சென்று ஆய்வு நடத்துமாறு பள்ளிக் கல்வி இயக்ககம் அறிவுறுத்தியுள்ளது.

### ஆணையர் நியமனம்

இதற்கிடையே, கலவரத்தை கட்டுப்படுத்துவதற்காக டெல்லி காவல்துறை சிறப்பு ஆணையராக கடந்த வாரம் நியமிக்கப்பட்ட ஸ்ரீவத்சவாவுக்கு காவல்துறை ஆணையராக கூடுதல் பொறுப்பு வழங்கி மத்திய உள்துறை அமைச்சகம் நேற்று உத்தரவிட்டது.


### துணைநிலை ஆளுநர் ஆய்வு


இந்நிலையில், கலவரத்தால் பாதிக்கப்பட்ட மவுஜ்புரி, ஜாப்ராபாத், கோகுல்புரி ஆகிய பகுதிகளை டெல்லி துணைநிலை ஆளுநர் அனில் பைஜால் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கலவரத்தால் வீடுகளை இழந்த மக்களுக்காக வடகிழக்கு டெல்லியில் 9 தற்காலிக தங்கும் முகாம்களை டெல்லி அரசு அமைத்துக் கொடுத்துள்ளது. அங்கு அவர்களுக்கு உணவுகளும், மருந்துகளும் வழங்கப்பட்டு வருவதாக டெல்லி அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. - பிடிஐ










## நல்லதே நடக்கும்

● ஜோதிஷபூஷண் வேங்கடசுப்பிரமணியன் ●

# 29-02-2020

**சனிக்கிழமை**

விகாரி 17 மாசி

சஷ்டி விரதம். காங்கேயநல்லூர் ஸ்ரீமுருகப்பெருமான் மயில் வாகனத்தில் திருவீதி உலா.

**திதி** : பஞ்சமி காலை 6.33 மணி வரை. அதன் பிறகு சஷ்டி.
**நட்சத்திரம்** : பரணி பின்னிரவு 3.43 மணி வரை. பிறகு கார்த்திகை.
**நாமயோகம்** : பிராம்யம் காலை 9.45 வரை. அதன் பிறகு ஐந்திரம்.
**நாமகரணம்** : பாலவம் காலை 6.33 வரை. அதன் பிறகு கௌலவம்.
**நல்ல நேரம்** : காலை 7.00-8.00, 10.30-1.00, மாலை 5.00-8.00, இரவு 9.00-10.00 மணி வரை.
**யோகம்** : சித்தயோகம் பின்னிரவு 3.43 வரை. பிறகு அமிர்தயோகம்.
**சூலம்** : கிழக்கு, தென்கிழக்கு காலை 9.12 மணி வரை.
**பரிகாரம்** : தயிர்
**சூரிய உதயம்:** சென்னையில் காலை 6.26 **அஸ்தமனம்:** மாலை 6.17

| | | | |
|---|---|---|---|
| ராகு காலம் | காலை 9.00-10.30 | நாள் | வளர்பிறை |
| எமகண்டம் | மதியம் 1.30-3.00 | அதிர்ஷ்ட எண் | 2, 4, 8 |
| குளிகை | காலை 6.00-7.30 | சந்திராஷ்டமம் | அஸ்தம் |

**அடுப்பு அமைக்க, சமையலறை சாதனங்கள் வாங்க, மூலிகைகள் சேகரிக்க, வேலி அமைக்க நன்று.**

**மேஷம்:** கணவன் - மனைவிக்குள் வீண் சந்தேகம் வந்து நீங்கும். யாரை நம்புவது என்கிற குழப்பம் ஏற்படும். நீங்கள் நகைச்சுவைக்காக கூறும் கருத்துகள்கூட மோதலை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது.

**ரிஷபம்:** விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். பழைய பிரச்சினைகளுக்கு சுமுக தீர்வு காண முயல்வீர்கள். வாகனம் திடீர் செலவு வைக்கும்.

**மிதுனம்:** வெளியூரிலிருந்து எதிர்பார்த்திருந்த செய்தி வந்து சேரும். குடும்பத்தினருடன் கலந்துரையாடி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வேலைச்சுமை குறையும். கலைப்பொருட்கள் சேரும்.

**கடகம்:** உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்துவந்த தொல்லை நீங்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு கூடும். நீண்ட நாட்களாக விலகியிருந்த உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும்.

**சிம்மம்:** பிள்ளைகளின் உடல்நலத்தில் அக்கறை காட்டுவீர்கள். பிரியமானவர்களை எதிர்பாராது சந்திப்பீர்கள். பணிகள் விரைந்து முடியும். வாகனத்தை சீர்செய்வீர்கள். பண வரவு உண்டு.

**கன்னி:** மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். யாரையும் மனம்நோகும்படி எடுத்தெறிந்து பேசாதீர்கள். எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். திடீர் பயணம் உண்டு.

**துலாம்:** சாதுர்யமாகப் பேசி கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். நவீன ஆடை ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். பிள்ளைகளின் பொறுப்புணர்வை பாராட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். பிள்ளைகள் உங்கள் பேச்சுக்கு மதிப்பளிப்பார்கள். உறவினர்கள் பாராட்டுவார்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும்.

**தனுசு:** மனைவிவழி உறவினர்களின் ஆதரவு அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகளை தவிர்ப்பது நல்லது. புதிய நண்பர்கள் அறிமுகமாவார்கள். அரசு காரியங்கள் சாதகமாக முடியும்.

**மகரம்:** சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண்பீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வாகனத்தை சீர்செய்வீர்கள். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டு.

**கும்பம்:** கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். உடன்பிறந்தவர்களால் பண உதவி கிடைக்கும். அக்கம்பக்கத்து வீட்டாரின் அன்புத்தொல்லை விலகும். ஆன்மிக பயணம் ஏற்படும்.

**மீனம்:** எதிர்பார்ப்புகள் மளமளவென்று பூர்த்தியாகும். குடும்பத்தினருடன் மனம்விட்டு பேசுவீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். அரசு காரியங்களில் நிலவிய சுணக்கம் நீங்கும்.

### கஜா புயல் பாதித்த ஓராண்டுக்கு பிறகு டெல்டா மாவட்ட

# சரணாலயங்களில் பறவைகள் கணக்கெடுப்பு தொடக்கம்

எஸ்.கல்யாணசுந்தரம்

■ திருச்சி

டெல்டா மாவட்டங்களில் உள்ள பறவைகள் சரணாலயங்களில் பறவைகள் கணக்கெடுப்பு நேற்று தொடங்கியது.

கஜா புயல் பாதித்த ஓராண்டுக்குப் பிறகு நடைபெறும் இந்த கணக்கெடுப்பின் மூலம் வலசை பறவைகளின் வருகையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து தெரிய வரும் என்பதால் இந்த கணக்கெடுப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள வடுவூர், முத்துப்பேட்டை மற்றும் உதயமார்த்தாண்டபுரம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கோடியக்கரை ஆகிய இடங்களில் ஆண்டுதோறும் நடைபெறும் ஒருங்கிணைந்த பறவைகள் கணக்கெடுப்பு தற்போது தொடங்கப்பட்டுள்ளது.

வனத்துறை மற்றும் திருச்சி பல்லுயிரி பாதுகாப்பு அறக்கட்டளை (Bio-Diversity Conservation Foundation) இணைந்து இந்த பணியை மேற்கொண்டுள்ளன. இந்த பணியில் வனத் துறையினர், பறவைகள் ஆர்வலர்கள், இயற்கை ஆர்வலர்கள் என 50-க்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளனர்.

தஞ்சாவூர் கோட்ட வனப் பாதுகாவலர் ராமசுப்பிரமணியன் தலைமையில், திருவாரூர் மாவட்ட வன அலுவலர் கே.அறிவொளி கணக்கெடுப்புப் பணியை நேற்று தொடங்கி வைத்தார்.

பல்லுயிரி பாதுகாப்பு அறக்கட்டளையின் விஞ்ஞானி முனைவர் ஏ.குமரகுரு, பறவைகள் கணக்கெடுப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய மற்றும் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து தன்னார்வலர்களுக்கு பயிற்சியளித்த அவர், கணக்கெடுப்புப் பணி ஒருங்கிணைப்பை மேற்கொள்கிறார். இதுகுறித்து ஏ.குமரகுரு, 'இந்து தமிழ்' நாளிதழிடம் கூறியது:

வெளிநாடு மற்றும் உள்நாட்டுப் பறவைகள் தாங்கள் வசிக்கும் பகுதியிலிருந்து உணவு, குளிர் அல்லது வெப்பம் மற்றும் இன விருத்தி ஆகியவற்றுக்காக பல்வேறு இடங்களுக்கு வலசை செல்கின்றன.

அந்தவகையில் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள வடுவூர், உதயமார்த்தாண்டபுரம், முத்துப்பேட்டை மற்றும் நாகை மாவட்டத்தில் உள்ள கோடியக்கரை ஆகிய பறவைகள் சரணாலயங்களுக்கு ஆண்டுதோறும் ஆஸ்திரேலியா, சைபீரியா, மங்கோலியா, தென் அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் மற்றும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் பறவைகள் வலசை வருகின்றன.

ஆண்டுதோறும் நடத்தப்படும் இந்த கணக்கெடுப்பின் மூலம் வலசை வரும் பறவைகளின் வகைகள், எந்தெந்த நாடுகள் மற்றும் பகுதிகளிலிருந்து வருகின்றன என்பதை அறிந்துகொள்ள முடியும்.

கடந்த ஆண்டு கஜா புயல் வீசியதில் டெல்டா மாவட்டங்களில் விவசாயிகள் மற்றும் மரங்கள் உள்ளிட்டவைகள் மட்டுமின்றி இயற்கை வளங்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டன.

கஜா புயல் வீசியவுடன் கடந்த ஆண்டு பிப்.7, 8 ஆகிய நாட்களில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதையடுத்து, ஓராண்டுக்குப் பிறகு தற்போது நடைபெறும் இந்த பறவைகள் கணக்கெடுப்பின் நிறைவில்தான் பறவைகளின் வரத்தில் ஏதேனும் மாற்றம்(எண்ணிக்கை குறைவு) உள்ளதா என்பது தெரியவரும். அவ்வாறு மாற்றம் ஏற்பட்டிருந்தால், அதை சரிசெய்ய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை வனத் துறை திட்டமிடும் என்றார்.





▲ திருவாரூர் மாவட்டம் வடுவூர் பறவைகள் சரணாலயத்தில் நேற்று பறவைகள் கணக்கெடுப்பில் ஈடுபட்ட விஞ்ஞானி ஏ.குமரகுரு மற்றும் தன்னார்வலர்கள். (அடுத்த படம்) பறவைகள் சரணாலயத்தில் கூடுகட்டியுள்ள நத்தைகுத்தி நாரைகள்.

https://t.me/daily_paper

# அரசுக் கல்லூரிகளில் பாடவேளை நேரம் மாற்றம்

■ சென்னை

அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் பாடவேளை நேரங்களில் மாற்றம் கொண்டுவர கல்லூரிக் கல்வி இயக்குநரகம் முடிவு செய்துள்ளது.

தமிழகத்தில் மொத்தம் 114 அரசுக் கல்லூரிகள் இயங்குகின்றன. இதில் 70 சதவீத கல்லூரிகளில் காலை, மாலை என இரு பணி நேரமுறையில் (ஷிப்ட்) வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதில் காலை வகுப்புகள் காலை 8.45 முதல் மதியம் 1.15 மணி வரையும், மாலை வகுப்புகள் மதியம் 1.30 முதல் மாலை 6 மணி வரையும் நடைபெறுகின்றன. காலை நேர வகுப்பில் நிரந்தர பேராசிரியர்களும், மாலை நேர வகுப்பில் கவுரவ விரிவுரையாளர்களும் பணிபுரிகின்றனர்.

இந்நிலையில் அரசுக் கல்லூரிகளில் உள்ள தற்போதைய நடைமுறையை மாற்றிவிட்டு, காலை 10 முதல் மாலை 4 மணி வரை வகுப்புகள் நடத்த உயர்கல்வித் துறை திட்டமிட்டுள்ளது. மாணவர்களுக்கு கல்வி கற்க போதுமான நேரமின்மை மற்றும் மாலைநேர வகுப்புகளில் குறைவான மாணவர்களே படித்து வருவதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து புதிய பணி நடைமுறைக்கேற்ப தேவைப்படும் கூடுதல் வகுப்பறைகள், ஆசிரியர்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளின் விவரங்களை விரைவாக அனுப்பி வைக்க அனைத்து அரசுக் கல்லூரி முதல்வர்களுக்கும் சுற்றறிக்கை வாயிலாக கல்லூரிக் கல்வி இயக்குநரகம் அறிவுறுத்தியுள்ளது.

### பெரு நிறுவனங்களின் ஆதிக்கம் அதிகரிப்பு

# ஆயத்த ஆடைகள் மோகத்தால் நலிவடைந்த தையல் தொழில்

● தொழிலாளர்கள் வேலையின்றி தவிப்பு

ஒய்.ஆண்டனி செல்வராஜ்

■ மதுரை

உலக தையல்காரர்கள் தினம் நேற்று கொண்டாடப்பட்ட நிலையில் ஆயத்த ஆடைகள் மீதான மோகத்தால் பாரம்பரியமாக தையல் தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழந்து நலிவடைந்து வருகின்றனர்.

கடந்த கால் நூற்றாண்டுக்கு முன்புவரை நினைத்தவுடன் புத்தாடைகள் எடுக்கும் பழக்கம் பொதுமக்களிடமில்லை. திருவிழாக்கள், திருமணம் உள்ளிட்ட முக்கிய கொண்டாட்டங்களுக்கே புத்தாடை அணிவார்கள். அப்போது தையல் கடைகளில் புத்தாடைகள் தைப்பதற்கு கூட்டம் நிரம்பி வழியும்.

வாடிக்கையாளர்களிடம் பெற்ற துணிகளை தைத்துக் கொடுக்க தையல் கலைஞர்கள், பண்டிகையைக்கூட குடும்பத்துடன் கொண்டாட முடியாமல் இரவு, பகலாக வேலைப்பார்த்தனர்.

ஆனால், தற்போது பொது மக்கள் புத்தாடைகள் உடுத்த விழாக்களுக்காக காத்திருக்காமல் நினைத்தநேரத்தில் ஜவுளிக் கடைகளில் ஆயத்த ஆடைகளை எடுக்கின்றனர். அதாவது, ஏற்கெனவே தைத்து கடைகளில் விற்பனைக்கு வைத்திருக்கும் ஆயத்த ஆடைகளை வாங்கி உடுத்துவதால் தையல் தொழிலாளர்கள் வேலை வாய்ப்புகள் இல்லாமல் நலிவடைந்துள்ளனர்.



▲ மதுரை எஸ்.எஸ்.காலனியில் வீட்டில் குடிசைத் தொழில்போல பெண்களே நடத்தும் தையல் கடை. படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி

மதுரை திருப்பாலையைச் சேர்ந்த தையல் கலைஞர் பிரகாஷ் கூறியதாவது:

ஒரு காலத்தில் பெரிய முதலீடு எதுவும் இல்லாமல், ஆண்கள், பெண்கள் வீட்டில் இருந்தவாறே சம்பாதிக்கக்கூடிய தொழிலாக தையல் தொழில் இருந்தது. இதற்கு ஒரு தையல் எந்திரமும், நூல், ஊசி, பொத்தான், கத்தரிக்கோல், அளவெடுக்கும் பட்டை இருந்தாலே போதும். சொந்தமாக தையல் தொழில் தொடங்கி சம்பாதிக்க முடியும்.

வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பேசவும், நேர்த்தியாக, ரசனையாக ஆடைகளைத் தைக்கத் தெரிந்திருந்தால் இந்தத் தொழிலை வெற்றிகரமாக நடத்தலாம். 20 ஆண்டுகளுக்கு முன்பு வரை தீபாவளி ஆர்டர்களுக்கு 3 மாதங்கள் வரை விடிய விடிய இருந்து தைப்போம். தற்போது நிலைமை தலைகீழ். அதிகபட்சம் 20 நாட்கள் தைப்பதற்கு துணிகள் வருவதே அபூர்வமாக உள்ளது.

பள்ளிச் சீருடைகளைத் தைக்கவே தற்போது அதிக அளவு துணிகள் வருகின்றன. கிராமப்புறங்கள், நகர்ப்புறங்கள் என்ற வேறுபாடின்றி இளைஞர்கள் தற்போது ஆயத்த ஆடைகளையே விரும்பி அணிகின்றனர். ஆனால், ஆயத்த ஆடைகளைவிட எங்கள் தையல் தரமானது. மீண்டும் வாடிக்கையாளர்கள் ஆடைகளைத் தைக்க வர வேண்டும் என்பதற்காக கவனமாகவும், நேர்த்தியாகவும் துணிகளைத் தைப்போம். ஏதாவது தவறு நடந்தால் வாடிக்கையாளர்கள் பணம் கொடுக்க மாட்டார்கள்.

ஆனால், ஆயத்த ஆடைகளைத் தைப்பவர்கள், வாடிக்கையாளர்கள் யாரென்று தெரியாமலே தைப்பார்கள். அதனால், அவர்களிடம் எங்கள் அளவுக்குத் தொழிலில் நேர்த்தி இருக்காது.

எங்களால் ஆயத்த ஆடை தயாரிப்பு நிறுவனங்களுடன் போட்டியிட முடியவில்லை. இந்தத் தொழிலை தவிர வேறு வேலைக்கும் செல்ல முடியாமல், கடைசியில் அந்தப் பெருநிறுவனங்களிடமே கொத்தடிமையாக வேலைக்குச் செல்லும்நிலை உள்ளது.

இதேநிலை நீடித்தால் அடுத்த 10, 15 ஆண்டுகளில் தையல் கலைஞர்களும், தையல் தொழிலும் காணாமல் போய்விடும். தையல் தொழிலையும், தொழிலாளர்களையும் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

### 'ரசனை அறிந்து தைத்தால் லாபகரமாகும்'

மதுரை எஸ்.எஸ்.காலனி டெய்லரிங் ஷாப் உரிமையாளர் விஜயலெட்சமி கூறும்போது, "டெய்லரிங் துறையில் எப்போதுமே போட்டி இருக்கும். புத்தாடைகள் அணிவதில் ட்ரெண்டிங் மாறிவிட்டது. சுடிதார், ப்ளவுஸ் போட்ட பெண்கள் தற்போது பேன்ட், சர்ட் என நவீனமான ஆடைகளை உடுத்துகின்றனர். அதனால், டெய்லரிங் தொழில் சவாலாக உள்ளது.

ஆனால், விழாக்காலங்களில் மக்கள் கலாச்சாரம் சார்ந்த ஆடைகளையே அணிகின்றனர். அதற்கான வேலைவாய்ப்பு இன்னமும் இருக்கிறது. அதனால், தரமாகவும், வாடிக்கையாளர்கள் விரும்பும் ரசனைக்கேற்ப ஆடைகளைத் தைத்துக் கொடுத்தால் தையல் தொழிலை லாபகரமாகச் செய்யலாம். தையல் கலைஞர்களின் தையல் 10 ஆண்டுகளானாலும் அப்படியே இருக்கும். ஆனால், ஆயத்த ஆடைகளில் அதை எதிர்பார்க்கவே முடியாது. எந்த ஒரு வடிவமைப்பையும் பொதுவாகவே செய்வார்கள்" என்றார்.

# நீலகிரி, கொடைக்கானல், தேனியில் நிலச்சரிவு அபாயம்

● தமிழக வருவாய் ஆணையர் ராதாகிருஷ்ணன் தகவல்

■ உதகை

நீலகிரி, கொடைக்கானல், தேனி ஆகிய பகுதிகளில் நிலச்சரிவு அபாயம் உள்ளதாக தமிழக வருவாய் ஆணையர் ஜே.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்திய மண் வளப் பாதுகாப்பு சங்கம், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு நிறுவனம் சார்பில் 'மலைப்பாங்கான பகுதிகளில் நிலச்சரிவைக் கட்டுப்படுத்தும் உத்திகள்' தொடர்பான இரு நாள் தேசிய கருத்தரங்கம் உதகையில் நேற்று தொடங்கியது.

மாநில மண் வளப் பாதுகாப்புச் சங்கத் தலைவர் எஸ்.மணிவண்ணன், கருத்தரங்கின் நோக்கம் குறித்து பேசினார். இந்திய மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு நிறுவனத் தலைவர் (பொ) கண்ணன் தலைமை வகித்தார்.

மாவட்ட ஆட்சியர் ஜெ.இன்னசென்ட் திவ்யா பேசும்போது, "கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் நீலகிரி மாவட்டத்தில் பெய்த கன மழை காரணமாக 77 பெரிய நிலச்சரிவுகளும், 20 சிறிய நிலச்சரிவுகளும் ஏற்பட்டன. நீலகிரி மாவட்டத்தில் ஏற்படும் நிலச்சரிவுகளுக்கு விவசாய முறைகளில் மாற்றம் மற்றும் வளங்களின் முறையற்ற பயன்பாடே காரணம். நிலச்சரிவு அபாயமுள்ள பகுதிகள் 101-ல் இருந்து 283-ஆக உயர்ந்துள்ளன" என்றார்.




▲ உதகையில் நடைபெற்ற கருத்தரங்கில் மாவட்ட பேரிடர் தகவல் களஞ்சியமான 'நீட்' செயலியை அறிமுகப்படுத்திய தமிழக வருவாய் ஆணையர் ஜே.ராதாகிருஷ்ணன். படம்:ஆர்.டி.சிவசங்கர்

இந்திய புவியியல் ஆய்வு மையத்தின் துணை இயக்குநர் அமித்வா குந்து பேசியதாவது: இந்திய புவியியல் ஆய்வு மையம் சார்பில் 1980-ம் ஆண்டு முதல் நிலச்சரிவு அபாயம் உள்ள பகுதிகளை வரையறுத்து வருகிறோம். 41 அம்சங்களைக் கொண்டு ஆய்வு செய்து 14 ஆயிரம் நிலச்சரிவுப் பகுதிகளைக் கண்டறிந்து, அது குறித்த தகவல்களை இணைய தளத்தில் பதிவேற்றியுள்ளோம். கடந்த ஆண்டு தமிழகத்தில் 206, கேரளாவில் 1,595, கர்நாடகாவில் 84 இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது என்றார்.

மாவட்ட நிர்வாகம் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள 'நீட்' செயலியை அறிமுகப்படுத்தி தமிழக வருவாய் ஆணையர் ஜே.ராதாகிருஷ்ணன் பேசியதாவது:

இந்தியாவில் 15 சதவீத பகுதிகள் நிலச்சரிவு அபாயமுள்ளவை. இமாலயா, வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் அடிக்கடி நிலச்சரிவு ஏற்படுகிறது. தமிழகத்தில் நீலகிரி, கொடைக்கானல், தேனி ஆகிய பகுதிகளில் நிலச்சரிவு அபாயம் உள்ளது. பேரிடர் ஏற்படுவதை முன்னரே கணிக்க விஞ்ஞானிகளின் அறிவாற்றலும், உள்ளூர் மக்கள், அரசு அதிகாரிகள் மற்றும் ஆய்வாளர்களின் ஒருங்கிணைந்த செயல்பாடும் தேவை.

தேசிய பேரிடர் நிதியில் உள்ள தமிழக பங்கில் இருந்து பேரிடரைத் தவிர்க்க செயல்படுத்தப்படும் முன்னோடித் திட்டங்களுக்கு நீலகிரி மாவட்டத்துக்கு ரூ.1.25 கோடி நிதி ஒதுக்கப்படும். பேரிடர்களை தடுக்க சதுப்புநிலக் காடுகள், மணல்மேடுகளைப் பாதுகாக்க வேண்டும். பேரிடர் அபாயமுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு மாற்றிடம் வழங்குவது குறித்து ஆய்வு செய்யப்படும் என்றார்.

கருத்தரங்கில், நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட ஆராய்ச்சியாளர்கள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

LKS GOLD RATE ₹3964 Per Gram
MARKET RATE ₹4064 Per Gram
HOUSE OF L.K.S. LKS GH SINCE 1925
T.NAGAR LKS GOLD HOUSE (P) LTD SINCE 1925
Usman Road, T.Nagar, Ch-17. Ph: 2434 5555

## குரூப் 1 தேர்வு முறைகேடு தொடர்பாக திமுக வழக்கு

# தமிழக அரசு, சிபிஐ பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு

■ சென்னை

குரூப் 1 தேர்வு முறைகேடு தொடர்பாக சிபிஐ விசாரணை கோரி திமுக தொடர்ந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், இதுகுறித்து ஏப்ரல் 6-ம் தேதிக்குள் சிபிஐ மற்றும் தமிழக அரசு பதிலளிக்க உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் சில வாரங்களுக்கு முன்பு நீதிபதிகள் ஆர்.சுப்பையா, ஆர்.பொங்கியப்பன் ஆகியோர் அடங்கிய அமர்வில் வழக்கறிஞர் எம்.புருஷோத்தமன் ஆஜராகி, “குரூப் 4 மற்றும் குரூப் 2 தேர்வுகளில் முறைகேடு நடந்திருப்பது போலவே 2015 முதல் 2017 வரை நடத்தப்பட்ட குரூப் 1 தேர்விலும் பெரிய அளவில் மோசடி நடந்துள்ளது.

ஒரே மையத்தைச் சேர்ந்த பலர் முறைகேடாக தேர்ச்சி பெற்றுள்ளனர். இதுதொடர்பாக திருநங்கை ஸ்வப்னா சார்பில் கடந்த 2017-ம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. இந்த வழக்கு விசாரணையின்போது, டிஎன்பிஎஸ்சி-யில் இருந்து 64 விடைத்தாள்கள் திருடப்பட்டுள்ளன என போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு கடந்த ஆண்டு ஏப்ரல் மாதமே விசாரணைக்கு வரவேண்டியது. ஆனாலும் இதுவரை விசாரணைக்கு வரவில்லை.

அரசு அதிகாரிகளின் துணையுடன் தனியார் பயிற்சி மையங்கள் நெட்வொர்க் அமைத்து மிகப் பெரிய அளவில் மோசடியில் ஈடுபட்டுள்ளன. இதுதொடர்பாக கூடுதல் தகவல்களைத் தர தயாராக உள்ளோம்” என முறையிட்டார். அப்போது, இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நீதிபதிகள் உறுதி அளித்திருந்தனர்.

இந்நிலையில், இதே பிரச்சினை தொடர்பாக திமுக சார்பிலும் உயர் நீதிமன்றத்தில் புதிதாக மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதில், ‘கடந்த 2015 முதல் 2017-ம் ஆண்டு வரை நடந்த குரூப் 1 தேர்வில் சென்னையில் உள்ள பிரபலமான 2 பயிற்சி மையங்களில் இருந்து அதிகமானோர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் பெரும் முறைகேடுகள் நடந்துள்ளன. வெளி மாநிலத்தில் பிரின்ட் செய்யப்பட்ட மையங்களின் உதவியுடன் விடைத்தாள்கள் திருத்தப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக மத்திய குற்றப் பிரிவு போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த மையங்கள் ஆளுங்கட்சியில் செல்வாக்கு மிக்கவர்களால் நடத்தப்படுவதால், இது தொடர்பான வழக்கை சிபிஐக்கு மாற்றினால்தான் உண்மை வெளியே வரும்’ என கோரப்பட்டு இருந்தது.

திருநங்கை ஸ்வப்னா மற்றும் திமுக சார்பில் தொடரப்பட்ட வழக்குகள், நீதிபதிகள் ஆர்.சுப்பையா, ஆர்.பொங்கியப்பன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது திமுக தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், “குரூப் 1 தேர்வில் மிகப்பெரிய அளவில் டிஎன்பிஎஸ்சி அதிகாரிகளின் உதவியுடன் விடைத்தாள்களை திருத்தி மோசடி நடந்துள்ளது.

உயரதிகாரிகள் முதல் கீழ் மட்ட பணியாளர்கள் வரை அனைவருக்கும் இதில் தொடர்புள்ளது. டிஎன்பிஎஸ்சி தலைவராக பதவி வகித்தவருக்கும் இதில் தொடர்பு உள்ளது. ஆனால், கீழ்மட்ட ஊழியர்கள் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆளுங்கட்சியினருக்கு தொடர்பு இருப்பதால், இதுவரை 3 விசாரணை அதிகாரிகள் மாற்றப்பட்டுள்ளனர். எனவே, இந்த வழக்கை உள்ளூர் போலீஸார் விசாரித்தால் உண்மை வெளியே வராது என்பதால்தான் சிபிஐ விசாரணை கோருகிறோம்” என்றார்.

அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண், “இந்த வழக்கு தொடர்பாக புலன் விசாரணை முடிவடைந்து, எப்ஐஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது. 6 விசாரணை அறிக்கைகள் நீதிமன்றத்தில் ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளன. விரைவில் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட உள்ளது” என்றார்.

டிஎன்பிஎஸ்சி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சி.எஸ்.வைத்தியநாதன், “இதுதொடர்பாக ஏற்கெனவே டிஎன்பிஎஸ்சி சட்டப்பூர்வமாக நடவடிக்கை எடுத்துள்ளது. குரூப் 1 தேர்வு முறைகேட்டில் ஈடுபட்ட டிஎன்பிஎஸ்சி அதிகாரிகள் மீது லஞ்ச ஒழிப்பு சட்டத்தின்கீழ் வழக்கு தொடர அரசிடம் அனுமதி பெறப்பட்டுள்ளது. விரைவில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார்.

தனியார் பயிற்சி மையங்கள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன், “ஒரே பயிற்சி மையங்களில் படித்து தேர்ச்சி பெற்றவர்கள் எந்த முறைகேடுகளிலும் ஈடுபடவில்லை என ஏற்கெனவே தெரிவித்துள்ளோம்” என்றார்.

அதையடுத்து நீதிபதிகள், “இதுதொடர்பாக சிபிஐ, தமிழக அரசு, டிஎன்பிஎஸ்சி மற்றும் சம்பந்தப்பட்ட போலீஸார் உள்ளிட்டோர் வரும் ஏப்.6-ம் தேதிக்குள் பதில் அளிக்க வேண்டும்” என உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்துள்ளனர்.

## 2 புதிய அரசு மருத்துவ கல்லூரிகளுக்கு

# முதல்வர் பழனிசாமி நாளை அடிக்கல் நாட்டுகிறார்

■ சென்னை

ராமநாதபுரம், விருதுநகரில் அமைய உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு முதல்வர் பழனிசாமி நாளை அடிக்கல் நாட்டுகிறார்.

தமிழகத்தில் ராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல், நாமக்கல், திருப்பூர், ஊட்டி, திருவள்ளூர், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், அரியலூர், கள்ளக்குறிச்சி ஆகிய 11 இடங்களில் புதிய மருத்துவ கல்லூரிகள் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் வழங்கி உள்ளது. மத்திய அரசின் 60 சதவீத நிதி மற்றும் மாநில அரசின் 40 சதவீத நிதியில் இந்த கல்லூரிகள் தலா ரூ.325 கோடியில் கட்டப்பட உள்ளன.

இந்நிலையில், ராமநாதபுரம், விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் அமையவுள்ள புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு முதல்வர் பழனிசாமி நாளை (மார்ச் 1) அடிக்கல் நாட்டுகிறார். இதைத் தொடர்ந்து அம்மாவட்டங்களில் தொடங்கப்பட உள்ள புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவதோடு, முடிவுற்ற பணிகளையும் முதல்வர் தொடங்கி வைக்கிறார்.

ராமநாதபுரம் ஒருங்கிணைந்த மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் காலை 10 மணிக்கும், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில், மாலை 3 மணிக்கும் விழா நடக்கிறது. விழாவுக்கு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ்வர்தன் தலைமை தாங்குகிறார். துணை முதல்வர் ஓபன்னீர்செல்வம் முன்னிலை வகிக்கிறார்.

E-Paper

# நில தொகுப்பு வளர்ச்சி திட்டத்துக்கான வரைவு விதிகள் இணையத்தில் வெளியீடு

● பொதுமக்கள் கருத்து தெரிவிக்க 4 வாரம் அவகாசம்

■ சென்னை

நில தொகுப்பு பகுதி வளர்ச்சித் திட்டத்துக்கான வரைவு விதிகள் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இதன்மீது 4 வாரங்களுக்குள் பொதுமக்கள் கருத்துகளை தெரிவிக்கலாம் என நகர ஊரமைப்புத் துறை இயக்குநர் அறிவித்துள்ளார்.

தனியார் நிலங்கள், தொகுப்பாக உள்ள தனியார் நிலங்களின் உரிமையை வாங்கி, அந்த நிலங்களை மேம்படுத்தி அவற்றை மீண்டும் தனியாருக்கே வழங்குதல், அந்த நிலங்களில் பொதுப் பயன்பாட்டுக்கான நிலங்களை பிரித்து அவற்றில் தேவையான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் அல்லது விற்பனை செய்தல் ஆகியவற்றுக்காக நிலத் தொகுப்பு பகுதி வளர்ச்சித் திட்ட குழுமம் உருவாக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது.

இதையடுத்து, இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கான வரைவு விதிகள் உருவாக்கப்பட்டன. இந்த விதிகள் தற்போது பொதுமக்கள் கருத்துகளை அறிவதற்காக வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து நகர ஊரமைப்பு இயக்குநர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு நகர ஊரமைப்புச் சட்டத்தின்கீழ், நில சேர்மம் பகுதி (நில தொகுப்பு பகுதி) வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்துவதற்கான விதிகளை இறுதி செய்யும் பணிகள் நகர ஊரமைப்பு இயக்குநரகம் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வரைவு விதிகள், www.tcp.tn.gov.in மற்றும் www.cmdachennai.tn.gov.in’ ஆகிய இணையதளங்களில் வெளியிடப்பட்டுள்ளன. வரைவு விதிகள் மீது பொதுமக்கள் தங்கள் ஆட்சேபங்கள், ஆலோசனைகளை 4 வாரங்களுக்குள் ‘egovdtcp@tn.gov.in’ என்ற மின்னஞ்சல் முகவரியில் பதிவு செய்யலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சென்னையில் போராட்டம் நடத்த தடை

■ சென்னை

சென்னை மாநகர காவல் ஆணையர் ஏ.கே.விஸ்வநாதன் நேற்று வெளியிட்ட அறிவிப்பு:

சென்னை மாநகர காவல் எல்லைக்கு உட்பட்ட பொது இடங்கள், போக்குவரத்து பகுதிகள், சாலை மற்றும் தெருக்களில் கூட்டம், பேரணி, உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், மனித சங்கிலி உள்ளிட்ட போராட்டங்கள் நடத்த மார்ச் 14-ம் தேதி காலை 9 மணி வரை 15 நாட்களுக்கு தடை விதிக்கப்படுகிறது. இருப்பினும், அனுமதி தேவைப்படும் விண்ணப்பதாரர்கள் 5 நாட்களுக்கு முன்பு அனுமதி கோரி விண்ணப்பிக்கலாம். இவ்வாறு உத்தரவில் கூறப்பட்டுள்ளது.



▲ சென்னை நுங்கம்பாக்கம் காஞ்சி காமகோடி குழந்தைகள் நல அறக்கட்டளை மருத்துவமனை வளாகத்தில் உள்ள பால விநாயகர் கோயில் கும்பாபிஷேகம் நேற்று நடந்தது. கோபுர கலசம் மீது புனித நீர் ஊற்றுகிறார் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள். படம்: க.ஸ்ரீபரத்

## நுங்கம்பாக்கத்தில் விமரிசையாக நடந்தது

# பால விநாயகர் கோயில் கும்பாபிஷேக விழா

● ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பங்கேற்பு

■ சென்னை

நுங்கம்பாக்கம் பால விநாயகர் கோயில் கும்பாபிஷேக விழா விமரிசையாக நடந்தது. காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கோபுர கலசத்தின் மீது புனிதநீர் ஊற்றி, கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள காஞ்சி காமகோடி குழந்தைகள் மருத்துவமனை வளாகத்தில் பால விநாயகர் கோயில் உள்ளது. இந்த கோயில் 40 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது.

காஞ்சி காமகோடி குழந்தைகள் மருத்துவமனை மற்றும் காஞ்சி காமகோடி குழந்தைகள் அறக்கட்டளை இணைந்து இக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்தன.

இதையொட்டி, கடந்த 2 நாட்களாக கோயிலில் யாகசாலை பூஜைகள் நடத்தப்பட்டன. நேற்று காலை சிறப்பு ஹோமங்கள் நடத்தப்பட்டன.

கோயில் கோபுர கலசத்தின் மீது காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் புனிதநீரை ஊற்றி, கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார். ஏராளமான பக்தர்கள் பக்திப் பரவசத்துடன் தரிசனம் செய்தனர்.

காஞ்சி காமகோடி குழந்தைகள் அறக்கட்டளை தலைவர் ஏ.சி. முத்தையா உள்ளிட்டோர் விழாவில் பங்கேற்றனர்.

பின்னர் மகா தீபாராதனை நடந்தது. சிறப்பு அலங்காரத்தில் பால விநாயகர் அருள்பாலித்தார்.

இதைத் தொடர்ந்து, மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள காஞ்சி காமகோடி மடத்தின் முன்னாள் பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் திருவுருவச் சிலையை ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் திறந்து வைத்து மலர் கிரீடம் அணிவித்தார்.

## வெளிநாடுகளில் இருந்து வந்து 28 நாட்களாக கண்காணிக்கப்பட்ட

# 786 பேருக்கு ‘கோவிட்-19’ பாதிப்பு இல்லாததால் விடுவிப்பு

● சுகாதாரத் துறை அமைச்சர் சி.விஜயபாஸ்கர் தகவல்

■ சென்னை

‘கோவிட்-19’ பாதிப்புள்ள சீனா உள்ளிட்ட நாடுகளில் இருந்து வந்ததால் 28 நாட்கள் கண்காணிக்கப்பட்டு வந்த 786 பேருக்கு பாதிப்பு இல்லை என்பதால், அவர்கள் கண்காணிப்பில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

தமிழகத்தில் ‘கோவிட்-19’ நோய் பாதிப்புடன் யாரும் மருத்துவமனைகளில் இல்லை என்று சுகாதாரத் துறை அமைச்சர் சி.விஜயபாஸ்கர் தெரிவித்தார்.

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் 25-ம் ஆண்டு தொடர் சேவை மற்றும் உலக எய்ட்ஸ் தின நிகழ்ச்சி, சென்னை எழும்பூரில் உள்ள நல்வாழ்வு, குடும்ப நல பயிற்சி நிலையத்தில் நேற்று நடந்தது.

இதில் சுகாதாரத் துறை



அமைச்சர் சி.விஜயபாஸ்கர் கலந்துகொண்டு, வெள்ளி விழா சிறப்பு மலரை வெளியிட்டார். சிறப்பாக செயல்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தில் சிறப்பாக பணியாற்றிய ஊழியர்களுக்கு நினைவுப் பரிசு, பாராட்டு சான்றிதழ்களையும் அமைச்சர் வழங்கினார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

எய்ட்ஸ் கட்டுப்பாட்டில் தேசிய அளவில் தமிழகம் முதன்மை இடம் பெற்றுள்ளது. தாயிடம் இருந்து குழந்தைக்கு நோய்த் தொற்று பரவுவதை தடுப்பதில், உலக அளவில் கியூபாவுக்கு அடுத்து, தமிழகம் சிறந்து விளங்குகிறது.

தமிழகத்தில் 25 மாவட்டங்களில் தாய் - சேய் தொற்றுகள் முழுமையாக தடுக்கப்பட்டுள்ளன. பிரசவத்தின்போது தாய் உயிரிழக்கும் விகிதம் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது. இதை முழுவதுமாக தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதை ஊக்குவிக்கும் வகையில் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

‘கோவிட்-19’ (கரோனா வைரஸ்) தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த வைரஸ் பாதிப்புடன் யாரும் மருத்துவமனைகளில் இல்லை. வைரஸ் பரவியுள்ள சீனா உள்ளிட்ட நாடுகளில் இருந்து தமிழகம் வருபவர்கள் தொடர்ந்து பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றனர். புதிதாக எந்த நாடுகளில் வைரஸ் பரவி இருப்பதாக உலக சுகாதார மையம் சொல்கிறதோ, அங்கிருந்து வருபவர்களும் பரிசோதனை செய்யப்படுகின்றனர். இதுவரை சீனா உள்ளிட்ட நாடுகளில் இருந்து தமிழகம் வந்தவர்களில் 28 நாட்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்ட 786 பேருக்கு வைரஸ் பாதிப்பு இல்லை என்பது உறுதி செய்யப்பட்டதால், அவர்கள் கண்காணிப்பில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

# திமுக எம்.பி.க்கள் கூட்டம் ஒத்திவைப்பு

■ சென்னை

இன்று நடைபெறுவதாக இருந்த திமுக எம்.பி.க்கள் கூட்டம் ஒத்திவைக்கப்படுவதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் க.அன்பழகன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிவிப்பில், “நாடாளுமன்ற திமுக உறுப்பினர்களின் கூட்டம் கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பிப்ரவரி 29-ம் தேதி (இன்று) சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள முரசொலி மாறன் வளாகத்தில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

தவிர்க்க முடியாத காரணத்தால் எம்.பி.க்கள் கூட்டம் ஒத்திவைக்கப்படுகிறது. கூட்டம் நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்” என்று தெரிவித்துள்ளார்.




▲ சென்னை துறைமுகத்தில் நேற்று நடந்த நிகழ்ச்சியில், இந்திய கடலோர காவல்படையின் ரோந்து பணிக்காக புதிதாக தயாரிக்கப்பட்டுள்ள ‘வராத்’ கப்பலை மத்திய கப்பல் துறை இணையமைச்சர் மன்சுக் மாண்டவியா கடலோர காவல்படைக்கு அர்ப்பணித்தார். இந்நிகழ்ச்சியில் கடலோர காவல்படை கிழக்குப் பிராந்திய ஐ.ஜி பரமேஷ், இந்தியக் கடலோர காவல்படை இயக்குநர் ஜெனரல் கே.நட்ராஜன் சென்னை துறைமுக பொறுப்புக் கழக தலைவர் ரவீந்திரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். படங்கள்: ம.பிரபு

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.
மின்னஞ்சல் முகவரி: press.release@hindutamil.co.in

TNPL தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்
மொண்டிப்பட்டி, மணப்பாறை தாலுக்கா, திருச்சி மாவட்டம் - 621 306,
தொலைபேசி : 04332-261 600, மின்அஞ்சல் : tos.u2@tnpl.co.in

ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

| ஒப்பந்தப்புள்ளி எண் | வேலையின் விவரம் | சமர்ப்பிக்கும் நாள் |
|---|---|---|
| 192023 002654 | திருச்சி மாவட்டம், TNPL Unit-II, Stores-க்கு தேவையான சேவைகளை (Providing Support Services) வழங்குதல். | 14.03.2020 |
| 192023 002731 | திருச்சி மாவட்டம், TNPL UNIT-II-ல், கொதிகலனில் உள்ள COAL NOZZLE சுத்தம் செய்தல் மற்றும் உட்புற சாம்பலை இறக்கி சுத்தம் செய்தல். | 14.03.2020 |

முழுமையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், ஒப்பந்தப்புள்ளி கட்டணம் மற்றும் பிணைவைப்புத் தொகை ஆகிய அனைத்து இதர விவரங்களையும் www.tenders.tn.gov.in & www.tnpl.com ஆகிய இணையதளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்து தெரிந்து கொள்ளலாம்.
செ.ம.தொ.இ/ 1131 /ஒப்பந்தப்புள்ளி/2020
நாட்டின் இயற்கைவளம் போற்றும் காகிதம் செய்வோம்

# காலாவதியான சுங்கச்சாவடிகளை மூடாவிட்டால் வேலைநிறுத்தம்

● தென் மண்டல மோட்டார் டிரான்ஸ்போர்ட் நலச்சங்கம் தீர்மானம்

■ பூந்தமல்லி

தென் மாநிலங்களில் காலாவதியான சுங்கச்சாவடிகளை மூடாவிட்டால் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தப்படும் என, தென் மண்டல மோட்டார் டிரான்ஸ்போர்ட் நலச்சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தென் மண்டல மோட்டார் டிரான்ஸ்போர்ட் நலச்சங்கத்தின் 26-வது நிர்வாகக் குழு கூட்டம் நேற்று முன்தினம், வேலப்பன்சாவடியில் நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் கோபால், பொதுச் செயலாளர் சண்முகப்பா, பாண்டிச்சேரி மாநிலத் தலைவர் செந்தில்குமார், தெலங்கானா மாநிலத் தலைவர் பாஸ்கர் ரெட்டி, கேரள மாநிலத் தலைவர் ஹம்சா, தமிழக லாரி உரிமையாளர் சங்கத் தலைவர் குமாரசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

▼ பல இடங்களில் 4 வழிச் சாலைகளை 6 வழிச் சாலைகளாக மாற்றும் பணி முடிவடையாத நிலையில் சுங்கக் கட்டணம் வசூலிப்பதை தவிர்க்க வேண்டும்.

இந்தக் கூட்டத்தில், “தென் மாநிலங்களில் உள்ள 112 சுங்கச் சாவடிகளில், பெரும்பாலானவற்றில் 10 ஆண்டுகளுக்கு மேலாக சுங்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, தென் மாநிலங்களில் காலாவதியான அனைத்து சுங்கச்சாவடிகளையும் மத்திய அரசு மூடவேண்டும். அவ்வாறு மூடாவிட்டால் தென் மண்டல மோட்டார் டிரான்ஸ்போர்ட் நலச்சங்கம் சார்பில் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தப்படும்.

நெடுஞ்சாலைகளில் பெருகிவரும் விபத்துகளை தவிர்க்க மத்திய, மாநில அரசுகள் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தேசிய நெடுஞ்சாலைகளில் ஓட்டுநர்கள் ஓய்வு எடுக்கும் இடங்களை அதிகரிக்க வேண்டும். மாநில எல்லைகளில் உள்ள சோதனைச் சாவடிகளை அகற்ற வேண்டும். டீசல் விலையை 3 மாதங்களுக்கு ஒருமுறை நிர்ணயிக்க வேண்டும்.

பல இடங்களில் 4 வழிச்சாலைகளை 6 வழிச் சாலைகளாக மாற்றும் பணி முடிவடையாத நிலையில் சுங்கக் கட்டணம் வசூலிப்பதை தவிர்க்க வேண்டும்” என தென் மண்டல மோட்டார் டிரான்ஸ்போர்ட் நலச்சங்க நிர்வாகக் குழு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

NEW PRINCE
SHRI BHAVANI VIDYASHRAM
Affiliated to CBSE, New Delhi : Affi. No.: 1930858
No.18, South Sector, 2nd Street, Adambakkam, Chennai - 600 088.
cordially invite you for
ANNUAL DAY CELEBRATIONS
on Saturday the 29th February, 2020 at 5.00 p.m. in our School Premises
Dr. V. IRAI ANBU, I.A.S.
Additional Chief Secretary and Director General (Training), Anna Institute of Management, Govt. of Tamil Nadu
has kindly consented to distribute the General Proficiency Prizes and deliver the Annual Day Address
Dr. DJE RAVITHILAGAN
Metaphor Artiste & HR Consultant, Chennai
has kindly accepted to preside over the function
Thiru. K.LOGANATHAN, M.Com.,M.Ed., Correspondent
Tmt. L. ARCHANA, M.E.,M.A., Vice - Chairman
Tmt. V.S. MAHALAKSHMI, M.Com.,M.Ed.,M.Phil., Principal
Thiru. L. NAVEEN PRASAD, B.E.,M.B.A.,M.Sc.(UK) Vice - Chairman





▲ பருவமழை கைகொடுக்காத நிலையில், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கு வரப் பிரசாதமாக அமைந்திருப்பவை இங்குள்ள குவாரிகள். சிக்கராயபுரம், அனகாபுத்தூர், பம்மல் போன்ற குவாரி பள்ளங்களில் தேங்கும் நீர், வறட்சியின்போது சுத்திகரிக்கப்பட்டு குடிநீராக சென்னை மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு அளவுக்கு இல்லாவிட்டாலும், தற்போதும் இந்த குவாரி பள்ளங்களில் ஓரளவு நீர் தேங்கியுள்ளது. தனித்தனியே சேகரித்து சுத்திகரிப்பதற்கு பதிலாக, வாய்ப்பு உள்ள குவாரி பள்ளங்களை ஒன்றோடு ஒன்று இணைத்து, அடையாறு ஆற்றின் உபரி நீரையும் திருப்பிவிட்டால், மிகப்பெரிய நீர்த்தேக்கமாக பயன்படுத்தலாம் என்ற கருத்து மக்கள் மத்தியில் உள்ளது. படங்கள்: எம்.முத்துகணேஷ்

## ஒழுங்கு நடவடிக்கை: ஆசிரியர்கள் விவரம் சேகரிப்பு

■ சென்னை

தொடக்கக் கல்வி இயக்குநரகம் சார்பில் அனைத்து வட்டாரக் கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை விவரம்: அரசு தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு முறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் 17-பி விதியின்படி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டவர்கள் பெயர், விவரம், விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்ட விவரம், விசாரணை அறிக்கை பெறப்பட்ட விவரம் மற்றும் இறுதி ஆணை வழங்கப்பட்ட விவரங்களை அந்தந்த வட்டாரக்கல்வி அதிகாரிகள் தயாரித்து மார்ச் 2-ம் தேதிக்குள் துறை இயக்குநரகத்துக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ஈரானில் கோவிட்-19 காய்ச்சல் அச்சம்

## 800 தமிழக மீனவர்களை மீட்க அரசுக்கு டி.ஆர்.பாலு கடிதம்

■ சென்னை

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

சீனா மற்றும் கொரியாவைத் தொடர்ந்து ஈரானிலும் கோவிட்-19 காய்ச்சல் பரவி வருகிறது. இதைத் தொடர்ந்து பெரும்பாலான வளைகுடா நாடுகளில் விமான சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. எனவே, ஈரான் மற்றும் அருகில் உள்ள கிஸ், அசாலுயே, காம்கு மற்றும் ஸ்ட்ராக் போன்ற தீவுகளில் 800-க்கும் மேற்பட்ட கன்னியாகுமரி மற்றும் மதுரை மாவட்ட மீனவர்கள் தங்கி பணியாற்றி வருகின்றனர். அவர்களின் உயிரையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்கும் வகையில், சீனாவின் வூகான் மற்றும் யோகோகாமா நகரில் இருந்து, இந்தியர்களை மீட்டதைப் போல, தமிழக மீனவர்களை மீட்க போர்க்கால அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

## 317 டன் பிளாஸ்டிக் பறிமுதல்

● சென்னை மாநகராட்சி நடவடிக்கை

■ சென்னை

தமிழக அரசு அறிவிப்பைத் தொடர்ந்து சென்னை மாநகராட்சியில் கடந்த ஆண்டு ஜனவரி 1-ம் தேதி முதல், 14 வகையான பிளாஸ்டிக் பொருட்கள் மீதான தடை அமல்படுத்தப்பட்டு வருகிறது.

விதிகளை மீறி பயன்படுத்தும் கடைகளில் பிளாஸ்டிக் பொருட்களை பறிமுதல் செய்வதுடன், அந்த கடைகளுக்கு அபராதமும் விதிக்கப்பட்டு வருகிறது.

அதன்படி சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட அனைத்து மண்டலங்களிலும், இதுநாள் வரை 4.40 லட்சம் கடைகளில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. விதிமீறிய கடைகளிடம் இருந்து ரூ.1.27 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 317 டன் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக சென்னை மாநகராட்சி செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

போலி ஆவணம் மூலம் நில விற்பனையை தடுக்க

## பத்திரப் பதிவுக்கு முன்னரே உட்பிரிவுகளுக்கு ஒப்புதல்

● முதல்கட்டமாக கிருஷ்ணகிரி, பெரம்பலூரில் அறிமுகம்

■ சென்னை

போலி ஆவணங்கள் மூலம் நிலங்கள் பதியப்படுவதை தடுக்க, பத்திரப் பதிவுக்கு முன்னரே உட்பிரிவுகளுக்கு ஒப்புதல் பெறும் புதிய நடைமுறையை கிருஷ்ணகிரி, பெரம்பலூரில் முதல்கட்டமாக வருவாய்த் துறை அறிமுகப்படுத்தியுள்ளது.

சட்டப்பேரவையில் கடந்த ஆண்டு வருவாய்த் துறை மானிய கோரிக்கையின்போது அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் வெளியிட்ட அறிவிப்பில், "போலியான ஆவணங்களை பயன்படுத்தி நிலங்கள் பத்திரப்பதிவு செய்யப்படுவதை தடுக்க, பத்திரப்பதிவுக்கு முன்னதாகவே உட்பிரிவுகளை அங்கீகாரம் செய்யும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படும். இந்த நடைமுறையின்கீழ் நிலங்களை விற்பவர்கள் அது சார்ந்த வட்ட அலுவலகங்களுக்கு சென்று, தான் விற்க விரும்பும் நிலம், சொத்துகளின் சான்றளிக்கப்பட்ட நகலை விண்ணப்பித்து பெற வேண்டும்.

இதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டதும் வட்ட அலுவலகங்களில் உள்ள நில அளவை பணியாளர்கள் விசாரணை மேற்கொள்வார்கள். அதன்பின் ஒப்புதல் அளிக்கப்பட்ட உட்பிரிவு ஆவணங்கள், இணையதளவழியில் தொடர்புடைய சார் பதிவகம் மற்றும் நில உரிமையாளருக்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னரே, நில உரிமையாளர் தனது நில பரிவர்த்தனையை சார்பதிவகம் மூலம் மேற்கொள்ள முடியும். அதன்பின் இணையதள வழி பட்டா மாறுதல் விவரங்கள், மீண்டும் புலத் தணிக்கை ஏதுமின்றி தொடர்புடைய ஆவணங்களில் பதிவு செய்யப்படும்' என்று அறிவித்திருந்தார்.

இதற்கான நடைமுறைகள் வகுக்கப்பட்டு, வருவாய்த்துறையில் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது:

கிராமப்பகுதிகளில் நிலங்களை விற்க விரும்பும் உரிமையாளர்கள், தங்கள் நிலத்துக்கு ஆன்லைன் பட்டா பெறாமல் இருந்தால், முதலில் ஆன்லைனில் நிலங்கள் குறித்த சான்றளிக்கப்பட்ட புலப்பட நகலுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இதற்காக கிராமப்பகுதிகளில் 2 ஏக்கர் வரை ஒரு உட்பிரிவுக்கு ரூ.1000 அதன்பின் ஒவ்வொரு கூடுதல் ஏக்கருக்கும் ரூ.500 கட்டணம் செலுத்த வேண்டும். நகர்ப்புறங்களில் ஒரு கிரவுண்டு அதாவது 2400 சதுரடி வரை ரூ.1000 செலுத்த வேண்டும். அதற்கு மேல் இடத்தைப் பொறுத்து கட்டணத்தொகை அதிகரிக்கும்.

இதற்கான விண்ணப்பம் பெறப்பட்ட 30 நாட்களுக்குள் புலப்படம் வழங்கப்படும். விண்ணப்பம் ஏற்கப்படாவிட்டால் 30 நாட்களுக்குள் தள்ளுபடி செய்யப்படும். முன்னுரிமை அடிப்படையிலான விண்ணப்பங்களுக்கு ரூ.2 ஆயிரம் அடிப்படை கட்டணமாக வசூலிக்கப்படும். நிலத்தின் அளவை பொறுத்து கட்டணம் பல மடங்காகும். இந்த விண்ணப்பங்களுக்கு 10 நாட்களில் புலப்படம் வழங்கப்படும். இந்த திட்டம் சோதனை அடிப்படையில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர், சூளகிரி தாலுகாக்கள், பெரம்பலூர் மாவட்டத்தில் பெரம்பலூர், ஆலத்தூர் தாலுகாக்களில் அறிமுகப்படுத்தப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

திருவொற்றியூர் திமுக எம்எல்ஏ

## கே.பி.பி.சாமி உடல் தகனம்

● இறுதி ஊர்வலத்தில் ஸ்டாலின் பங்கேற்பு

■ சென்னை

திமுக மீனவரணிச் செயலாளரும், திருவொற்றியூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினருமான கே.பி.பி.சாமி (57) உடல்நலக் குறைவால் நேற்று முன்தினம் காலமானார். திருவொற்றியூர் கே.வி.கே. குப்பத்தில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு ஆயிரக்கணக்கான திமுகவினரும், பொது மக்களும் அஞ்சலி செலுத்தினர்.

கே.பி.பி.சாமியின் உடல் நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு திறந்த வாகனத்தில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு திருவொற்றியூர் பட்டினத்தார் கோயில் தெரு அருகே உள்ள மாநகராட்சி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. சுமார் 3 கி.மீ. தூரம் நடந்த இறுதி ஊர்வலத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் நடந்து வந்தார்.

திமுக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு, எம்.பி. கலாநிதி வீராசாமி, எம்எல்ஏக்கள் சேகர்பாபு, வி.ஜி.ராஜேந்திரன், மாதவரம் சுதர்சனம் மற்றும் ஆயிரக்கணக்கான திமுக தொண்டர்கள் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றனர்.



▲ திருவொற்றியூர் திமுக எம்எல்ஏ, கே.பி.பி. சாமியின் இறுதி ஊர்வலத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா, முன்னாள் தமிழக அமைச்சர் எ.வ.வேலு உள்ளிட்டோர் சுமார் 3 கி.மீ., தூரம் நடந்து சென்று இறுதி அஞ்சலி செலுத்தினர்.



▲ தினமலர் நாளிதழின் பங்குதாரர் மறைந்த ஆர்.ராகவனின் மனைவி சுப்புலட்சுமியின் உடலுக்கு நேற்று அஞ்சலி செலுத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் என்.நடராஜன். உடன் தினமலர் திருச்சி, வேலூர் பதிப்புகளின் ஆசிரியர் ஆர்.ராமசுப்பு, அதிமுக மாநகர் மாவட்டச் செயலாளர் ப.குமார் உள்ளிட்டோர்.

## தினமலர் பங்குதாரர் ஆர்.ராகவனின் மனைவி சுப்புலட்சுமி உடல் தகனம்

● அமைச்சர்கள், அரசியல் கட்சியினர் அஞ்சலி

■ திருச்சி

தினமலர் நாளிதழின் பங்குதாரர் மறைந்த ஆர்.ராகவனின் மனைவி சுப்புலட்சுமியின் உடல் நேற்று மாலை திருச்சி கொள்ளிடக்கரையில் தகனம் செய்யப்பட்டது.

தினமலர் பங்குதாரர் மறைந்த ஆர்.ராகவனின் மனைவி சுப்புலட்சுமி (77). இவர்களின் மகன்கள் தினமலர் நாளிதழின் திருச்சி, வேலூர் பதிப்புகளின் ஆசிரியர் ஆர்.ராமசுப்பு, வெளியீட்டாளர் ஆர்.ஆர். கோபால்ஜி.

திருச்சியில் வசித்து வந்த சுப்புலட்சுமி நேற்று முன்தினம் மதியம் உடல்நலக் குறைவால் காலமானார். இறுதிச்சடங்குகள், நேற்று மாலை 3 மணிக்கு திருச்சி கன்டோன்மென்ட், பேர்ட்ஸ் ரோடு இல்லத்தில் நடைபெற்றது.

தொடர்ந்து, இறுதி ஊர்வலம் 3.30 மணிக்கு புறப்பட்டு, ஸ்ரீரங்கம் கொள்ளிடக்கரையில் திருமங்கை மன்னன் படித்துறையில் இறுதிச் சடங்குகள் செய்யப்பட்டு, உடல் தகனம் செய்யப்பட்டது.

முன்னதாக, மறைந்த சுப்புலட்சுமியின் உடலுக்கு, தமிழக அமைச்சர்கள் செல்லூர் ராஜூ, என்.நடராஜன், சி.விஜயபாஸ்கர், ஆர்.காமராஜ், எஸ்.வளர்மதி, அதிமுக மாநகர் மாவட்டச் செயலாளர் ப.குமார், தேமுதிக பொருளாளர் பிரேமலதா, திமுக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, திருச்சி என்.சிவா எம்.பி., திமுக எம்.எல்.ஏக்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, எஸ்.ரகுபதி,

பாஜக தேசியச் செயலாளர் எச்.ராஜா, அமமுக பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன், மாநகர காவல் ஆணையர் வி. வரதராஜு, மத்திய மண்டல காவல் துறை ஐஜி அ.அமல்ராஜ், டிஐஜி பாலகிருஷ்ணன், வணிகர் சங்கங்களின் பேரமைப்புத் தலைவர் விக்கிரமராஜா உள்ளிட்ட அனைத்துக் கட்சி நிர்வாகிகள், அரசு அலுவலர்கள், கல்வி நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

கடன் தராததால் விபரீத விளையாட்டு

## கோழி இறைச்சியில் கரோனா வைரஸ் இருப்பதாக வாட்ஸ் அப்பில் வதந்தி

● நெய்வேலியில் சிறுவன் சிக்கினான்

■ கடலூர்

இறைச்சிக் கடையில் தனக்கு கடன் தராத ஆத்திரத்தில், கோழி இறைச்சியில் கரோனா வைரஸ் பரவி வருவதாக வாட்ஸ்அப்பில் வதந்தி பரப்பிய சிறுவன் போலீஸாரிடம் சிக்கினான்.

நெய்வேலியில் கோழி இறைச்சிக் கடை ஒன்றில், இறைச்சி வாங்கி சாப்பிட்ட ஒருவர் வயிற்று வலியால் பாதிக்கப்பட்டு, என்எல்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலும், அவர் கூடுதல் சிகிச்சைக்காக கடலூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவருக்கு கரோனா வைரஸ் தொற்றி, அவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் கடந்த இரு நாட்களாக வாட்ஸ் அப்பில் தகவல் வைரலாக பரவி வந்தது.

குறிப்பிட்ட இறைச்சிக் கடையின் பெயரும் அந்த போலித் தகவலில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த போலித் தகவல் கடலூர் மாவட்டத்தில் பரவலாக பகிரப்பட, மக்கள் மத்தியில் பீதி கிளம்பியது.

இந்தத் தகவலால் மன ரீதியாகவும், வணிக ரீதியாகவும் பாதிக்கப்பட்ட இறைச்சிக் கடை உரிமையாளர் நெய்வேலி தெர்மல் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். காவல் துறையினர் நடத்திய விசாரணையில், நெய்வேலி வட்டம் 21-ஐ சேர்ந்த 17 வயதுடைய சிறுவன், இந்த இறைச்சிக் கடையில் அடிக்கடி கோழி இறைச்சி வாங்கி வந்தது தெரியவந்தது.

அச்சிறுவன் பழையக் கடனைத் தராமல், கடை உரிமையாளரிடம் தகராறு செய்து வந்துள்ளார். இதனால் ஏற்பட்ட கோபத்தில் இறைச்சிக் கடை மீது அவப்பெயர் ஏற்படுத்த வாட்ஸ்அப்பில் இந்த வதந்தியை பரவ விட்டிருப்பது தெரியவந்தது.

இதையடுத்து, நெய்வேலி தெர்மல் காவல் நிலையத்தினர், அந்த நபர் மீது தவறான தகவலைப் பரப்புதல் மற்றும் பொது அமைதிக்குக் குந்தகம் விளைவித்தல் உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து கடந்த 2 தினங்களுக்கு முன்புகைது செய்தனர். அந்த நபருக்கு 17 வயதே ஆவதால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, கடலூர் கூர்நோக்கு இல்லத்தில் அடைக்கப்பட்டார்.

இதற்கிடையே தவறான முறையில் வதந்தி பரப்பிய அந்தச் சிறுவன், தான் தவறான தகவல் பரப்பியதாகவும் தான் கூறிய தகவல் தவறு என்றும் கூறும் மற்றொரு புதிய வீடியோ வாட்ஸ் அப்பில் வலம் வரத் தொடங்கியிருக்கிறது.



▶▶ பாரத ஸ்டேட் வங்கியின் சென்னை வட்டாரம் சார்பில் கல்லூரி மாணவர்களுக்கான 'எஸ்பிஐ நியுமெரோ யோனோ விநாடி வினா போட்டி' நடத்தப்பட்டது. குழுவுக்கு 3 பங்கேற்பாளர்கள் கொண்ட 100 குழுக்கள் இதில் பங்கேற்றன. இதில் சென்னை ஐஐடி குழு முதலிடமும், சென்னை கிறிஸ்தவக் கல்லூரி 2-ம் இடமும், சவீதா மருத்துவக் கல்லூரி அணி 3-ம் இடமும் பெற்றன. போட்டியை வங்கியின் பொது மேலாளர் பி.சங்கர் தொடங்கி வைத்தார். மற்றொரு பொது மேலாளர் ஷிர்லி தாமஸ் வெற்றியாளர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

## குடும்பத் தகராறில் இளைஞர் கொலை

■ சென்னை

சென்னை, கொடுங்கையூர் இந்திரா நகரைச் சேர்ந்தவர் சந்துரு. இவரது மனைவி தாரணி கணவரை பிரிந்து, வியாசர்பாடியைச் சேர்ந்த வேறு ஒருவருடன் தனியாக வசித்து வந்தார்.

தாரணியிடம் தான் ஏற்கனவே வாங்கித் தந்த தங்க நகைகளை திருப்பித் தருமாறு சந்துரு கேட்டு வந்தார். ஆனால் தாரணி, அதை வழங்காமல் இழுத்தடித்து வந்தாராம். இதையடுத்து சந்துருவின் சகோதரர் தயாளன் நேற்று முன்தினம் தாரணி வீட்டுக்குச் சென்று நகைகளை கேட்டுள்ளார். இதில் தகராறு முற்றிய நிலையில் தாரணி குடும்பத்தினர், தயாளனை கத்தியால் தாக்கியுள்ளனர். இதில் அவர் உயிரிழந்துள்ளார்.

இதுகுறித்து கொடுங்கையூர் காவல்நிலைய போலீஸார் வழக்குப் பதிவு செய்து, தாரணியின் தந்தை சுகுமார், அவரது உறவினர்கள் தனுஷ், திருமலை, வினோத், சுரேஷ் ஆகிய 5 பேரை நேற்று கைது செய்தனர்.

**DISTRICT COLLECTOR**
**CHENGALPATTU**
Phone: 044-27427413, 27427417 | E-mail: collr-cpt@gov.in

Rc.No.1721/2020/D3 **TENDER NOTICE** Date: 26.02.2020

Tenders are invited by District Collector, Chengalpattu for supply, installation, integration and commissioning of Data Cabling, Telephone Networking, CCTV, Antivirus, Firewall, Bio Metric Device and Server at Chengalpattu Collectorate Building. The Tender document is available in the Office of District Collector, Chengalpattu. The last date for submission of Tender is **16.03.2020 at 3.00 P.M.**

**DISTRICT COLLECTOR**
**CHENGALPATTU**

வெ.ஆ.எண்.032/செ.ம.தொ.அ./2020, காஞ்சி

வரி விளம்பரங்கள்

பொது

சுற்றுலா

தினசரி திருப்பதி/ ஷிரடி தர்சன் Kerala, Goa, Singapore Packages. Sri Balaji 9884053380

பொது அறிவிப்பு

பொது அறிவிப்பு

நான், சென்னை மாவட்டம், அம்பத்தூர் கிராமம், சென்னை-101, அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம், ஆபிசர்ஸ் காலனி, டிவிஎஸ் காலனி மேற்கு, தற்போது பிங்க் அவன்யூ, பிளாட் எண்.7A, சர்வே எண்.127/2A, 127/3A, மற்றும் 154/1A, மற்றும் பட்டா எண்.139/2, பிளாக் எண். 8 முகப்பேர் கிராமம், அம்பத்தூர் தாலுக்காவில் அடங்கிய 2125சஅடி கொண்ட மனை அதில் அடங்கிய கட்டிடம் அதன் தற்போதைய உரிமையாளரிடமிருந்து வாங்குவதாக உத்தேசித்துள்ளேன். உரிமையாளர் கீழ்காணும் தனது சொத்தினை எவ்வித வில்லங்கத்திற்கு உட்படுத்தாமல் ஆண்டு அனுபவித்துக்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

கீழ்காணும் சொத்தில் மேற்படி, அதன் தற்போதைய உரிமையாளர் தவிர வேறு எவரேனும் சொத்தினை குறித்தோ அல்லது அதில் ஏதேனும் ஒரு பகுதியை குறித்தோ எவ்விதத் திலேயும் உரிமை கொண்டாடினாலும், விக்கிரையம் குறித்து ஏதேனும் ஆட்சேபணையோ, சொத்து அடமானமோ, பகுதி அடமானமோ, சொத்து குறித்து வேறு ஏதேனும் ஒப்பந்தங்களோ இருப்பின் அவர்களது உரிமை கோரும் ஆவணங்களோடு, இந்த அறிவிப்பு தேதியிலியிருந்து 7 நாட்களுக்குள் கீழே குறிப்பிட்டுள்ள எனக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என இந்த அறிவிப்பின் மூலமாக கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவரும் உரிமை கோராத பட்சத்தில் கீழ்காணும் சொத்தில் எந்த ஒரு வில்லங்கமோ, உரிமையோ, அக்கு பாத்தியதையோ தற்போதைய உரிமையாளரை தவிர வேறு எவருக்கும் உரிமை இல்லை என்று கருதப்பட்டு இச்சொத்தினை வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதன்பின் வரும் முறையீடுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

திரு. மகேஷ் ராமலிங்கம்,
எண்.3து 120,கிரிஸ்டல் ஜாஸ்பர்,
ஓசா ரோடு, கசவனஅல்லி,
பெங்களூர் - 35, கர்நாடக மாநிலம்.,
98459 71792
maheshramaling@gmail.com

பொது

சுற்றுலா

6 நாள் ஷீரடி-மார்ச் 8, 22, 29 பண்டரிபுரம், மந்திராலயம் ஏப். 5,12, 19, 26, மே 3, 10, 17, 24, 31
8 நாள் காசி,கயா-மார்ச் 16,30 அலகாபாத்,- ஏப்.6,13,20,27, மே 4,11,18,25
11 நாள் காசி, கயா-மார்ச் 20 டெல்லி, ஆக்ரா, அவுரா - ஏப். 17, மே 1, 11, 22
16 நாள் காசி,அயோத்தி-ஏப். 24
16 நாள் நேபாள், முக்திநாத், காசி ஏப். 19, மே 3,10,17,24, ஜுன் 14
14 நாள் நவஜோதிலிங்கம்-ஏப்.12
15 பஞ்சதுவாரகா-மார்ச் 10
7 நாள் கேரளா படகு வீடு - மே 18
11 நாள் கேங்டாக், டார்ஜிலிங் ஏப். 8, 15, 22, 29, மே 6, 13, 20, 27
14 நாள் சிம்லா, குளுமணாலி
14 நாள் காஷ்மீர்-மே 5, 14, 23
16 பத்ரிநாத், கேதார்நாத் கங்கோத்ரி, யமுனோத்ரி மே 3, 12, 18, 27, ஜுன் 2, 11
9 நாள் இலங்கை 4 நாள் கோவா
SRINIVASA TOUR
9710025326

பொது அறிவிப்பு

PUBLIC NOTICE

Our clients, M/s. Aspinwall and Company Limited, having their Office at Wavoo Mansion, 5th Floor, No. 48, RajajiSalai, Chennai – 600 001, are interested in buying the properties as per the below mentioned Schedule. If anyone has any claim or objection to the sale, you are required to submit the same to the undersigned within 10 days from the date of this Publication, failing which our clients will presume that there are no objections and will proceed to complete the sale.

SCHEDULE

1) All that piece and parcel of Punjai Land admeasuring 21 Cents out of 43 Cents comprised in Survey No. 211/4B bearing No. 165, Venpakkam Village, Walajabad Sub - Registration District, Kancheepuram Circle, Kancheepuram District.

2) All that piece and parcel of Punjai Land admeasuring 22 Cents out of 44 Cents comprised in Survey No. 211/4A bearing No. 165, Venpakkam Village, Walajabad Sub - Registration District, Kancheepuram Circle, Kancheepuram District.

M/s. S.Vasudevan
K.Krishnaswamy
Advocates
New No.16, Old No. 32,1st Floor, Errabalu Chetty Street, Chennai – 600 001.
Contact: 044 25223898, 044 25225096, 044 42163532 and 044 25231979
E-Mail: vkalaw@gmail.com

# பொதுத்தேர்வில் காப்பி அடித்தால் 2 ஆண்டுகள் தேர்வெழுத தடை

## ● மாணவர்களுக்கு அரசு தேர்வுத் துறை எச்சரிக்கை

■ **சென்னை**

10, 11, 12-ம் வகுப்பு பொதுத் தேர்வில் காப்பி அடித்தாலோ, காப்பி அடிக்க முயன்றாலோ 2 ஆண்டுகள் தேர்வெழுத தடை விதிக்கப்படும் என அரசு தேர்வுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பிளஸ்-2 பொதுத்தேர்வு மார்ச் 2-ம் தேதியும், பிளஸ்-1 பொதுத்தேர்வு மார்ச் 4-ம் தேதியும் எஸ்எஸ்எல்சி பொதுத்தேர்வு மார்ச் 27-ம் தேதியும் தொடங்க உள்ளன. இந்நிலையில், பொதுத்தேர்வில் மாணவர்கள் காப்பி அடித்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு தேர்வுத் துறை எச்சரித்துள்ளது. இதுதொடர்பாக அரசுத்தேர்வுகள் இயக்குநர் சி.உஷாராணி நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதவது:

பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களிடம் பாடம் தொடர்புடைய துண்டுச் சீட்டுகள், நோட்டுகள், புத்தகங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அந்த மாணவரிடம் எழுத்துப்பூர்வமான விளக்கம் பெற்று உடனடியாக அவர் தேர்வுக்கூடத்தை விட்டு வெளியேற்றப்படுவார். தேர்வுக்கூடத்தில் பக்கத்தில் அமர்ந்திருக்கும் மாணவரின் விடைத்தாளைப் பார்த்து காப்பி அடிப்பது கண்டுபிடிக்கப்பட்டாலும் அவர் உடனடியாக வெளியேற்றப்படுவார். அவர் ஓராண்டுக்கு தேர்வெழுத முடியாது.

### ஆள்மாறாட்டம்

அதேபோல், ஒரு மாணவர் காப்பி அடிக்கும்போதோ அல்லது காப்பி அடிக்க முயலும்போதோ பிடிபட்டால் அவர் அடுத்த 2 ஆண்டுகள் தேர்வெழுத தடை விதிக்கப்படும்.

ஆள்மாறாட்டம் செய்தால் அவரது தேர்வு பங்கேற்பு ரத்து செய்யப்படுவதுடன், தேர்வெழுத வாழ்நாள் தடை விதிக்கப்படும். விடைத்தாள்களில் ஒரு தாளுக்குப் பதில் வேறு விடைத்தாளை இணைத்தால் தேர்வு பங்கேற்பு ரத்து செய்யப்படும். மேலும், குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு தேர்வெழுத முடியாது. விடைத்தாளில் அநாகரீகமாக ஏதேனும் எழுதியிருந்தாலோ அல்லது தேர்ச்சி மதிப்பெண் வழங்குமாறு கோரி ஏதேனும் குறிப்பிட்டிருந்தாலோ அந்த விடைத்தாள் ரத்து செய்யப்படும்.

தேர்வுக்கூட கண்காணிப்பாளரிடம் தவறாக நடந்தால் அந்த மாணவர் தேர்வுக்கூடத்தை விட்டு உடனடியாக வெளியேற்றப்படுவார். தேர்வு முடிந்ததும் மற்ற மாணவர்கள் மீது வினாத்தாளை வீசும் மாணவரின் விடைத்தாள் ரத்து செய்யப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

17,500 மெகாவாட் அளவுக்கு மின் உற்பத்தி உயரும்

# தமிழகத்தில் கோடை காலத்தில் மின்வெட்டு வராது

## ● மின் துறை அமைச்சர் தங்கமணி உறுதி

■ **சென்னை**

தமிழகத்தில் வரும் கோடையில் மின்வெட்டு ஏற்படுவதற்கான வாய்ப்பே கிடையாது என மின்துறை அமைச்சர் தங்கமணி உறுதியாக தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின்னுற்பத்தியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, மத்திய அரசு மின்கட்டமைப்புக் கழகம் மூலம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேலாண்மை மையங்களை 7 மாநிலங்களில் அமைத்துள்ளது.

இதன்படி, தமிழகத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேலாண்மை மையம், மாநில மின்பகுப்பு மையம் மத்திய அரசின் நிதியுதவியுடன் ரூ.49 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதை மத்திய எரிசக்தி துறை அமைச்சர் ஆர்.கே.சிங் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற மின்துறை அமைச்சர் தங்கமணி பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இந்த மையம் திறக்கப்பட்டுள்ளதன் மூலம் காற்றாலை, சூரியசக்தி மூலம் கிடைக்கும் மின்சாரத்தைக் கணக்கிட்டு அதற்கேற்ற வகையில், அனல்மின் நிலையங்களில் உற்பத்தி மேற்கொள்ள முடியும். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் 37,608 மெகாவாட் அளவுக்கு மின்சாரம் கிடைக்கிறது. இதில், தமிழகத்தின் பங்களிப்பு 43 சதவீதம் உள்ளது.

### கமுதியில் அமைகிறது

நாட்டிலேயே தமிழகத்தில்தான் அதிகளவு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி செய்யப்படுகிறது. சூரிய சக்தி மூலம் 4 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் கிடைக்கிறது. தமிழகத்தில் காற்றாலை, சூரியசக்தி மின்சாரம் அதிகளவு பயன்படுத்தப்பட்டு வருகிறது. கடலாடியில் 500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக தேர்வு செய்யப்பட்ட



இடத்தில் சில பிரச்சினைகள் உள்ளதால் கமுதியில் அமைக்கப்படும். இதுதொடர்பாக நாளிதழ்களில் வெளியான செய்தி தவறானது.

தமிழகத்தின் தற்போதைய மின்தேவை தற்போதை 15 ஆயிரம் மெகாவாட் அளவுக்கு உள்ளது. வரும் கோடையில் 17,500 மெகாவாட் அளவுக்கு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அளவுக்கு மின்னுற்பத்தி மேற்கொள்ளப்படும். எனவே, தமிழகத்தில் கோடைக்காலத்தில் மின்வெட்டு பிரச்சினை வருவதற்கு சாத்தியமே கிடையாது.

நுகர்வோருக்கு தற்போது வழங்கப்படும் 100 யூனிட் இலவச மின்சாரம் ரத்து என்றபேச்சுக்கும் இடமில்லை. தமிழகத்தில் சில அனல்மின் நிலையங்களை வரும் 2022-ம் ஆண்டுக்குள் மூடிவிடுமாறு மத்திய மின்சார ஆணையம் உத்தரவிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

உண்மையில், சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு இல்லாத வகையில், அந்த அனல்மின் நிலையங்களில் சில உபகரணங்களை வைக்குமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

அந்த உபகரணங்கள் அமைக்கப்பட்டு அந்த மின்நிலையங்கள் தொடர்ந்து செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கேங்மேன் பணிக்கு எழுத்துத் தேர்வு இன்னும் 20 நாட்களுக்குள் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அமைச்சர் தங்கமணி கூறினார்.





▲ எல்.ஐ.சி. உடன் இணைந்து இந்தோ ரஷ்யன் சேம்பர் ஆஃப் காமர்ஸ் அன்ட் இண்டஸ்ட்ரீஸ் மற்றும் 'இந்து தமிழ் திசை' நாளிதழ் நடத்திய 'அறிவியல் விநாடி வினா – 2020' இரண்டாம் கட்டப் போட்டியில் பங்கேற்ற குழுக்களுடன் எல்ஜசி உதவி கிளை மேலாளர் ஐ.செந்தில், AMW VACAY சீஇஓ அருண் பிரசாத், 'இந்து தமிழ்' வர்த்தகப் பிரிவுத் தலைவர் சங்கர் வி.சுப்ரமணியன், ரஷ்ய தூதர் அலெக் அவ்தேவ் நிக்கோலியேவிச், இந்தோ ரஷ்யன் சேம்பர் ஆஃப் காமர்ஸ் பொதுச்செயலாளர் பி.தங்கப்பன், குவிஸ் மாஸ்டர் அரவிந்த் ராஜீவ் ஆகியோர். (அடுத்த படம்) மாணவர்களிடம் விநாடி வினா போட்டி நடத்துகிறார் குவிஸ் மாஸ்டர் அரவிந்த் ராஜீவ். படங்கள்: க.ஸ்ரீபரத்

# உணவக ஊழியர்களுக்கு பயிற்சி

■ **சென்னை**

அம்மா உணவக ஊழியர்களுக்கு உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் பயிற்சி அளித்தனர்.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 407 அம்மா உணவகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில், இங்கு விற்பனை செய்யப்படும் உணவுகள் தரமானதாக இருப்பதை உறுதி செய்ய உணவு பாதுகாப்பு துறையின் மூலம் நேற்று முன்தினம் முதல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

சென்னை ரிப்பன் மாளிகையில் நேற்று முன்தினம் 200 அம்மா உணவக ஊழியர்களுக்கும், நேற்று 200 அம்மா உணவக ஊழியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியில், உணவுகள் தயாரிப்பதற்கு பயன்படுத்தும் பொருட்களை வாங்கும்போது காலாவதி தேதியை பார்த்து வாங்குவதன் அவசியம், உணவு சமைக்கும் இடத்தினை சுகாதாரமாக வைத்திருப்பது, உணவு சமைத்த பிறகு பாதுகாப்பாக மூடி வைப்பது, உணவு பரிமாறும்போது எத்தகைய பாதுகாப்பு விஷயங்களை மேற்கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்டவை குறித்து அம்மா உணவக ஊழியர்களுக்கு உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

'அறிவியல் விநாடி வினா - 2020'

# இறுதிச்சுற்று போட்டிக்கு 3 பள்ளிகள் தேர்வு

■ **சென்னை**

எல்.ஐ.சி. உடன் இணைந்து இந்தோ ரஷ்யன் சேம்பர் ஆஃப் காமர்ஸ் அன்ட் இண்டஸ்ட்ரீஸ் மற்றும் 'இந்து தமிழ் திசை' நாளிதழ் நடத்திய 'அறிவியல் விநாடி வினா-2020' போட்டியில் இறுதிச்சுற்றுக்கு 3 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டன.

சென்னை ஆழ்வார்பேட்டை கஸ்தூரி ரங்கன் சாலையிலுள்ள ரஷ்ய கலாச்சார மையத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் 100-க்கும் மேற்பட்ட குழுக்கள் பங்கேற்றன. சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், புதுச்சேரியைச் சேர்ந்த 6 முதல் 8-ஆம் வகுப்புப் படிக்கும் மாணவ – மாணவிகள் இக் குழுக்களில் இடம்பெற்றிருந்தனர்.




இந்நிகழ்ச்சியில், தென்னிந்தியாவுக்கான ரஷ்ய தூதர் அலெக் அவ்தேவ் நிக்கோலியேவிச், இந்தோ ரஷ்யன் சேம்பர் ஆஃப் காமர்ஸ் பொதுச்செயலாளர் பி.தங்கப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். எல்ஜசி உதவி கிளை மேலாளர் ஐ.செந்தில், AMW VACAY சீஇஓ அருண் பிரசாத் ஆகியோர் கலந்துகொண்டனர். விநாடி வினா போட்டிகளை குவிஸ் மாஸ்டர் அரவிந்த் ராஜீவ், அஜய் கிருஷ்ணன் இருவரும் ஒருங்கிணைத்தனர்.

இப்போட்டியில் சென்னை தி.நகர் பத்மசேஷாத்ரி பாலபவன், புதுச்சேரி அமலோர்பவம் மேல்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம் ஓலோஜி டெக் ஸ்கூல் ஆகிய 3 பள்ளிகள் மாநில அளவில் நடைபெறும் இறுதிச் சுற்று போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டன.

விரைவில் நடைபெறவுள்ள மாநில அளவிலான இறுதிப்போட்டியில் வெற்றிபெறும் மாணவ-மாணவிகள் ரஷ்ய விண்வெளி மையத்துக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியை UNIBIC, AMW VACAY, REPUTE ஆகியவை இணைந்து வழங்கின.

கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தால் சூளேரிகாட்டுக்குப்பம் மீனவ கிராமத்தில்

# 24 மணி நேரமும் குடிநீர் வழங்க தீவிர நடவடிக்கை

## ● சென்னை குடிநீர் வாரியம் உறுதி

■ **சென்னை**

கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ள செங்கல்பட்டு மாவட்டம் சூளேரிகாட்டுக்குப்பம் மீனவ கிராமத்தில் 24 மணி நேரமும் குடிநீர் வழங்கப்படும் என்று சென்னை குடிநீர் வாரியம் உறுதியளித்துள்ளது.

இதுதொடர்பாக சென்னைகுடிநீர் வாரியம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை குடிநீர் வாரியம் சார்பில் நெம்மேலியில், நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. அதற்கான அத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ள இடத்துக்கு அருகில் உள்ள சூளேரிக் காட்டுக்குப்பம் கிராம மக்களுக்கான வாழ்வாதாரம் குறித்த கலந்தாய்வுக் கூட்டம், அக்கிராமத்தில் நேற்று முன்தினம் (பிப்.27) நடைபெற்றது.

> ▼ **கடல்நீரை குடிநீராக்கும் நிலைய பராமரிப்பு பணியில் சூளேரிக்காட்டுக்குப்பம் பகுதியை சார்ந்த படித்த இளைஞர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

அதில் சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் த.பிரபுசங்கர் பங்கேற்று, பொதுமக்களிடம் கலந்துரையாடினார். அவர்களிடம் கோரிக்கை மனுக்களையும் பெற்றார். பின்னர் அவர் பேசியதாவது:

இந்த சூளேரிக்காட்டுக்குப்ப மீனவ கிராமத்துக்கு, கடல்நீரை குடிநீராக்கி, மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் சேமித்து, அனைத்து வீடுகளுக்கும் 24 மணி நேரமும் குழாய் மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்து வீடுகளுக்கும் வீட்டு மனைப்பட்டா வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### வேலைவாய்ப்பு

கடல்நீரை குடிநீராக்கும் நிலைய பராமரிப்பு பணியில் சூளேரிக் காட்டுக்குப்பம் பகுதியை சார்ந்த படித்த இளைஞர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். கோவளம் போன்ற கடல் பகுதியில் செயற்கை பவளப்பாறைகள் ஏற்படுத்தப்பட்டு மீனவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும். மீன் பிடிப்பு அல்லாத காலங்களில் மீனவர்களுக்கு மாதம் ரூ.5 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படும்.

இப்பகுதியில் உள்ள பள்ளி, உலகத்தரம் வாய்ந்த ஸ்மார்ட் பள்ளியாக மாற்றப்படும். இப்பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும். மேலும் விளையாட்டு மைதானம், கழிவுநீர் வசதி, சமுதாய கூடம், அங்கன்வாடி போன்ற அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படும்.

இவ்வாறு அவர் உறுதியளித்தார்.

இக்கூட்டத்தில், சென்னை குடிநீர் வாரிய பொறியியல் இயக்குநர் கே.மதுரைநாயகம், தலைமை பொறியாளர் என்.ராஜேந்திரன், மேற்பார்வை பொறியாளர் ராஜாராம், செயற்பொறியாளர் மோகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

குரூப்-4 முறைகேடு விவகாரத்தால்

# புதிய தேர்வு அறிவிப்புகளை வெளியிடுவதில் தாமதம்

## ● தேர்வர்கள் ஏமாற்றம்

■ **சென்னை**

டிஎன்பிஎஸ்சி குரூப்-4 தேர்வு முடிவுகள் முறைகேடு விவகாரத்தால், புதிய தேர்வுகளுக்கான அறிவிப்புகள் வெளியாவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. தேர்வு காலஅட்டவணைப்படி ஜனவரியில் நடக்க வேண்டிய 3 தேர்வுகளுக்கான அறிவிப்புகள் இதுவரை வெளியாகவில்லை.

அரசுப்பணிக்காக டிஎன்பிஎஸ்சி போட்டித் தேர்வுகள் நடத்தி ஆட்களை தேர்வு செய்து வருகிறது. இந்த போட்டித் தேர்வர்களுக்கான வருடாந்திர தேர்வு கால அட்டவணையை டிஎன்பிஎஸ்சி ஆண்டுதோறும் வெளியிடுகிறது. முன்கூட்டியே தேர்வர்கள் தயாராகும் வகையில் இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது. அந்த வகையில், நடப்பாண்டுக்கான அட்டவணைப்படி, ஜனவரி மாதத்தில் குரூப்-1, உதவி வேளாண் விரிவாக்க அலுவலர் தேர்வு, தோட்டக்கலை உதவி இயக்குநர் தேர்வு, உதவி தோட்டக்கலை அலுவலர் தேர்வு ஆகிய 4 தேர்வுகளுக்கான அறிவிப்புகள் வெளியாகியிருக்க வேண்டும்.

இதில், குரூப்-1 தேர்வுக்கான அறிவிப்பு மட்டுமே ஜனவரி 20-ல் வெளியிடப்பட்டு ஆன்லைன் விண்ணப்பம் நிறைவடைந்துள்ளது. மீதமுள்ள 3 தேர்வுகளுக்கான அறிவிப்புகள் இன்னும் வெளியிடப்படவில்லை. பிப்ரவரி நிறைவடையும் நிலையில் இந்த மாதத்தில் வந்திருக்க வேண்டிய ஒருங்கிணைந்த இன்ஜினீயரிங் பணி தேர்வுக்கும் அறிவிப்பு வெளியாகவில்லை.

கடந்த ஆண்டு செப். 1-ம் தேதி நடந்த குரூப்-4 தேர்வில் நடந்த முறைகேடு விவகாரம் விஸ்வரூபம் எடுத்தது. ராமநாதபுரம் மாவட்டத்தில், ராமேசுவரம், கீழக்கரை தேர்வு மையங்களில் எழுதியவர்கள் பலர் முறைகேடாக தேர்ச்சி பெற்றது தெரியவந்தது. இதுகுறித்து விசாரணை நடத்திய சிபிசிஐடி போலீஸார் இடைத்தரகர் ஜெயக்குமார் உட்பட 20-க்கும் மேற்பட்டோரை கைது செய்தனர். அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

இந்த விவகாரம் காரணமாகவே புதிய தேர்வுகளுக்கான அறிவிப்புகளை வெளியிடுவதில் காலதாமதம் ஏற்பட்டிருப்பதாக டிஎன்பிஎஸ்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

### மார்ச் 17-க்கு மேல்..

இதற்கிடையே, சர்ச்சைக்குள்ளான குரூப்-4 தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களின் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு பிப்ரவரி 19-ம் தேதி தொடங்கி நடந்து வருகிறது. இக்கலந்தாய்வு மார்ச் 17-ம் தேதி நிறைவடைகிறது. இதன்பிறகே, அடுத்தடுத்த தேர்வுகளுக்கான அறிவிப்புகள் வெளியாகும் என தேர்வர்கள் எதிர்பார்க்கிறார்கள்.




▲ புதுச்சேரி யூனியன் பிரதேசம் மற்றும் அதையொட்டிய தமிழகப் பகுதிகளில் மத்திய நெடுஞ்சாலைத் துறை சார்பில் நடைபெற்று வரும் பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் மத்திய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்காரி தலைமையில் புதுச்சேரி தலைமை செயலகத்தில் நடந்தது. படம்: எம்.சாம்ராஜ்

புதுச்சேரியில் மாநில நெடுஞ்சாலைகளை

# தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்ற அவகாசம் தேவை

## ● நாராயணசாமிக்கு அமைச்சர் நிதின் கட்கரி விளக்கம்

■ **புதுச்சேரி**

மாநில நெடுஞ்சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றி அமைக்க புதிய திட்டத்தை வகுக்க உள்ளோம் என மத்திய சாலை போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி யூனியன் பிரதேசம் மற்றும் அதனையொட்டிய தமிழகப் பகுதிகளில் மத்திய நெடுஞ்சாலைத் துறை சார்பில் நடைபெற்று வரும் பணிகள் மற்றும் புதிய திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் மத்திய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி தலைமையில் புதுச்சேரி தலைமைச் செயலகத்தில் நேற்று நடந்தது.

ஆய்வுக் கூட்டத்தில் முதல்வர் நாராயணசாமி உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர். கூட்டத்துக்குப் பிறகு மத்திய அமைச்சர் நிதின் கட்கரி கூறியதாவது:

புதுச்சேரியில் நகரப் பகுதிகளில் புதிய சாலைகள் அமைக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மாநில சாலைகள் மற்றும் தேசிய சாலைகளைப் பிரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிகள் முடிவடைந்த பின்பு புதுச்சேரியில் புதிய மேம்பாலங்கள் அமைப்பது தொடர்பான கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும். ஏற்கெனவே ஒப்புதல் தந்த திட்டங்கள் நிறைவுக்கு பிறகு, புதிய திட்டங்கள் குறித்து பரிசீலிப்போம். மாநில நெடுஞ்சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக அறிவிக்க வேண்டும் என்ற முதல்வரின் கோரிக்கையை பரிசீலிக்க சில காலம் அவகாசம் தேவைப்படுகிறது. மாநில நெடுஞ்சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றி அமைக்கும் இடங்களில் புதிய திட்டத்தை வகுக்க உள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

முதல்வர் நாராயணசாமி கூறுகையில், "புதுச்சேரியில் தேசிய நெடுஞ்சாலைகளை விரிவுபடுத்துதல், அகலப்படுத்துதல், புதிய சாலைகள் அமைப்பது தொடர்பாக தெரிவித்தோம். குறிப்பாக புதுச்சேரி முதல் மகாபலிபுரம், விழுப்புரம் முதல் நாகப்பட்டினம், புதுச்சேரியினுள் முருங்கப்பாக்கம் முதல் சிவாஜி சிலை, மதகடிப்பட்டு முதல் புதுச்சேரி நகர்ப் பகுதி வரையிலும் நான்கு வழிச்சாலை அமைப்பது தொடர்பான 4 திட்டங்களை மத்திய அமைச்சர் நிதின் கட்கரியிடம் அளித்துள்ளோம். அவற்றை செய்துதர மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது' என்று தெரிவித்தார்.

ஆய்வுக் கூட்டத்துக்குப் பிறகு, அமைச்சர் நிதின் கட்கரி அரவிந்தர் ஆசிரமம் சென்று வழிபட்டார்.

குடியுரிமை சட்டத்துக்கு எதிராக

# 15-வது நாளாக நீடிக்கும் வண்ணாரப்பேட்டை போராட்டம்

## ● கோரிக்கையை நிறைவேற்ற வலியுறுத்தல்

■ **சென்னை**

குடியுரிமை சட்டத்துக்கு எதிராக வண்ணாரப்பேட்டையில் நடைபெற்று வரும் தொடர் போராட்டம் நேற்றுடன் 15-வது நாளை எட்டியது.

குடியுரிமை திருத்தச் சட்டம், தேசிய மக்கள் தொகை பதிவேடு, தேசிய குடியுரிமை பதிவேடு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இதன் ஒரு பகுதியாக சென்னை வண்ணாரப்பேட்டையில் முஸ்லிம்கள் உள்ளிட்ட ஏராளமானோர் ஒன்றுசேர்ந்து 'சென்னையின் ஷாகீன்பாக்' என்ற பெயரில் கடந்த 14-ம் தேதி முதல் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதில் பெண்கள், சிறுவர்கள் என பலரும் கலந்து கொண்டு குடியுரிமை சட்டத்துக்கு எதிராக கோஷங்களை எழுப்பி வருகின்றனர்.

### வளைகாப்பு

போராட்டத்தின் 4-வது நாளில் ஒரு முஸ்லிம் ஜோடிக்கு திருமணமும் 13-வது நாளில் இந்து பெண் ஒருவருக்கு முஸ்லிம் பெண்கள் வளைகாப்பும் நடத்தினர். நேற்று முன்தினம் முஸ்லிம் பெண்கள் தண்ணீர் அருந்தாமலும் உணவு சாப்பிடமாலும் 14 மணி நேரம் நோன்பு இருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு வண்ணாரப்பேட்டை போராட்டக் குழுவை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் முதல்வரை அவரது இல்லத்தில் சந்தித்து தங்களது கோரிக்கை குறித்து பேசினர். இந்த சந்திப்பு ஒரு மணி நேரம் நடைபெற்றது. அப்போது, முதல்வர் தங்களது கருத்துகளை கனிவோடு கேட்டதாகவும் முஸ்லிம்களை பாதுகாக்கும் அரசாக இந்த அரசு இருக்கும் என்று கூறியதாகவும் போராட்டக் குழுவினர் தெரிவித்தனர்.


### பேரவையில் தீர்மானம்


இதையடுத்து போராட்டக்குழு சார்பில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. அதில், மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த மாட்டோம் என சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். அதோடு குடியுரிமை சட்டம், மக்கள் தொகை பதிவேடு, தேசிய குடியுரிமை பதிவேடு ஆகியவற்றை தமிழகத்தில் அமல்படுத்த மாட்டோம் என உறுதியளிக்க வேண்டும் என்று முதல்வரிடம் வலியுறுத்தி உள்ளோம். எங்கள் கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என அதில் தெரிவித்திருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக நேற்று 15-வது நாளாக போராட்டம் தொடர்ந்தது. மாலையில் போராட்டக் குழுவைச் சேர்ந்த நிர்வாகிகள் கூடி ஆலோசனை நடத்தினர். போராட்டத்தை முன்னெடுத்து செல்வது குறித்தும் முதல்வர் கூறிய கருத்தை வைத்து அடுத்து என்ன செய்வது என்பது பற்றியும் ஆலோசித்ததாக நிர்வாகிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நூல் வெளி

# இளையராஜாவும் ஏ.ஆர்.ரஹ்மானும்







தமிழக வெகுசன இசையின் அரசியலும் அரசியலற்ற இசையும்
இரா.பிரபாகர்
கருத்து=பட்டறை வெளியீடு
திருநகர், மதுரை-6.
தொடர்புக்கு: 98422 65884
விலை: ரூ.250

**இந்தியாவைத் தாண்டி கவனம் ஈர்க்கும் இசை ஆளுமைகளான இளையராஜா, ஏ.ஆர்.ரஹ்மான் இருவரும் வேறு நாட்டைச் சார்ந்தவர்களாக இருந்திருந்தால் அவர்களைப் பற்றி பல்வேறு புத்தகங்கள் எழுதப்பட்டிருக்கும். இளையராஜாவும் ஏ.ஆர்.ரஹ்மானும் மேலோட்டத்தில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டாலும், அவர்களுடைய இசையைத் தீவிரமாக ஆய்வுசெய்து வெளிவந்திருக்கும் புத்தகங்கள் மிகக் குறைவு. இரா.பிரபாகர் எழுதி 'கருத்து=பட்டறை' வெளியீடாக வந்திருக்கும் 'தமிழக வெகுசன இசையின் அரசியலும் அரசியலற்ற இசையும்' புத்தகமானது இளையராஜா, ரஹ்மான் இருவரின் இசையையும் விரிவாகப் பேசுகிறது. அது மட்டுமல்லாமல், தமிழ் வெகுஜன இசையின் நெடிய வரலாற்றைக் கலாச்சாரக் கண் கொண்டும் பார்க்கிறது. நூலிலிருந்து...**

### இளையராஜா

வெகுஜனக் கலைகளில் ஒரு மக்கள் திரள் ஒரு குறிப்பிட்ட வகை ரசனைமுறைக்குப் பழக்கப்பட்ட பின்னர், அதை முற்றிலும் மறுதலித்துப் புதிதான ஒன்றுக்குத் தன் ரசனையை மாற்றிக்கொள்வதென்பது எளிதான ஒன்றல்ல. ஏற்கெனவே நூற்றுக்கணக்கான படங்களில் ஆயிரக்கணக்கான பாடல்களைக் கேட்டுப் பழகிய தமிழ்க் காதுகள் இளையராஜாவை இறுகப் பற்றிக்கொண்டமைக்கு அவரது புதிய பரிமாணங்களை, இசையின் தனித்தன்மைகளை முக்கியக் காரணங்களாகக் குறிப்பிடலாம்.

தமிழ்த் திரைப்பட இசை வரலாற்றில் முதன்முறையாக எல்லா அர்த்தத்திலும் மண்ணின் மைந்தனாகக் கருதத் தக்கவராக இளையராஜா இருந்தார். மற்ற எல்லா இசையமைப்பாளருக்கும் இருந்த சாஸ்திரீய இசைப் பின்புலம் இல்லை என்பதைவிட, அதன் எதிர்வாகப் பார்க்கப்பட்ட நாட்டுப்புற இசையோடு பிறந்துவளர்ந்தவராக இளையராஜா இருந்தார். முற்றிலும் மாறுபட்ட மெட்டமைப்புக்கான உந்துதலை நாட்டுப்புற இசையிலிருந்து பெற்றது இளையராஜாவின் பலம் ஆயிற்று. இந்தியாவின் பன்மைத்துவப் பண்பாட்டில் தமிழகத்தின் தனித்த பண்பாட்டு ஊடாட்டங்களைப் புரிந்துகொண்டால்தான் இளையராஜாவின் மெட்டுகளின் தனித்துவத்தை மதிப்பிட முடியும்.

நாட்டுப்புற இசைக்கூறுகளைக் கையாண்ட விதத்தில் இளையராஜாவுக்கும் மற்றவர்களுக்கும் இருந்த அடிப்படையான வேறுபாடு, நாட்டுப்புற இசையைப் பார்த்த விதம்தான். பொதுவாக கேலிகிண்டல், நையாண்டித்தன்மையுள்ள, இரட்டை அர்த்தமுள்ள பாடல்கள், குறிப்பாக 'சி கிளாஸ்' என்று சொல்லத்தக்கப் பார்வையாளரை மனதில் கொண்டவையாக அமையும் பாடல்களே நாட்டுப்புற மெட்டுகளில் அமையும். அக்காலச் சமூகப் பொதுப்புத்தியைப் பிரதிபலிப்பதாகவே இதை எடுத்துக்கொள்ள முடியும். அத்தகைய சூழலில், இளையராஜாதான் முதன்முறையாக எல்லா வகையான சூழல்களுக்கும் நாட்டுப்புற மெட்டுகளைப் பயன்படுத்த முடியும் என்பதைச் சாத்தியமாக்கினார்.

வெகுஜனத் திரைப்படத் துறையில் ஒருவர் செல்வாக்கு பெற்றவராக இருப்பதை மதிப்பிட சில வழிமுறைகள் உண்டு. முதலாவதாக, அவர் தன் கலைக்காகப் பெறும் ஊதியம். இரண்டாவதாக, பிரபலமான இயக்குநர்களும் நடிகர்களும் தங்கள் படங்களில் அவரை இணைத்துக்கொள்வதை வியாபாரரீதியாகவும் கலாபூர்வமாகவும் பலமாகக் கருத வேண்டும். மூன்றாவதாக, வெகுஜன ஊடகங்களில் அந்தக் கலைஞரைப் பற்றிய செய்திகள், கிசுகிசுக்கள், பேட்டிகள், புகைப்படங்கள் வெளிவந்துகொண்டே இருக்க வேண்டும். இவையெல்லாம் இளையராஜாவின் விஷயத்தில் முற்றிலும் பொருந்தக்கூடியனவாக இருந்தன. இதற்கு மேலும் கூடுதலாக, இளையராஜாவின் புகைப்படங்கள் திரைப்படச் சுவரொட்டிகளில் இடம்பிடித்தன. தமிழ்த் திரைப்பட வரலாற்றில் ஓர் இசையமைப்பாளரின் உருவம் நாயக நடிகர்களோடு இடம் பெற்றது என்றால் அது இளையராஜாவுக்குப் பிறகுதான்.

### ஏ.ஆர்.ரஹ்மான்

இந்தியாவில் திரையிசை உருவாக்க முறைமையில் இருந்த மரபுகளை முழுமையாக மாற்றி அமைத்தார் ஏ.ஆர். ரஹ்மான். அவர் இந்தியாவில் இசையமைப்பாளர் என்ற பிம்பத்தையே மாற்றி அமைத்தார். வெற்றிலை குதப்பும் வாயுடன் ஜிப்பா அணிந்து, நெற்றியில் பட்டை, குங்குமமிட்டு ஹார்மோனியத்தில் கை வைத்திருக்கும் பிம்பத்தை மாற்றி கம்ப்யூட்டர்கள், கலவைச் சாதனங்கள் முன் அமர்ந்திருப்பவராக மாற்றினார். இசை உருவாக்கத்தைப் பொறுத்தவரை மெட்டமைப்பது, இசைச் சோடனை செய்வது, பாடகர்கள், கருவியிசைக் கலைஞர்களைக் கையாள்வது என அனைத்து விஷயங்களிலும் ரஹ்மான் புதிய அணுகுமுறையைக் கொண்டிருந்தார்.


ஏ.ஆர்.ரஹ்மான் தன் இசையில் பாடகர்கள், கருவியிசைக் கலைஞர்கள், ஒலிப் பொறியாளர்கள் என அனைவரையும் படைப்பின் பங்காளர்களாக அங்கீகரிப்பதன் மூலம் படைப்பு என்பது ஒரு வெளிப்படைத்தன்மையைப் பெறுகிறது. இசை உருவாக்கத்தில் ரஹ்மானின் இந்தத் தலைகீழ் அணுகுமுறை புதிய தொழில்நுட்பத்தாலேயே விளைந்தது. டிஜிட்டல் ஒலிப்பதிவு, எண்ணற்ற தடங்களில் இசையைப் பதிவுசெய்யும் வசதி போன்றவை ரஹ்மானின் பரிசோதனைகளுக்கான சாத்தியங்களை உருவாக்குகிறது. பாடகர் பாடுவதென்பது பக்கவாத்தியங்கள், ஊடிசை, இசைச் சோடனை ஆகிய எல்லாவற்றையும் முடிவுசெய்த பின் இறுதியாக நிகழ்வதாகும். ரஹ்மான் பாடலை முதலில் பாடச் செய்து, அதற்கான இசைப் பகுதிகளைப் படிப்படியாக நாள்கணக்கில் வாரக்கணக்கில் உருவாக்குகிறார். சென்னையில் ஆரம்பிக்கும் ஒரு பாடல் மும்பையிலும் லண்டனிலும் செப்பனிடப்படுகிறது. ஒரு தமிழ் இசையமைப்பாளனின் மெட்டுக்கு மஹாராஷ்டிரப் பாடகர் குரல் கொடுக்க, ஒரு அமெரிக்கக் கருவியிசைக் கலைஞர் கருவியிசைக்க, ஒரு இலங்கைப் பாடகி இடைக்குரல் வழங்க, இங்கிலாந்தின் ஒலிப் பொறியாளர் ஒலிக் கலவைசெய்யும் ஒரு படைப்பாக மாறுகிறது.

ஒலிப் பொறியியல் சரியான வளர்ச்சி பெறாத இந்தியச் சூழலில் ஓர் இசையமைப்பாளர் தானே அதைக் கற்றுத் தேர்வதன் மூலமாக மட்டுமே உலகத்தரத்தைப் பெறக்கூடியவராக இயங்க முடியும் என்பதை ரஹ்மான் வெளிப்படுத்தினார். இந்தியாவின் முன்னனித் தகவல் தொழில்நுட்ப இதழான 'எக்ஸ்பிரஸ் கம்ப்யூட்டர்', தொழில் நுட்பத்தை ரஹ்மான் பயன்படுத்தும் விதத்தை வியந்தது. "நான் ஏன் ஆப்பிள் மேக்கிண்டாஷ் உபயோகிக்கிறேன்? இசை மற்றும் படைப்புக் கலைகளை உருவாக்குவதற்கு அதுதான் சிறந்தது. மேக் எனக்கு நெருக்கமானதாக இருக்கிறது. அது 'ஆட்டிட்யூட்' உள்ள எந்திரம்" என்றார் ரஹ்மான். ஒரு இயந்திரத்துக்கு மனிதப் பண்புகளை ஏற்றிக் கூறுமளவுக்கு அவர் இருக்கிறார்.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற இந்திய இயக்குநர் கோவிந்த் நிகாலினி, "அடுத்த நூற்றாண்டின் இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான். அவர் வெறும் மெட்டுகளை உருவாக்குபவர் அல்ல. அவர் முழுமையான இசையை உருவாக்குபவர். அவர் இசைத் துறையின் போக்குகளையும் வளர்ச்சிகளையும் தொடர்ந்து கவனித்துவருபவர்" என்கிறார்.

---

**நூல்நோக்கு**





ஜே.வி.ஸ்டாலின் படைப்புகள்
தொகுதி- 1
தமிழில்: மணியம்
அலைகள் வெளியீட்டகம்
ராமாபுரம், சென்னை-89
தொடர்புக்கு: 98417 75112
விலை: ரூ.450

## சர்வாதிகாரியா ஸ்டாலின்?

ஏகாதிபத்தியத்தையும் நாஜிஸத்தையும் வீழ்த்தி சோவியத் ரஷ்யாவில் சோஷலிஸக் குடியரசைச் செதுக்கியவர் ஸ்டாலின். என்றாலும், அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியவர் என்ற விமர்சனமும் அவர் மீது உண்டு. இத்தகைய விமர்சனங்கள் குருச்சேவ் குழுவினரின் திருத்தல்வாதமே என்றும், ஸ்டாலினைப் பற்றி அறிந்துகொள்ள அவரது எழுத்துகளையே படியுங்கள் என்றும் பரிந்துரைக்கிறது 'அலைகள்' பதிப்பகம். தமிழில் முதன்முதலாக ஸ்டாலின் எழுத்துகள் முழுமையையும் 15 தொகுதிகளில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறது. முதல் தொகுதி, 1901–1907 காலகட்டத்தில் எழுதப்பட்டவை. டிப்லிஸ் நகரத்தை மையப்படுத்தி நடத்தப்பட்ட புரட்சிகரச் செயல்பாடுகளுடன் தொடர்புடையவை. ரஷ்யப் புரட்சிக்கான அடித்தளங்கள் உருவான காலக்கட்டம் இது.

**- புவி**

**நூல்நோக்கு**




கல்வெட்டுகளில் தேவதாசி
எஸ்.சாந்தினிபீ
விஜயா பதிப்பகம்
ராஜ வீதி,
கோயம்புத்தூர்-641001.
தொடர்புக்கு: 0422-2382614
விலை: ரூ.100

## அடியாரின் வரலாறு

அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை இணைப் பேராசிரியரான எஸ்.சாந்தினிபீ எழுதிய சமீபத்திய நூல். 'இடைக்கால தென்னகக் கோயில்களில் பணிப்பெண்கள்' என்ற தலைப்பில் சர்வதேசக் கருத்தரங்கு ஒன்றில் வாசிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையின் நூல் வடிவம். ஆணுக்கு நிகராக தேவரடியார்கள் பெற்ற சன்மானம், கோயில்களுக்கு அவர்கள் வழங்கிய நன்கொடைகள், அவர்கள் நடத்திய வேலைநிறுத்தப் போரட்டம் உள்ளிட்ட வரலாற்றுத் தகவல்களைக் கல்வெட்டு ஆதாரங்களுடன் இந்நூலில் விவரித்துள்ளார். தேவரடியார் முறையின் தோற்றம் தொடங்கி 1947–ல் முத்துலட்சுமி ரெட்டியின் முயற்சியில் கொண்டுவரப்பட்ட 'தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம்' வரையிலான வரலாறு, விரிவான சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளது.

**- செ.இளவேனில்**

**நூல்நோக்கு**




வித்தியாசம்தான் அழகு
ச.மாடசாமி
அகரம் அறக்கட்டளை வெளியீடு
தி.நகர், சென்னை-17.
தொடர்புக்கு: 044-43506361
விலை ரூ.100

## எல்லோருக்குமான உரையாடல்

அன்பின் மை தொட்டு எழுதும் ச.மாடசாமி, ஆங்கில மொழியில் வாசித்திருக்கும் குழந்தைகளுக்கான கதைகளைத் தமது பேரக் குழந்தைகளுக்குச் சொன்ன அனுபவத்தின் ருசியோடு இந்நூலில் சொல்கிறார். குரைக்கச் சொன்னால் வெவ்வேறு விலங்குகளின் ஒலிக் குறிப்பை எழுப்பும் நாய்க்குட்டி, பல் டாக்டர் சுண்டெலி, சட்டை பொத்தான் இழந்ததால் யாருமே வாங்காதுபோவதில் வருத்தமுறும் கரடி பொம்மை என்று பல விலங்குகள் சுவாரஸ்யமாக உரையாடுகின்றன. போட்டி, பொறாமை, கர்வம் போன்றவற்றைக் குழந்தைகள் கடந்துபோவதில் எப்படி பெரியவர்கள் குறுக்கிட்டுக் குழப்புகிறோம் என்பதை ரசமான கதைகளை முன்வைத்துப் பேசுகிறார். நமது பார்வையை விசாலப்படுத்தவும், அணுகுமுறைகளை மறுவாசிக்கவும், வாழ்க்கையை மேலும் அர்த்தமுள்ளதாக்கவும் மாற்றும் புத்தக வரிசையில் இந்நூல் நிச்சயம் இடம் பெறும்.

**- எஸ்.வி.வேணுகோபாலன்**

**நம் வெளியீடு**




அன்பாசிரியர்
க.சே.ரமணி பிரபா தேவி
இந்து தமிழ் திசை வெளியீடு
124, கஸ்தூரி மையம்,
வாலாஜா சாலை,
சென்னை-2.
தொடர்புக்கு: 74012 96562
விலை: ரூ.200

## விதைப்பதே நோக்கம்

நல்லது எங்கு நடந்தாலும், சாதனைகள் எங்கே அரங்கேறினாலும் அவற்றுக்குத் தனி முக்கியத்துவம் தர வேண்டும். அதன் மூலம் சமூகத்தின் அவநம்பிக்கையைத் துடைத்து, நன்னம்பிக்கையை விதைக்க முடியும். அந்த வகையில், உலகம் முழுவதும் உள்ள தமிழ் வாசகர்களின் பாராட்டைப் பெற்றது 'இந்து தமிழ்' நாளிதழின் இணையத்தில் வெளிவந்த 'அன்பாசிரியர்' தொடர். தனித்துவத்தோடு செயல்பட்டு மாணவர்களுக்கு ஊக்கமும், பள்ளிகளுக்குப் பெருமையும் சேர்த்த ஆசிரியர்களுக்கு இந்தத் தொடர் ஊக்கம் தருவதாக அமைந்தது. 28 பள்ளிகளில் 74 செயல்திட்டங்களுக்கான உதவிகள் கிடைத்தன. 'இந்து தமிழ்' வாசகர்கள் இதுவரை கொடுத்த ரூ.58.89 லட்சம் மூலம் அரசுப் பள்ளிகள் அடுத்த நிலைக்கு மேம்படுத்தப்பட்டன. 'அன்பாசிரியர்' இப்போது நூல் வடிவம் பெற்றிருக்கிறது.

---



பத்திரிகைகளில் துணுக்கு எழுதியவர்கள் எந்தக் காலத்திலும் தங்களுக்கு இலக்கிய அந்தஸ்து கோரியதில்லை. ஆனால், இலக்கியவாதிகள் தாங்கள் ஃபேஸ்புக்கில் எழுதக்கூடிய துணுக்குகளும் கிசுகிசுக்களும்கூட இலக்கியம்தான் என்று தீவிரமாக நம்புகிறார்கள்.

**- யுவகிருஷ்ணா**



## அழகிய பெரியவனுடன் ஒரு நாள்

ஒடுக்கப்பட்ட மக்களின் சிக்கல்களை முப்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து எழுதிவரும் அழகிய பெரியவனுக்கு நாளை (மார்ச் 1) வேலூர் செயின்ட் மேரிஸ் கல்வியியல் கல்லூரியில் முழு நாள் அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவருடைய படைப்புகள் சார்ந்த உரையாக மட்டுமல்லாமல் கவிதை வாசிப்பு, பவா செல்லதுரையின் கதை சொல்லல், அழகிய பெரியவனுடன் உரையாடல் என்பதாக நிகழ்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.



## கோமல் அன்பரசனுக்கு ஆய்வரங்கம்

தமிழகத்தின் பாரம்பரியமான தமிழ்க் கல்வி மையங்களில் ஒன்றான தருமபுரம் ஆதினம் கலைக் கல்லூரியானது மூத்த பத்திரிகையாளரான கோமல் அன்பரசனைக் கௌரவித்துள்ளது. அவர் எழுதிய எட்டு புத்தகங்களுக்கான முழு நாள் ஆய்வரங்கை நேற்று (பிப்ரவரி 28) நடத்தியிருக்கிறது.

360°

## தூத்துக்குடி, நாகர்கோவிலில் புத்தகக்காட்சி



தூத்துக்குடி ராமையா மகாலில் பிப்ரவரி 28 தொடங்கி மார்ச் 12 வரை புத்தகக்காட்சி நடக்கிறது. மக்கள் வாசிப்பு இயக்கம் நடத்தும் 4-வது புத்தகக்காட்சி நாகர்கோவிலில் உள்ள பயோனியர் முத்து மகாலில் பிப்ரவரி 27 தொடங்கி மார்ச் 8 வரை நடக்கிறது. தமிழகத்தின் முன்னணி பதிப்பகங்களும் விற்பனையாளர்களும் பங்கேற்கும் இந்தப் புத்தகக்காட்சியில் அனைத்து நூல்களுக்கும் 10% தள்ளுபடி உண்டு.

## ரூ.1.5 லட்சம் சிறு தொகைதான்!



'புது எழுத்து' இலக்கிய இதழின் ஆசிரியரும், சவுளூர் அரசுப் பள்ளி ஆசிரியருமான சுகவன முருகன் வரலாற்று ஆய்வுகளில் மிகுந்த அக்கறை கொண்டவர். அவர் தன்னுடைய ஊக்க ஊதிய நிலுவைத் தொகையில் ரூ.1,50,001-ஐ சென்னை ரோஜா முத்தையா ஆய்வு நூலகத்துக்கு நன்கொடையாக வழங்கியிருக்கிறார். "நம் தமிழில் பொக்கிஷங்களைப் பாதுகாக்கும் பெட்டகம் ரோஜா முத்தையா நூலகம். ஆனால், நிதிப் பற்றாக்குறையால் அது தள்ளாடுகிறது. என்னால் இயன்றது இவ்வளவுதான். வாய்ப்பிருந்தால் இன்னமும் பெரும் தொகையைக் கொடுத்திருப்பேன்" என்கிறார்.

100 கால்நடை மருந்தகங்களுக்கு

# ரூ.43 கோடி மதிப்பில் புதிய கட்டிடங்கள்

● தமிழக அரசு நிர்வாக ஒப்புதல்

**சென்னை**

தமிழகத்தில் 100 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 2 நோய் புலனாய்வு பிரிவுகளுக்கு ரூ.43 கோடியே 30 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பில் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

சட்டப்பேரவையில் கடந்த ஆண்டு ஜூலை 9-ம் தேதி 110-விதியின்கீழ் முதல்வர் பழனிசாமி வெளியிட்ட அறிவிப்பில், 'சிறந்த கால்நடை மருத்துவ சேவையை வழங்க அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டமைப்பு அவசியமாகும். அந்தவகையில் புதிதாக தரம் உயர்த்தப்பட்ட 100 கால்நடை மருந்தகங்களுக்கு அறைகலன்களுடன் கூடிய புதிய கட்டிடங்கள் ரூ.37 கோடியில் நடப்பாண்டில் கட்டித்தரப்படும்' என்று தெரிவித்திருந்தார்.

> ▼ **100 கால்நடை மருந்தகங்கள், புதிய 2 நோய் புலனாய்வு பிரிவு கட்டிடங்களை நபார்டு நிதித்திட்டத்தில் ரூ.43,30,80,000 மதிப்பில் கட்ட ஒப்புதல் வழங்கியுள்ளது.**

அதற்கு முன்னதாக, கால்நடை பராமரப்புத் துறை மானிய கோரிக்கை முடிவில் துறை அமைச்சர் வெளியிட்ட அறிவிப்பில், 'கால்நடை நோய் கண்காணிப்பு நோய் முன்னறிவிப்பு மற்றும் நோய்க்கிளர்ச்சி நேரங்களில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நாமக்கல் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உள்ள கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகளுக்கு ரூ.2 கோடியில் புதிய கட்டிடங்கள் கட்டப்படும்' என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில், கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர், 100 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 2 கால்நடை நோய் புலானய்வு பிரிவு ஆகியவற்றுக்கு புதிய கட்டிடங்கள் கட்ட ரூ.43 கோடியே 30 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரித்து அரசுக்கு அளித்தார். அதில், சாதாரண நிலப் பரப்பு, மலைப்பகுதி, கடலோரப் பகுதிகளில் அமைக்கப்படும் இந்த மருந்தகங்கள், புலனாய்வு பிரிவுக்கான கட்டிடங்களுக்கு எவ்வளவு நிதி தேவைப்படும் என்பதையும் தெளிவுபடுத்தியதுடன், நபார்டு நிதியுதவி திட்டத்தில் நிதி ஒதுக்கவும் கோரியிருந்தார்.

இதை பரிசீலித்த தமிழக அரசு, 26 மாவட்டங்களில் 100 கால்நடை மருந்தகங்கள் மற்றும் நாமக்கல், திருவாரூரில் புதிதாக அமைக்கப்பட்ட 2 நோய் புலனாய்வு பிரிவுக்கான கட்டிடம் ஆகியவற்றை நபார்டு நிதித் திட்டத்தில் ரூ.43 கோடியே 30 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பில் கட்டிட நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்கான அரசாணையை கால்நடை பராமரிப்புத்துறை செயலர் கே.கோபால் வெளியிட்டுள்ளார்.



▲ சென்னை பல்கலைக்கழக குற்றவியல் துறை, இந்திய பாதிக்கப்பட்டோர் இயல் சங்கம் மற்றும் ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி உளவியல் துறை சார்பில் 'அதிகரித்து வரும் பழிவாங்கும் படலம்' என்ற தலைப்பில் 3 நாள் சர்வதேச கருத்தரங்கம் சென்னை ஸ்டெல்லா மேரிஸ் மகளிர் கல்லூரியில் நேற்று தொடங்கியது. இதில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.பி.சாஹி பேசுகிறார். உடன் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி எஸ்.விமலா, சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் பி.துரைசாமி, யுனிசெப் தலைமை நிர்வாகி (சமூக கொள்கை) பினாகி சக்ராபோர்டி, ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி முதல்வர் ரோசி ஜோசப், தேசிய சட்டப் பல்கலைக்கழக பதிவாளர் ஜி.எஸ்.பாஜ்பாய், பேராசிரியர்கள் எம்.சீனிவாசன், கே.சொக்கலிங்கம், பி.மாதவ சோமசுந்தரம், உதவி பேராசிரியர் மேரி சாந்தா ஜோசப் ஆகியோர் உள்ளனர். படம்: க.ஸ்ரீபரத்

அனைவருக்கும் அடிப்படை உரிமைகள் வழங்கும்

# அரசியல் சட்டம் 21-வது பிரிவை விவாதிக்க மக்கள் முன்வர வேண்டும்

● உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.பி.சாஹி கருத்து

**சென்னை**

அரசியல் சட்டம் 21-வது பிரிவு குறித்து விவாதிக்க மக்கள் முன்வர வேண்டும் என்று உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.பி.சாஹி தெரிவித்தார்.

சென்னை பல்கலைக்கழக குற்றவியல் துறை, இந்திய பாதிக்கப்பட்டோர் இயல் சங்கம் மற்றும் ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி உளவியல் துறை சார்பில் 'அதிகரித்து வரும் பழிவாங்கும் படலம்' என்ற தலைப்பில் 3 நாள் சர்வதேச கருத்தரங்கம் சென்னை ஸ்டெல்லா மேரிஸ் மகளிர் கல்லூரியில் நேற்று தொடங்கியது. இதில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.பி.சாஹி பேசியதாவது:

இந்திய அரசியலமைப்புச் சட்டம் அனைத்து தரப்பு மக்களுக்கும் அடிப்படை உரிமைகளை தந்துள்ளது. அதனால் அரசியல் சட்டம் 21-வது பிரிவு குறித்து சிந்திக்கவும் விவாதிக்கவும் பொதுமக்கள் முன்வர வேண்டும். ஒவ்வொரு வழக்கின் விசாரணையிலும் பாதிக்கப்பட்டவர்களுக்காக சிந்திக்கும் மனம் தண்டனை அறிவிக்கும் போது, குற்றவாளிகளின் நிலையை எண்ணி வேதனை அடைகிறது.

சமூகம் மற்றும் உறவினர்களால் உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் லட்சக்கணக்கான குழந்தைகள் துன்புறுத்தப்படுகின்றனர். இதனால் பள்ளி இடைநிற்றல் அதிகரிப்பதுடன், குழந்தைகளின் வாழ்நாள் முழுவதும் இதன்தாக்கம் இருக்கிறது. செல்போன், கணினி உட்பட தொழில்நுட்ப வளர்ச்சிகளால் ஏற்படும் சைபர் குற்றங்களுக்கு நம் சட்டங்கள் போதுமானதாக இல்லை. இவ்வாறு அவர் பேசினார்.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி எஸ்.விமலா பேசும்போது, "ஒரு குற்றச்சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர், அதை செய்தவர் என இருதரப்பும் இழப்புகளை சந்திக்க வேண்டியுள்ளது. அதனால் குற்றங்களை நடைபெறுவதை தவிர்ப்பதற்கான சாத்தியக்கூறுகளை நோக்கிதான் நாம் நகர வேண்டும். அதற்கான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்" என்றார்.

சென்னை பல்கலைக்கழக குற்றவியல் துறைத் தலைவர் எம்.சீனிவாசன் பேசும்போது, "இந்திய பாதிக்கப்பட்டோர் இயல் சங்கத்தின் மூலம் கடந்த 27 ஆண்டுகளாக குற்றங்களால் பாதிக்கப்படும் நபர்களுக்கான உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம். குற்றத்தால் பாதிக்கப்படுபவர்களின் மனநிலை, அவர்களிடம் உருவாகும் மாற்றம் குறித்து செய்யப்பட்ட ஆய்வுகளில் பழிவாங்கும் எண்ணம் அதிகரிப்பது தெரியவந்தது. எனவே, இந்த விவகாரத்தில் அதிக விவாதங்களை நடத்த வேண்டிய சூழல் தற்போது நிலவுகிறது. அந்த வகையில் பாதிக்கபட்டவர்கள் நலன் சார்ந்து அவர்கள் மீண்டெழுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விவாதிக்கப்படும்" என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் பி.துரைசாமி, தேசிய சட்டப்பல்கலைக்கழக பதிவாளர் ஜி.எஸ். பாஜ்பாய், ராஜீவ்காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு மைய செயற்குழு தலைவர் கே.சொக்கலிங்கம், ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி முதல்வர் ரோசி ஜோசப் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

உளவுத்துறை தகவல் தெரிவித்தும்

# முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காத ஆய்வாளர் ஆயுதப்படைக்கு மாற்றம்

● காசிமேடு ரவுடி கொலையில் ஆணையர் உத்தரவு

**சென்னை**

காசிமேட்டில் ரவுடி கொலை செய்யப்பட்ட விவகாரத்தில் உளவுத் துறை எச்சரித்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கத் தவறியதாக காசிமேடு காவல் நிலைய ஆய்வாளர் ஆயுதப் படைக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

காசிமேடு சிங்காரவேலன் நகர், 2-வது தெருவைச் சேர்ந்தவர் திவாகரன்(28). இவர்மீது 3 கொலை முயற்சி வழக்கு உட்பட பல வழக்குகள் நிலுவையில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் இவர் கடந்த 26-ம் தேதி இரவு காசிமேடு கடல் உணவு வியாபாரிகள் நலச்சங்கம் எதிரே நடந்து சென்று கொண்டிருந்தபோது வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இதுகுறித்து காசிமேடு போலீஸார் வழக்குப்பதிந்து தப்பி ஓடிய கொலையாளிகளை தேடி வந்தனர்.

இந்நிலையில், திவாகரன் கொலை தொடர்பாக அதே பகுதியைச் சேர்ந்த ஆண்டனி, லோகேஷ், ஸ்டீபன், விமல், சரத், வேல்முருகன் ஆகிய 6 பேர் காசிமேடு காவல் நிலையத்தில் நேற்று முன்தினம் சரண் அடைந்தனர். பின்னர், அவர்கள் நீதிமன்ற காவலில் புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்நிலையில் உளவுத் துறை போலீஸார், வியாசர்பாடி காவல் நிலைய சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளர் இசக்கி பாண்டியனை எச்சரித்தும், அவர் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கத் தவறியதால்தான் கொலை நடைபெற்றதாக குற்றச்சாட்டு எழுந்தது. தற்போது சரண் அடைந்த ரவுடி லோகேஷுக்கும் திவாகரனுக்கும் இடையே முன் விரோதம் இருந்துள்ளது.

இந்நிலையில் கொலைக்கு முன்தினம் லோகேஷின் நண்பர் விமலை, திவாகரன் முட்டி போட வைத்து தண்டித்துள்ளார். இதனால், மேலும் பகை அதிகரித்துள்ளது. மீண்டும் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளதாக அறிந்த உளவுப் பிரிவு மற்றும் நுண்ணறிவு பிரிவு போலீஸார், காவல் ஆய்வாளர் இசக்கி பாண்டியனை முன்னெச்செரிக்கை நடவடிக்கை எடுக்குமாறு எச்சரித்தனர். ஆனால், அவர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதையடுத்து கொலைச் சம்பவத்தை தடுக்கத் தவறியதாக இசக்கி பாண்டியனை ஆயுதப் படைக்கு மாற்றி சென்னை காவல் ஆணையர் ஏ.கே.விஸ்வநாதன் உத்தரவிட்டார்.

## வட தமிழக கடலோர மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு

**சென்னை**

சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது:

தமிழகப் பகுதியில் நிலவும் காற்று சுழற்சி காரணமாக வட தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. இதர பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மழை பெய்ய வாய்ப்பில்லை.

வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு எடுக்கப்பட்ட வெப்ப நிலை அளவுகளின்படி அதிகபட்சமாக மதுரை தெற்கில் 97 டிகிரி, மதுரை விமான நிலையம், கரூர் பரமத்தி ஆகிய இடங்களில் தலா 95 டிகிரி, கோவை, கன்னியாகுமரி, சேலம் ஆகிய பகுதிகளில் தலா 93 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில் பதிவாகியுள்ளது.இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

# அலுவலக உதவியாளர் பணிக்கு விண்ணப்பிக்கலாம்

● கல்லூரிக் கல்வி இயக்ககம் அறிவிப்பு

**சென்னை**

கல்லூரிக் கல்வி சென்னை மண்டல இயக்குநர் இரா.ராவணன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

கல்லூரிக் கல்வி சென்னை மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளர் பணியில் 2 இடங்கள் (எஸ்சி-அருந்ததியர் (ஆதரவற்ற விதவை) மற்றும் எம்பிசி வகுப்பு) காலியாக உள்ளன. இப்பணிக்கு 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். அருந்ததியர் பிரிவுக்கு வயது 18 முதல் 35 வரையிலும், எம்பிசி பிரிவுக்கு 18 முதல் 32 வரையிலும் இருக்க வேண்டும்.

கல்விச் சான்றிதழ், வயது சான்றிதழ், சாதி சான்றிதழ் நகல்களுடன் வெள்ளைத்தாளில் தன் விவரங்களை குறிப்பிட்டு (பாஸ்போர்ட் போட்டோ, முகவரி, செல்போன் எண் ஆகியவற்றுடன்) "இணை இயக்குநர், கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம், சென்னை மண்டலம், சைதாப்பேட்டை, சென்னை 600 015" என்ற முகவரிக்கு மார்ச் 16-ம் தேதி மாலை 5 மணிக்குள் நேரில் அல்லது தபாலில் வந்தடைய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



▲ சென்னை நந்தனம் வீட்டு வசதி வாரிய வளாகத்தில் தமிழக அரசு சார்பில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணுவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வீடு. வீட்டின் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி நடந்து வருகிறது. படம்: ம.பிரபு

மிஸ்டுகால் திட்டத்தின் மூலம்

# தமிழகத்தில் 3.5 லட்சம் பேரை சேர்க்க ஆம் ஆத்மி இலக்கு

**சென்னை**

மிஸ்டு கால் திட்டத்தின் மூலம், வரும் மார்ச் 23-ம் தேதிக்குள் 3.5 லட்சம் பேரை சேர்க்க ஆம் ஆத்மி இலக்கு நிர்ணயித்துள்ளது.

இதுதொடர்பாக ஆம் ஆத்மி கட்சியின் மாநில இணைச் செயலாளர் டி.சுதா சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "கட்சியின் தேசிய கட்டமைப்பை வலுப்படும் வகையில் மிஸ்டுகால் திட்டத்தை நாடு முழுவதும் செயல்படுத்தி வருகிறோம். டெல்லி தேர்தல் முடிவுக்கு பிறகு, அடுத்த 24 மணி நேரத்தில் பல்வேறு மாநிலங்களில் இருந்து மொத்தம் 10 லட்சம் பேர் ஆதரவு தெரிவித்து கட்சியில் இணைந்துள்ளனர். தமிழகத்தில் எங்கள் கட்சி மிஸ்டுகால் திட்டத்தை பெரிய அளவில் செயல்படுத்தவுள்ளது.

தமிழகத்தில் மாவட்டங்கள் தோறும், தொகுதிகள், வார்டுகளில் மக்களை நேரடியாக சந்தித்து எங்கள் கட்சியின் கொள்கைகளையும், டெல்லியில் செயல்படுத்தி வரும் நலத்திட்டங்கள் குறித்தும் மக்களிடம் எடுத்துரைக்கவுள்ளோம். தமிழகத்தில் மிஸ்ட்கால் திட்டம் மூலம் வரும் 23-ம் தேதிக்குள் புதியதாக 3.5 லட்சம் பேரை கட்சியில் சேர்க்கவுள்ளோம்" என்றார்.

# வெறுப்பு பேச்சுகளை கட்டுப்படுத்த குற்றவியல் நடைமுறை சட்டத் திருத்தம்

● பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தல்

**சென்னை**

வெறுப்பு பேச்சுகளை கட்டுப்படுத்த குற்றவியல் நடைமுறை சட்டத் திருத்தத்தை மத்திய அரசு கொண்டுவர வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இந்தியாவில் அரசியல் மற்றும் சமூகத் தளங்களில் அண்மைக் காலங்களில் நடக்கும் நிகழ்வுகளைப் பார்த்தால், இனிவரும் காலங்களில் மக்கள் நட்புடனும், நல்லிணக்கத்துடனும் வாழ முடியுமா என்பதே சந்தேகமாக இருக்கிறது. அடுத்தவர்கள் மீது வெறுப்பை உமிழக்கூடிய பேச்சுகளும், தீய பிரச்சாரங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதே இதற்கு காரணம். வெறுப்பு பேச்சு, வெறுப்பு பிரச்சாரம் ஆகியவற்றால் அடிக்கடி மோதல்கள் நிகழ்வது வாடிக்கையாகிவிட்டது.



தேர்தலின்போது வெறுப்புப் பிரச்சாரங்களை கட்டவிழ்த்து விட்டு, வாக்குகளை வாங்கத் துடிப்பதை சில கட்சிகள் வாடிக்கையாக வைத்துள்ளன. இத்தகைய பிரச்சாரத்தை செய்வதற்காக கோடிகளை கொட்டிக் கொடுத்து தனியார் அமைப்புகளை நியமிக்கும் கட்சிகளும் உள்ளன.

ஒரு நாட்டில் பேச்சு சுதந்திரமும், கருத்து சுதந்திரமும் பாதுகாக்கப்பட வேண்டியது எந்த அளவுக்கு முக்கியமோ, அதைவிட வெறுப்பு பேச்சுகளும், வெறுப்பு பிரச்சாரமும் முறியடிக்கப்பட வேண்டியதும் முக்கியமாகும். நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் வெறுப்பு பேச்சுகள் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள நிலையில், அதைக் கட்டுப்படுத்துவதற்காக கடுமையான தண்டனைகளுடன் கூடிய சட்டப்பிரிவுகளை ஏற்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

எனவே, அனைத்துப் பிரிவினருக்கும் எதிரான வெறுப்பு பேச்சுகளைத் தடுக்கும் வகையில் இந்திய தண்டனை சட்டத்தில் 153சி, 505ஏ ஆகிய பிரிவுகளை சேர்ப்பதற்கான குற்றவியல் நடைமுறை சட்டத் திருத்த மசோதாவை நாடாளுமன்ற நிதிநிலை அறிக்கைக் கூட்டத்தொடரில் மத்திய அரசு தாக்கல் செய்து நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

டெல்லி கலவரத்தை ஒடுக்க

# தமிழக காவல் படையை அனுப்ப வேண்டும்

● பழ.நெடுமாறன் வலியுறுத்தல்

**சென்னை**

டெல்லி கலவரத்தை ஒடுக்க தமிழக காவல் படையை அனுப்ப வேண்டும் என்று தமிழர் தேசிய முன்னணி தலைவர் பழ.நெடுமாறன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக நேற்று வெளியிட்ட அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:

குடியுரிமைச் சட்டத்துக்கு எதிராக டெல்லியில் நடைபெற்று வந்த போராட்டத்துக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தின் விளைவாக கடந்த 4 நாட்களாக டெல்லியில் மூண்டெழுந்த கலவரத்தில் 35-க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். 500-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். கலவரம் நடைபெற்றபோது காவல்துறை கைகட்டி வேடிக்கைப் பார்த்தது என்பது அதிர்ச்சியை அளித்துள்ளது.

1947-ல் இந்தியா பிரிக்கப்பட்டபோது டெல்லியில் பெரும் மதக்கலவரம் மூண்டது. காவல் துறைக்குள்ளேயே மதமோதல் இருந்ததால் கலவரம் அதிகரித்ததே தவிர அடங்கவில்லை. அப்போது மத்திய உள்துறை அமைச்சராக இருந்த வல்லப பாய் பட்டேல் உடனடியாக சென்னை காவல்துறை ஆணையாளராக இருந்த சஞ்சீவியை பணியில் அமர்த்தினார்.

இரண்டே நாட்களில் டெல்லி கலவரம் ஒடுக்கப்பட்டு மக்களுக்குப் பாதுகாப்புக் கிடைத்தது. பல மாதங்கள் தொடர்ந்து தமிழ்நாட்டுக் காவல்படையினர் டெல்லியில் அமைதியை நிலைநிறுத்தினர் என்பது வரலாறாகும். அதுபோல இப்போதும் மதவேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட தமிழக காவல் படையை டெல்லிக்கு அனுப்பிக் கலவரத்தை ஒடுக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு பழ.நெடுமாறன் கேட்டுகொண்டுள்ளார்.

திமுக, அதிமுக இல்லாமல்

# காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளுடன் கூட்டணி அமைக்க வாய்ப்பு

● மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் தகவல்

**சென்னை**

திமுக, அதிமுக இல்லாமல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திக்க வாய்ப்பு உள்ளதாக மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் கூறியுள்ளார்.

மக்கள் நீதி மய்யம் தொடங்கப்பட்டு 2 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இதையொட்டி, கட்சித் தலைவர் கமல்ஹாசன் சென்னையில் செய்தியாளர்களுடன் நேற்று கலந்துரையாடினார். அவர்களது கேள்விகளுக்கும் பதில் அளித்தார். அப்போது, அவர் கூறியதாவது:

உலக அரங்கில் அதிக தொழில் தொடங்குவோர் வரிசையில் இந்தியா 2-ம் இடத்தில் உள்ளது. ஆனால், இந்த முதலீட்டில் தமிழகத்தின் பங்கு வெறும் 0.79 சதவீதம்தான். தமிழகத்தில் வேலைவாய்ப்பின்மை 6.2 சதவீதமாக உயர்ந்துள்ளது.

### புரட்சிகர பொருளாதார திட்டம்

எல்லோருக்கும் வளமான வாழ்க்கை என்பது வெற்றுக் கனவு அல்ல. புரட்சிகரமான பொருளாதாரத் திட்டத்தால் சாத்தியமாகக் கூடியதுதான். வறுமையை ஒழிப்பதோடு, அனைவருக்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் இந்த புரட்சியினால் வேலை தேடும் இளைஞர்கள் மட்டுமில்லாமல் மாணவர்கள், இல்லத்தரசிகள் என எல்லோருக்கும் வருவாய் வாய்ப்புகள் உருவாகும்.

இல்லத்தரசிகளின் வேலைக்கு இதுவரை அங்கீகாரமோ, ஊதியமோ இல்லை. வீட்டில் அவர்கள் செய்யும் பணிக்கும் ஊதியம் வழங்கி வீட்டில் இருந்தபடியே அவர்களது வாழ்வாதாரத்தையும், நாட்டின் பொருளாதாரத்தையும் பெருக்க வழிவகை செய்ய உள்ளோம். மாணவர்கள், மீனவர்கள், விவசாயிகள் முதல் பெரும் தொழிலதிபர்கள் வரை அனைவருக்கும் வாய்ப்புகளை வழங்கும் இந்த புரட்சிகரமான பொருளாதாரத் திட்டத்தால், வளமான வாழ்க்கை எல்லோருக்குமானது என்பதை உறுதிப்படுத்துவோம்.

உலகத் தரத்தில் கட்டமைப்பு,



மாணவர்களுக்கு தரமான கல்வி, அனைத்து விவசாயிகளுக்கும் நேரடி சந்தை, மீனவர்களுக்கு உயிர் காக்கும் தொழில்நுட்பம் மேம்பாடு, ஒவ்வொரு தமிழனுக்கும் சொந்த வீடு என எல்லோரையும் வளமாக்கும் திட்டமாகும்.

இது தமிழகத்தை மிக வேகமாக வளரும் மாநிலமாக மட்டுமல்லாமல் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக மாற்றும். பெரும் தொழிலதிபர்கள் 50 பேர் நமது பொருளாதாரத்துக்கு தேவைதான் என்றாலும், 5 லட்சம் சிறுதொழில் முனைவோர் நம் பொருளாதாரத்தை இன்னும் வேகமாக வலுப்படுத்துவார்கள்.

### உண்மையான தீர்வு

புரட்சிகரமான பொருளாதாரத் திட்டம், மாற்றத்தை நோக்கி பயணிக்கும் அரசியல்பாதை, அதை வழிநடத்த நேர்மையான, திறமையான, தைரியமான, புத்துணர்ச்சியுடன் கூடிய தலைமை ஆகியவைதான் தமிழகத்தின் பிரச்சினைகளுக்கு உண்மையான தீர்வு.

முதல்வர் வேட்பாளர்களில் இத்தகைய தலைமைப் பண்புகள் கொண்டவர்கள் யாரும் இல்லையா என்று கேள்வி எழுகிறது. கண்டிப்பாக இல்லை.

இதில் ரஜினியும் உண்டா என்கிறீர்கள். ரஜினியும், நானும் தமிழகத்தின் மேம்பாடு குறித்துதான் பேசிக்கொண்டு இருக்கிறோம். அதில் கொள்கை ரீதியாக மாறுதல் இருக்கலாம் என்று பரவலாக பேச்சு வருகிறது. ரஜினி சமீபத்தில் பேசியுள்ள விஷயங்கள் சற்றே மாறுபட்ட கண்ணோட்டத்துடன், தமிழகத்தின், தேசத்தின் நலன் நோக்கியதாக, அணி சாராத நிலையில் இருப்பதாக தெரிகிறது. அதனால், அவருடன் பேச்சு நடத்தவும் வாய்ப்பு இருக்கிறது. தேவைப்பட்டால் இணைந்து செயல்படுவோம் என்றுதான் முன்பும் கூறியுள்ளோம்.

நல்ல எதிர்காலத்தை நோக்கி தமிழகத்தை வழிநடத்த வேண்டும் என்பதே மக்கள் நீதி மய்யத்தின் நோக்கம். அதற்காக, நேர்மையை நோக்கி நகர துணியும் அனைவரும் ஒன்றுசேருவார்கள் என்று நம்புகிறோம். திமுக, அதிமுக இல்லாமல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளோடு சேர்ந்து தேர்தலை சந்திப்பதற்கான வாய்ப்பும் கட்டாயம் இருப்பதாகவே நினைக்கிறேன்.

இவ்வாறு கமல் கூறினார்.

பொன்மொழி கல்வி கற்பதும், கற்பிப்பதும் மிகவும் முக்கியம். அதேநேரத்தில் சிறந்த மனிதனை உருவாக்குவதாக அவை அமைய வேண்டும்.
- முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி

**இணையம்:** www.brandfactoryonline.com இணைய தளத்தில் பெப்பா ஜீன்ஸ், லீ கூப்பர், லீவைஸ், லோட்டோ, பேசிக்ஸ், ஆலன்சோலி, கில்லர் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச முன்னணி பிராண்ட்களில் ஆண், பெண், குழந்தைகளுக்கு தேவையான அனைத்து வகை ஆடைகளையும், ஷூக்கள், பெல்ட், வாலட், டை போன்றவற்றையும் வாங்க முடியும்.

**பொதுஅறிவு:** ஐங்குறுநூறு நூலில் 5 நிலம் சார்ந்த திணைகளில் 500 பாடல்கள் உள்ளன. மருதத்தில் ஓரம்போகியார் 100 பாடல்களை இயற்றியுள்ளார். அதேபோல நெய்தலில் அம்மூவனார், குறிஞ்சியில் கபிலர், பாலையில் ஓதலாந்தையார், முல்லையில் பேயனார் தலா 100 பாடல்களை இயற்றியுள்ளனர்.



▲ முதல்வர் பழனிசாமியை சென்னை தலைமை செயலகத்தில் மத்திய கப்பல் போக்குவரத்து, ரசாயனம் மற்றும் உரத்துறை இணை அமைச்சர் மன்சுக் எல்.மண்டாவியா மரியாதை நிமித்தமாக சந்தித்தார். உடன், தலைமைச் செயலாளர் க.சண்முகம், மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் சஞ்சய் பண்டோபத்யாய், சென்னை துறைமுக தலைவர் பி.ரவீந்திரன், ஐபிஆர்சிஎல் மேலாண்மை இயக்குநர் ஏ.கே.அகர்வால், காமராஜர் துறைமுக தலைவர் சுனில் பாலிவால் உள்ளிட்டோர்.

### பொதுப்பணி, நெடுஞ்சாலைத்துறைகளில் புதிய திட்டங்கள்

# உயர் அதிகாரிகளுடன் முதல்வர் ஆய்வு

■ சென்னை

சட்டப்பேரவை மானிய கோரிக்கை விவாதம் தொடங்கப்பட உள்ளதை தொடர்ந்து, பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறைகளின் புதிய திட்டங்கள் தொடர்பாக அதிகாரிகளுடன் முதல்வர் பழனிசாமி 2 நாட்களாக ஆலோசனை நடத்தினார்.

தமிழக சட்டப்பேரவையில் கடந்த பிப்.14-ம் தேதி 2020-21-ம் நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையை துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார். தொடர்ந்து நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் பிப்.20-ம் தேதி வரை நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து துறைகள் தோறும் நிதி ஒதுக்குவதற்கான மானிய கோரிக்கை விவாதத்துக்காக பேரவை மார்ச் 9-ம் தேதி கூடும் என்றும், இதற்கான அலுவல் ஆய்வுக்குழு கூட்டம் வரும் மார்ச் 2-ம் தேதி நடைபெறும் என்றும் சட்டப்பேரவை செயலகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், துறைகள் தோறும் அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, சட்டப்பேரவையில் புதிய திட்டங்கள் அறிவிப்பு, பழைய திட்டங்களை தொடருவது, நிதி ஒதுக்குவது ஆகியவை குறித்து அமைச்சர்கள் ஆலோசித்து வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக முதல்வர் பழனிசாமியும் கடந்த இரு தினங்களாக ஆய்வு செய்து வருகிறார்.

#### அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்

நேற்று முன்தினம், நெடுஞ்சாலைத்துறை தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. சட்டப்பேரவையில் மானிய கோரிக்கை இறுதியில் துறை சார்பில் அறிவிக்கப்பட வேண்டிய திட்டங்கள், ஏற்கெனவே கடந்தாண்டில் அறிவிக்கப்பட்டு தற்போதுவரை செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களின் நிலை குறித்தும் அதிகாரிகளுடன் விவாதித்து அவற்றை விரைவில் முடிக்க அறிவுறுத்தினார்.

இதையடுத்து, நேற்று தலைமைச் செயலகத்தில் உள்ள கூட்ட அரங்கில், பொதுப்பணித்துறை திட்டங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார். அப்போது தலைமைச் செயலர் கே.சண்முகம், பொதுப்பணித் துறை செயலர் கே.மணிவாசன், தமிழ்நாடு நதிநீர் பாதுகாப்புக்கழக தலைவர் கே.சத்யகோபால், காவிரி தொழில்நுட்பக் குழு தலைவர் சுப்பிரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

#### நீர்பாசன திட்டங்கள்

இக்கூட்டத்தில் குடிமராமத்து திட்டம், மாநிலங்களுக்கிடையிலான நதிநீர் பங்கீடு, அத்திக்கடவு - அவிநாசி திட்டம், பாண்டியாறு - புன்னம்புழா திட்டம், காவிரி நதிநீர் இணைப்பு திட்டங்கள் என பல்வேறு திட்டங்கள் குறித்தும் பொதுப்பணித் துறையினருடன் ஆலோசனை நடத்தினார்.

### போராட்டத்தில் ஈடுபட்ட அரசு டாக்டர்களை

# இடமாற்றம் செய்து அரசு பிறப்பித்த உத்தரவு ரத்து

● அத்தியாவசிய பணிகளில் இருப்போர் போராட உரிமை இல்லை என நீதிமன்றம் கருத்து

■ சென்னை

போராட்டத்தில் ஈடுபட்ட அரசு டாக்டர்களை தொலைதூரத்துக்கு இடமாற்றம் செய்து அரசு பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதேபோல போராட, டாக்டர்களுக்கு உரிமை இல்லை எனவும் கருத்து தெரிவித்துள்ளது.

ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறுகோரிக்கைகளைவலியுறுத்தி அரசு டாக்டர்கள் கடந்த ஆண்டு அக்.25-ம் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழக அரசு நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பிறகு போராட்டம் கைவிடப்பட்டது.

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்ட 100-க்கும் மேற்பட்ட டாக்டர்கள் சென்னையில் இருந்து தொலைதூர கிராமங்களுக்கும், மலைப்பிரதேசங்களுக்கும் அதிரடியாக இடமாறுதல் செய்யப்பட்டனர். மேலும் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கும் குற்றச்சாட்டு குறிப்பாணையும் வழங்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து, சென்னை ஸ்டான்லி மருத்துவமனை டாக்டர் பி.பாலகிருஷ்ணன் தன்னை ராமநாதபுரத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை எதிர்த்தும், தன் மீதான குற்றச்சாட்டு குறிப்பாணையை ரத்து செய்யக் கோரியும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இதேபோல மேலும் பல டாக்டர்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்கை ஏற்கெனவே விசாரித்த நீதிபதி எம்.தண்டபாணி, குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு மட்டும் தடை விதித்து உத்தரவிட்டு இருந்தார். ஆனால், இடமாறுதலுக்கு தடை விதிக்கவில்லை.

இந்நிலையில் இந்த வழக்கு நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் சி.கனகராஜ், கார்ல்மார்க்ஸ் உள்ளிட்டோரும், அரசு தரப்பில் தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண், சிறப்பு அரசு ப்ளீடர் ஏ.என். தம்பிதுரை ஆகியோரும் ஆஜராகி வாதிட்டனர்.

> உயிர்காக்கும் இன்றியமையாத பணியில் ஈடுபட்டுள்ள அரசு டாக்டர்களின் சேவை என்பது மகத்தானது. ஆனால் அந்த டாக்டர்கள் எக்காரணம் கொண்டும் போராடுவதையோ அல்லது பணி புறக்கணிப்பு செய்வதையோ தங்களது உரிமையாக எடுத்துக்கொள்ள முடியாது.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் நேற்று பிறப்பித்துள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது:

உயிர்காக்கும் இன்றியமையாத பணியில் ஈடுபட்டுள்ள அரசு டாக்டர்களின் சேவை என்பது மகத்தானது. ஆனால் அந்த டாக்டர்கள் எக்காரணம் கொண்டும் போராடுவதையோ அல்லது பணி புறக்கணிப்பு செய்வதையோ தங்களது உரிமையாக எடுத்துக் கொள்ள முடியாது.

அதேநேரம் நோயாளிகளிடம் இன்முகத்துடன், அன்பு காட்டி மருத்துவம் பார்த்தால் மட்டுமே நோயாளிகள் பரிபூரணமாக குணமடைய முடியும். அதற்கு அந்த டாக்டர்கள் மனதிருப்தியுடன், மகிழ்ச்சியாகப் பணிபுரிய வேண்டும்.

ஊதிய உயர்வு, பதவி உயர்வு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை வலியுறுத்தி அரசு டாக்டர்கள் பல நாட்களாக அரசிடம் கோரிக்கை விடுத்தும், அதில் பலன் கிடைக்காமல் போனதால் தான் போராட்டம் என்ற முடிவுக்கு வந்துள்ளனர். இந்தப் போராட்டமும் நோயாளிகளுக்கு பாதிப்பின்றிதான் நடத்தப்பட்டுள்ளதாக டாக்டர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர்களின் போராட்டத்துக்கு அரசுதான் முக்கிய காரணம். அரசு அவர்களின் கோரிக்கை தொடர்பாக முன்கூட்டியே முடிவு எடுத்து இருந்தால் இந்தச் சூழல் ஏற்பட்டு இருக்காது. இந்தப் போராட்டத்தில் மொத்தம் 18 ஆயிரம் அரசு டாக்டர்கள் ஈடுபட்டுள்ள நிலையில், அதில் குறிவைத்து 135 டாக்டர்கள் மட்டுமே தொலைதூரங்களுக்கு இடமாறுதல் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீது மட்டுமே குற்றச்சாட்டு குறிப்பாணையும் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல ஒரு இயக்குநரகத்தில் பணிபுரிந்த டாக்டர்கள், பிற இயக்குநரகத்தின் கீழ் பணிமாறுதல் செய்யப்பட்டுள்ளனர். இதனால் அவர்களின் திறமை மற்றும் பணி அனுபவம் வீணடிக்கப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது போன்ற திறமையான டாக்டர்களின் சேவையை அரசு ஒருபோதும் புறந்தள்ளி அவர்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கையை மேற்கொள்ளக்கூடாது.

எனவே போராட்டத்தில் ஈடுபட்ட அரசு டாக்டர்களை இடமாறுதல் செய்தும், அவர்கள் மீது குற்றச்சாட்டு குறிப்பாணையும் வழங்கி பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் ரத்து செய்யப்படுகின்றன. அவர்கள் முன்பு எங்கு பணிபுரிந்தார்களோ அதே இடத்தில் மீண்டும் அவர்களை பணியமர்த்த வேண்டும்.

அதுபோல அரசு டாக்டர்களின் இந்த நீண்டகாலப் பிரச்சினை தொடர்பாக அரசும், அரசு டாக்டர்கள் சங்கமும் மனமுவந்து பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் இந்த பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண வேண்டும். இவ்வாறு உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

### மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான

# தேர்தல் நடத்தும் அதிகாரியாக பேரவை செயலர் நியமனம்

● வேட்புமனு தாக்கல் மார்ச் 6-ல் தொடக்கம்

■ சென்னை

தமிழகத்தில் இருந்து மாநிலங்களவைக்கு 6 புதிய உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான தேர்தல் நடத்தும் அதிகாரியாக பேரவைச்செயலர் கே.சீனிவாசனை இந்திய தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

மாநிலங்களவையில் தமிழகத்துக்கு 18 உறுப்பினர்கள் உள்ளனர். இதில், அதிமுகவைச் சேர்ந்த சசிகலா புஷ்பா, கே.செல்வராஜ், விஜிலா சத்யானந்த், எஸ்.முத்துக்கருப்பன், திமுகவைச் சேர்ந்த திருச்சி சிவா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த டி.கே.ரங்கராஜன் ஆகியோரின் பதவிக்காலம் வரும் ஏப்ரல் 2-ம் தேதியுடன் நிறைவடைகிறது.

#### புதிய உறுப்பினர்கள் தேர்வு

இதை முன்னிட்டு, புதிய உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான தேர்தலை இந்திய தேர்தல் ஆணையம் கடந்த 25-ம் தேதி அறிவித்தது. இந்நிலையில், தேர்தல் நடத்தும் அதிகாரி, உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி ஆகியோரை இந்திய தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

> ▼ மனுக்கள் மார்ச் 16-ம் தேதி பரிசீலிக்கப்படும். மார்ச் 18-ம் தேதி மனுக்களை திரும்ப பெற கடைசி நாளாகும். மார்ச் 26-ம் தேதி காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும்.

இதுகுறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் இருந்து தேர்வு செய்யப்பட்ட 6 உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவதைத் தொடர்ந்து, அந்த காலியிடங்களை நிரப்புவதற்கான தேர்தல் அறிவிக்கை மார்ச் 6-ம் தேதி வெளியிடப்பட்டு, அன்றே வேட்புமனு தாக்கல் தொடங்கும். வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ய மார்ச் 13-ம் தேதி கடைசி நாளாகும்.

#### மார்ச் 26-ல் தேர்தல்

மனுக்கள் மார்ச் 16-ம் தேதி பரிசீலிக்கப்படும். மார்ச் 18-ம் தேதி மனுக்களை திரும்ப பெற கடைசி நாளாகும். மார்ச் 26-ம் தேதி காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும். அன்று மாலை 5 மணிக்கு வாக்கு எண்ணிக்கை நடைபெறும்.

தமிழக சட்டப்பேரவை செயலகத்தின் செயலாளர் கே.சீனிவாசனை தேர்தல் நடத்தும் அதிகாரியாகவும், கூடுதல் செயலாளர் பா.சுப்பிரமணியத்தை உதவி தேர்தல் நடத்தும் அதிகாரியாகவும் இந்திய தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. வேட்புமனுக்களை பிற ஆவணங்களுடன் தேர்தல் நடத்தும் அதிகாரி முன்போ அல்லது உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி முன்போ தலைமைச் செயலகத்தில் உள்ள அவர்கள் அலுவலகத்தில் மார்ச் 6-ம் தேதி முதல் 13-ம் தேதி வரை காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை, பொது விடுமுறை நாளான மார்ச் 8-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை தவிர பிற நாட்களில் தாக்கல் செய்யலாம். தேவைப்பட்டால் சட்டப்பேரவை குழுக்கள் அறையில் மார்ச் 23-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### அடுத்தடுத்த நாளில் 2 எம்எல்ஏக்கள் மரணம்

# பேரவையில் திமுக பலம் 98 ஆக குறைந்தது

● 15-வது சட்டப்பேரவையில் இதுவரை 8 எம்எல்ஏக்கள் மறைவு

■ சென்னை

அடுத்தடுத்த நாளில் 2 எம்எல்ஏக்கள் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து சட்டப்பேரவையில் திமுகவின் பலம் 98 ஆக குறைந்துள்ளது.

கடந்த 2016-ல் நடந்த 15-வது சட்டப்பேரவைத் தேர்தலில் வென்று தொடர்ந்து 2-வது முறையாக அதிமுக ஆட்சி அமைத்தது. ஜெயலலிதா முதல்வரானார். அன்று முதல் இதுவரை 15-வது சட்டப்பேரவையில் 8 எம்எல்ஏக்கள் மரணம் அடைந்துள்ளனர்.

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்டு வென்ற எஸ்.எம்.சீனிவேல், எம்எல்ஏவாக பதவியேற்பதற்கு முன்பே காலமானார். அதைத் தொடர்ந்து அதிமுக பொதுச்செயலாளராகவும், முதல்வராகவும் இருந்த ஜெயலலிதா (ஆர்.கே.நகர்), ஏ.கே.போஸ் (திருப்பரங்குன்றம்), ஆர்.கனகராஜ் (சூலூர்) ஆகிய 4 அதிமுக எம்எல்ஏக்கள் மரணம் அடைந்தனர்.

திமுக தலைவராக இருந்த கருணாநிதி (திருவாரூர்), கே.ராதாமணி (விக்கிரவாண்டி), கே.பி.பி.சாமி (திருவொற்றியூர்), எஸ். காத்தவராயன் (குடியாத்தம்) ஆகிய 4 எம்எல்ஏக்கள் மரணம் அடைந்துள்ளனர். இதில், கே.பி.பி.சாமி நேற்று முன்தினமும், காத்தவராயன் நேற்றும் அடுத்தடுத்த நாளில் உயிரிழந்தனர்.

தகுதி நீக்கம் செய்யப்பட்ட அதிமுக எம்எல்ஏக்களின் தொகுதிகள், மரணம் அடைந்த எம்எல்ஏக்களின் தொகுதிகளில் என இதுவரை 25 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடந்துள்ளது. இதில் திருப்பரங்குன்றம் தொகுதியில் 2 முறை இடைத்தேர்தல் நடந்துள்ளது.

அடுத்தடுத்த நாளில் 2 எம்எல்ஏக்களின் மறைவால் சட்டப்பேரவையில் திமுகவின் பலம் 98 ஆக குறைந்துள்ளது. தற்போதைய நிலையில் சட்டப்பேரவையில் கட்சிகளின் பலம்:

பேரவைத் தலைவர் உள்பட அதிமுக - 125, திமுக - 98, காங்கிரஸ் - 7, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் - 1, சுயேச்சை (டிடிவி தினகரன்) - 1 என 232 எம்எல்ஏக்கள் உள்ளனர்.

#### இடைத்தேர்தலுக்கு வாய்ப்பில்லை

15-வது சட்டப்பேரவையின் ஆயுட்காலம் ஓராண்டுக்கு மேலாக இருப்பதால் தற்போது காலியாக உள்ள திருவொற்றியூர், குடியாத்தம் தொகுதிகளுக்கு சட்டப்படி இடைத்தேர்தல் நடத்தலாம். ஆனால், 2021 ஏப்ரல் அல்லது மே மாதத்தில் சட்டப்பேரவை பொதுத் தேர்தல் நடக்க இருப்பதால் இடைத்தேர்தலுக்கு வாய்ப்பு மிகக் குறைவாகவே இருப்பதாக கூறப்படுகிறது.

## மத்திய அமைச்சருக்கு முதல்வர் பழனிசாமி கடிதம்

■ சென்னை

ஈரானில் சிக்கியுள்ள தமிழகத்தைச் சேர்ந்த 300 மீனவர்கள் உடனடியாக நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் பழனிசாமி கடிதம் எழுதியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது: ஈரானில் உள்ள பல்வேறு துறைமுகங்களில் நிறுத்தப்பட்டுள்ள மற்றும் இயக்கப்பட்டுவரும் பல நிறுவனங்களுக்குச் சொந்தமான மீன்பிடிக் கப்பல்களில் தமிழகத்தைச் சேர்ந்த 300 பேர் உட்பட இந்தியாவைச் சேர்ந்த 450 மீனவர்கள் பணியாற்றி வருகின்றனர்.

ஈரானில் கரோனா வைரஸ் (கோவிட்-19) தாக்குதல் கண்டுபிடிக்கப்பட்டதால், விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதனால், தமிழக மீனவர்கள் தற்போது ஈரானின் போர்ட் கிஷ், சீரு மற்றும் இதர பகுதிகளில் தவித்து வருவதாகத் தெரியவருகிறது.

எனவே, ஈரானில் உள்ள இந்தியத் தூதரகம் மூலம் மீனவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி, அவர்கள் பாதுகாப்பாக தமிழகம் திரும்ப நடவடிக்கை எடுக்கும்படி தங்கள் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

### குடியுரிமை சட்டத்துக்கு ஆதரவாக மாவட்ட தலைநகரங்களில் பேரணி

# நாடு முழுவதும் என்பிஆர் கணக்கெடுப்பை யாராலும் தடுக்க முடியாது

● பாஜக மூத்த தலைவர் இல.கணேசன் திட்டவட்டம்

■ சென்னை

நாடு முழுவதும் தேசிய மக்கள் தொகை பதிவேடு (என்பிஆர்) கணக்கெடுப்பு நடப்பதை யாராலும் தடுக்க முடியாது என்று பாஜக மூத்த தலைவர் இல.கணேசன் தெரிவித்துள்ளார்.

குடியுரிமைச் சட்டத்துக்கு ஆதரவாக தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் பாஜகவினர் நேற்று பேரணி நடத்தினர்.

சென்னை மாநகர பாஜக சார்பில் சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகே நடந்த பேரணியில் பாஜக மூத்த தலைவர் இல.கணேசன், மாநில பொதுச்செயலாளர் கே.எஸ். நரேந்திரன், சென்னை கோட்ட பொறுப்பாளர் சக்கரவர்த்தி, ஜெய்சங்கர், நடிகர் ராதாரவி, முஸ்லிம் ராஷ்ட்ரீய மஞ்ச் அமைப்பின் தமிழக தலைவர் பாத்திமா அலி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

#### திமுகவை கண்டித்து கோஷம்

பேரணியில் பங்கேற்றவர்கள் குடியுரிமைச் சட்டம், என்பிஆர், தேசிய குடிமக்கள் பதிவேடு (என்ஆர்சி) ஆகியவற்றுக்கு ஆதரவாகவும், குடியுரிமைச் சட்டத்துக்கு எதிராக போராடும் திமுகவை கண்டித்தும் கோஷமிட்டனர்.

அப்போது இல.கணேசன் பேசியதாவது:

குடியுரிமைச் சட்டத்தை ஒரே நாளில் ரகசியமாக மத்திய பாஜக அரசு கொண்டு வந்துவிடவில்லை. பாஜக தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே ஒவ்வொரு தேர்தல் அறிக்கையிலும் குடியுரிமைச் சட்டம், என்ஆர்சி கொண்டு வருவோம் என்றுமக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தோம். தேர்தல்களின் போது மக்களிடம் பிரச்சாரமும் செய்தோம். அதை ஏற்று மக்கள் பாஜகவை ஆட்சியில் அமர்த்தி உள்ளனர்.

மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் விவாதம் நடத்தி சட்டப்படி குடியுரிமைச் சட்டத்தை கொண்டு வந்துள்ளோம்.

#### முஸ்லிம்களுக்கு பாதிப்பில்லை

இந்தச் சட்டத்தால் இந்தியாவில் வசிக்கும் யாருக்கும் குறிப்பாக முஸ்லிம்களில் ஒருவருக்குகூட பாதிப்பு இல்லை. ஆனாலும், திமுக உள்ளிட்ட கட்சிகள் முஸ்லிம்களை தூண்டிவிட்டு போராட்டம் நடத்தி வருகின்றன.

முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற வேண்டும் என்ற குறுகிய அரசியல் லாபத்துக்காக, நாட்டு நலனுக்காக கொண்டுவரப்பட்ட சட்டத்தை திமுக உள்ளிட்ட கட்சிகள் எதிர்க்கின்றன.

என்ன நடந்தாலும் நாடு முழுவதும் என்பிஆர் கணக்கெடுப்பு நடப்பதை யாராலும் தடுக்க முடியாது. முஸ்லிம் சமுதாயத்தினர் திமுகவை நம்பி ஏமாறாமல் நாட்டு நலனுக்காக குடியுரிமைச் சட்டத்தை ஏற்க வேண்டும்.

இவ்வாறு இல.கணேசன் பேசினார்.

#### தலைமை செயலரிடம் மனு

பின்னர் இல.கணேசன், கே.எஸ். நரேந்திரன், சக்கரவர்த்தி, ஜெய்சங்கர் உள்ளிட்ட பாஜக நிர்வாகிகள் தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர் கே.சண்முகத்தை சந்தித்து மனு அளித்தனர்.

அதில், 'குடியுரிமைச் சட்டத்துக்கு எதிரான போராட்டம் என்ற பெயரில் தமிழகத்தில் வன்முறையை தூண்டுவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், குடியுரிமைச் சட்டத்துக்கு எதிரான போராட்ட மேடைகளில் மத மோதலைத் தூண்டும் வகையில் பேசும் திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தின் அமைதியை குலைக்கும் போராட்டங்களுக்கு தடை விதிக்க வேண்டும்' என குறிப்பிடப்பட்டு இருந்தது.





▲ குடியுரிமைச் சட்டத்துக்கு ஆதரவாக சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகே பாஜகவினர் நேற்று பேரணி நடத்தினர். இதில், பாஜக மூத்த தலைவர் இல.கணேசன், மாநிலப் பொதுச்செயலாளர் கே.எஸ்.நரேந்திரன், சென்னை கோட்ட பொறுப்பாளர் சக்கரவர்த்தி, ஜெய்சங்கர், நடிகர் ராதாரவி, முஸ்லிம் ராஷ்ட்ரீய மஞ்ச் அமைப்பின் தமிழகத் தலைவர் பாத்திமா அலி உள்ளிட்டோர் பங்கேற்றனர். (அடுத்த படம்) பேரணியில் பங்கேற்ற கூட்டத்தின் ஒரு பகுதி.
படங்கள்: ம.பிரபு

## குடியாத்தம் தொகுதி

# திமுக எம்எல்ஏ காத்தவராயன் மரணம்

● திமுக தலைவர் ஸ்டாலின் இன்று நேரில் அஞ்சலி செலுத்துகிறார்

■ பேரணாம்பட்டு

குடியாத்தம் தனி தொகுதி திமுக சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.காத்தவராயன், உடல்நலக் குறைவால் நேற்று காலமானார்.

தமிழகத்தில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற 18 தொகுதிகளுக்கான சட்டப்பேரவை இடைத் தேர்தலில் குடியாத்தம் தனி தொகுதியில் திமுக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றவர் எஸ்.காத்தவராயன் (59).


▲ காத்தவராயன்

கடந்த சில நாட்களாக உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த இவர், சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்போலோ மருத்துவமனையில் ஜனவரி மாதம் 31-ம் தேதி அனுமதிக்கப்பட்டார். அவருக்கு, கடந்த 4-ம் தேதி இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

தீவிர சிகிச்சைப் பிரிவில் மருத்துவர்களின் கண்காணிப்பில் இருந்த அவருக்கு நோய்த் தொற்று காரணமாக உடல்நலம் மேலும் பாதிக்கப்பட்டது. நேற்று காலை 9.30 மணியளவில் அவர் காலமானார். அவரது உடலுக்கு வேலூர் மத்திய மாவட்டச் செயலாளரும் அணைக்கட்டு சட்டப்பேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார், ஆம்பூர் சட்டப்பேரவை தொகுதி திமுக உறுப்பினர் ஏ.சி.வில்வநாதன் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு நகரம் சின்ன பஜார் வீதியில் உள்ள இல்லத்தில் அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்று (29-ம் தேதி) காலை 10.30 மணியளவில் நடைபெறும் இறுதி ஊர்வலத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் பங்கேற்க உள்ளார்.

எஸ்.காத்தவராயன் கடந்த 1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 8-ம் தேதி பிறந்தவர். பெற்றோர் சிவலிங்கம், பொன்னம்மாள். 10-ம் வகுப்பு வரை படித்துள்ளார். திருமணமாகவில்லை. 1980-ம் ஆண்டு திமுகவில் அடிப்படை உறுப்பினராக இணைந்தார்.

பேரணாம்பட்டு நகர திமுக இளைஞரணி அமைப்பாளர், பேரணாம்பட்டு ஒன்றிய திமுக இளைஞரணி அமைப்பாளர், மாவட்ட பிரதிநிதி, வேலூர் மத்திய மாவட்ட துணைச் செயலாளர் என பல்வேறு கட்சிப் பதவிகளில் இருந்துள்ளார்.

கடந்த 2011-16-ம் ஆண்டு வரை பேரணாம்பட்டு நகராட்சித் தலைவராக இருந்துள்ளார். குடியாத்தம் தனி தொகுதி சட்டப்பேரவை இடைத் தேர்தலில் முதல்முறையாக போட்டியிட்ட எஸ்.காத்தவராயன், அதிமுக வேட்பாளர் கஸ்பா மூர்த்தியைவிட 27,841 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார்.

### ஆளுநர் இரங்கல்

ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், 'தமிழக சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.காத்தவராயன் மறைவு அதிர்ச்சியையும் துக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. குடியாத்தம் தொகுதி மக்களுக்கு காத்தவராயனின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்' என்று தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் வீரமணி அஞ்சலி

பேரணாம்பட்டில் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட காத்தவராயனின் உடலுக்கு தமிழக வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் கே.சி.வீரமணி நேற்று நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "உயிரிழந்த குடியாத்தம் திமுக எம்எல்ஏ நீண்ட காலமாக பொது வாழ்க்கையில் இருந்தவர். மக்கள் நினைத்து பார்க்கும் வகையில் பணியாற்றி உள்ளார். அனைத்து தரப்பு மக்களுக்கும் பணியாற்றியவர். அவரது இறப்பு வருத்தம் அளிக்கிறது. அவரை பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் அதிமுக சார்பாக ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறோம்" என்று தெரிவித்தார்.

**திமுக தலைவர் மு.க.ஸ்டாலின்:** எளிமைக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவரும், குடியாத்தம் சட்டப்பேரவை உறுப்பினருமான எஸ்.காத்தவராயன் மறைந்தார் என்ற வேதனைச் செய்தி கேட்டு துயரத்துக்கு உள்ளானேன். அவரது மறைவுக்கு திமுக சார்பில் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடன் பணியாற்றிவரும் திமுக சட்டப்பேரவை உறுப்பினர்களில் கே.பி.பி.சாமியையும், காத்தவராயனையும் பறிகொடுத்திருப்பது எனக்கு பேரிழப்பாகும்.

காங்கிரஸ் மக்களவை உறுப்பினர் சு.திருநாவுக்கரசரும் காத்தவராயன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

## மாநிலங்களவை உறுப்பினர் பதவி

# அதிமுகவிடம் நல்ல முடிவை எதிர்பார்க்கிறோம்

● தேமுதிக பொருளாளர் பிரேமலதா நம்பிக்கை

■ திருச்சி

தேமுதிகவுக்கு மாநிலங்களவை உறுப்பினர் பதவி தருவது குறித்து அதிமுகவிடமிருந்து நல்ல முடிவை எதிர்பார்க்கிறோம் என தேமுதிக பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தார்.

திருச்சியில் நேற்று செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி:

தமிழ்நாட்டில் இளைஞர்கள் உட்பட 1 கோடி பேருக்கும் மேல் வேலையின்றி உள்ளனர். அவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும்.



தேமுதிகவுக்கு மாநிலங்களவை உறுப்பினர் பதவி தர வேண்டும் என ஆரம்பத்தில் கூட்டணி பேசிய போதே அதிமுகவிடம் கூறியுள்ளோம். நாங்கள் நல்ல முடிவை எதிர்பார்க்கிறோம். பொறுத்திருந்து பார்ப்போம். நல்ல பதில் கிடைக்கவில்லையென்றால், அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்வோம்.

குடியுரிமைச் சட்டம், என்ஆர்சி, என்பிஆர் ஆகியவை நாட்டின் பாதுகாப்புக்காக கொண்டு வரப்படுவதாக மத்திய அரசு கூறினாலும், தமிழ்நாட்டில் சிறுபான்மையினருக்கு எதிரான விஷயமாக திசை திருப்பிவிட்டுள்ளனர். இது குறித்து மக்களுக்கு புரிய வைக்க வேண்டியது மத்திய, மாநில அரசுகளின் கடமை.

இந்தியாவில் வாழும் முஸ்லிம்களுக்கு ஏதாவது ஒரு பாதிப்பு ஏற்பட்டால், தேமுதிக முதல் கட்சியாக களத்தில் இறங்கும் என்றார்.

### முதல்வருடன் சுதீஷ் சந்திப்பு

இந்நிலையில் சென்னை ஆர்.ஏ.புரம் பசுமை வழிசாலையில் உள்ள முதல்வரின் இல்லத்தில் முதல்வர் பழனிசாமியை தேமுதிக துணைச் செயலாளர் எல்.கே.சுதீஷ் நேற்று சந்தித்தார்.

அப்போது, தேமுதிகவுக்கு மாநிலங்களவை எம்.பி. பதவி வழங்குவது குறித்து அவர் பேசியதாக கூறப்படுகிறது.

# பொதுத் தேர்வு எழுத 3 மணி நேரம்

● கேள்வித்தாளை படிப்பதற்கும் 15 நிமிடம் என அமைச்சர் தகவல்

■ திருப்பூர்

திருப்பூரில் நேற்று செய்தியாளர்களிடம் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கூறியதாவது:

பிளஸ் 2 பொதுத் தேர்வுகள் மார்ச் 2-ம் தேதி ஆரம்பித்து, 21-ம் தேதி வரை நடைபெறுகிறது. தேர்வு முடிவுகள் ஏப்ரல் 24-ம் தேதி வெளியிடப்படும். 10-ம் வகுப்பு பொதுத் தேர்வுகள் மார்ச் 27-ம் தேதி தொடங்கி, ஏப்ரல் 13 வரை நடைபெறும். தேர்வு முடிவு மே 4-ம் தேதி வெளியிடப்படும்.

பிளஸ்1 தேர்வுகள் மார்ச் 4-ம் தேதி தொடங்கி மார்ச் 26-ம் தேதி வரை நடைபெறும். தேர்வு முடிவுகள் மே 14-ம் தேதி வெளியிடப்படும். நடப்பாண்டு பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கான நேரம், இரண்டரை மணி நேரத்திலிருந்து மூன்று மணி நேரமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. காலை 10 மணிக்கு தொடங்கி பகல் 1.15 வரை நடைபெறும். 15 நிமிடம் கேள்வித் தாளை படிப்பதற்காக ஒதுக்கப்படும் என்றார்.

## படப்பிடிப்பில் ஏற்படும் விபத்துகளில்

# பாதிக்கப்படுவோருக்கு இழப்பீடு வழங்க பரிசீலனை

● அமைச்சர் கடம்பூர் ராஜு தகவல்

■ கோவில்பட்டி

'சினிமா படப்பிடிப்பின்போது விபத்துகளில் சிக்கி பாதிக்கப்படுவோருக்கு உரிய நஷ்டஈடு தருவதற்கான வழிமுறைகள் குறித்து, அரசு ஆலோசித்து வருகிறது' என தமிழக செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கடம்பூர் ராஜு தெரிவித்தார்.



கோவில்பட்டியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட வேண்டும் என, தமிழக அரசு முடிவெடுத்து, தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஆலை மூடி சீல் வைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, அரசாணையும் வெளியிடப்பட்டுள்ளது. தற்போது, இந்த வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. இதுகுறித்து, நீதிமன்றம்தான் முடிவு எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் திரைப்படக் குழுவினருக்கு அரசு போதிய பாதுகாப்பு வழங்கி வருகிறது. சில படத் தயாரிப்பு நிறுவனங்கள், எந்தத் தகவலையும் அரசுக்கு தெரிவிக்காமல் படப்பிடிப்பை நடத்துகின்றன. அதனால்தான் விபத்துகள் நடந்துள்ளன.

திரைப்படத் துறையினர் காட்சிகளை படமாக்குவதற்கு மட்டும்தான் அரசிடம் அனுமதி பெறுகின்றனர். அதில் பயன்படுத்தப்படும் பொருட்களின் உறுதித்தன்மை குறித்தும், வெளிநாட்டைச் சேர்ந்த கிரேன் உள்ளிட்ட இயந்திரங்களை பயன்படுத்தப்படுவது குறித்தும், அரசு ஆய்வு செய்யும்.

படப்பிடிப்பில் விபத்துகளில் சிக்குபவர்களுக்கு உரிய நஷ்டஈடு தருவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது. இதுதொடர்பாக, அரசு விரைவில் நல்ல முடிவு எடுக்கும் என்றார் அமைச்சர்.


▲ விருதுநகரில் நேற்று பாஜக சார்பில் நடைபெற்ற குடியுரிமை சட்டத்துக்கு ஆதரவான பொதுக் கூட்டத்தில் பேசும் தமிழ்நாடு ஏகத்துவ ஜமாத் மாநிலத் தலைவர் இப்ராகிம்.

## குடியுரிமை சட்டத்தால் முஸ்லிம்களுக்கு

# ஆபத்து என நிரூபித்தால் ரூ.10 லட்சம் வெகுமதி

● தமிழ்நாடு ஏகத்துவ ஜமாத் மாநிலத் தலைவர் இப்ராகிம் அறிவிப்பு

■ விருதுநகர்

குடியுரிமை சட்டத்தால் இந்தியாவில் உள்ள முஸ்லிம்களுக்கு ஆபத்து என நிரூபித்தால் ரூ.10 லட்சம் வழங்கத் தயார் என்று தமிழ்நாடு ஏகத்துவ ஜமாத் மாநிலத் தலைவர் இப்ராகிம் தெரிவித்தார்.

குடியுரிமை சட்டத்தை ஆதரித்து விருதுநகரில் உள்ள மதுரை சாலையில் விவிஆர் சிலை அருகே பாஜக சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு ஏகத்துவ ஜமாத் மாநிலத் தலைவர் இப்ராகிம் பேசியதாவது:

இந்த பொதுக்கூட்டத்தில் பங்கேற்றால் தலையை துண்டித்து விடுவோம் என சிலர் மிரட்டல் விடுத்தனர். நாட்டுக்காக மரணித்தால் தேசபக்தன் என்றுதான் பெயர்.

மதத்தை முன்னிறுத்தியே இந்தியாவில் ஆட்சி அமைக்க வேண்டும் என காங்கிரஸ் நினைக்கிறது. குடியுரிமை சட்டத்தால் இந்தியாவில் உள்ள ஒரு முஸ்லிமுக்கு ஏதாவது ஒரு ஆபத்து என்று அரசியல் கட்சிகள் நிரூபித்தால் ரூ 10 லட்சம் வழங்கத் தயாராக உள்ளேன்.

குடியுரிமை சட்டத்தால் முஸ்லிம்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை. நாடு பாதுகாப்பாக உள்ளது. அதற்காக பிரதமரின் கரத்தை வலுப்படுத்துவது முஸ்லிம்கள் ஒவ்வொருவரின் கடமை என்றார்.

## களியக்காவிளையில் சுட்டுக்கொல்லப்பட்ட

# எஸ்.ஐ. வில்சன் மகளுக்கு அரசுப் பணி ஆணை

■ நாகர்கோவில்

களியக்காவிளை சோதனைச் சாவடியில் ஜனவரி 8-ம் தேதி பணியில் இருந்த சிறப்பு எஸ்.ஐ. வில்சன், தீவிரவாதிகளால் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

அவரது குடும்பத்தினருக்கு தமிழக அரசு ரூ.1 கோடி நிதியுதவி வழங்கியது. மேலும், 'அவரின் வாரிசுக்கு அரசு பணி வழங்கப்படும்' என அறிவிக்கப்பட்டிருந்தது.

நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று, எஸ்.ஐ. வில்சனின் மகள் ஆன்றீஸ் ரினிஜாவுக்கு கருணை அடிப்படையில், வருவாய்த் துறையில் இளநிலை உதவியாளர் பணிக்கான ஆணையை, தமிழக அரசின் டெல்லி பிரதிநிதி தளவாய் சுந்தரம், குமரி மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் மு.வடநேரே ஆகியோர் வழங்கினர்.

மாவட்ட வருவாய் அலுவலர் ரேவதி, எஸ்.பி. ஸ்ரீநாத், பத்மநாபபுரம் சார் ஆட்சியர் ஷரண்யா அறி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


▲ எஸ்.ஐ. வில்சனின் மகளுக்கு அரசு பணிக்கான ஆணையை, தமிழக அரசின் டெல்லி பிரதிநிதி தளவாய் சுந்தரம், குமரி மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் மு.வடநேரே ஆகியோர் வழங்கினர்.




– எஸ்.மோகன், கோவில்பட்டி

● **செய்தி:** அதிக தலைவர்கள் இருப்பதே தமிழக பாஜக தலைவர் நியமன தாமதத்துக்குக் காரணம்! – பொன்.ராதாகிருஷ்ணன்

**பஞ்ச்:** தொண்டர்களைவிட தலைவர்கள் ஜாஸ்தியா இருக்குற கட்சியாச்சே? – எம்.விக்னேஷ், மதுரை.

● **செய்தி:** 'மதுபானக் கடைகள் வேண்டாம்' என்கிற கிராமசபை தீர்மானத்தை அமல்படுத்தாதது ஏன்? – உயர் நீதிமன்றம்

**பஞ்ச்:** அதில் கிடைக்கிற வருமானம்தான் யுவர் ஹானர்! – மு.சுப்பையா, தூத்துக்குடி.

▲ வாசகர்களே...
கருத்துச் சித்திரம் போலவே, இதுவும் உங்கள் களம்தான். cartoon@hindutamil.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கே 'நறுக்' செய்தி வரிகளோடு சேர்த்து அனுப்புங்கள். பிரசுரமாகும் உங்கள் 'பஞ்ச்'களுக்குப் பரிசு ரூ.100.

# கரும்புத் தோட்ட மின்வேலியில் சிக்கி 2 யானைகள் உயிரிழப்பு

● ஈரோடு மாவட்டம் தாளவாடி அருகே பரிதாபம்

■ ஈரோடு

தாளவாடி அருகே கரும்புத் தோட்டத்தில் அமைக்கப்பட்டு இருந்த மின்வேலியில் சிக்கி 2 யானைகள் உயிரிழந்த சம்பவம் குறித்து வனத்துறையினர் விசாரித்து வருகின்றனர்.

ஈரோடு மாவட்டம் தாளவாடியை அடுத்த ஜீரஹள்ளி வனச்சரகப் பகுதியில் கரளவாடி கிராமம் உள்ளது. இக்கிராமத்தைச் சேர்ந்த விவசாயி கருப்புசாமி, தனது தோட்டத்தில் கரும்பு பயிரிட்டுள்ளார்.

வனப்பகுதியையொட்டி உள்ளதால், தோட்டத்துக்குள் வனவிலங்குகள் நுழைந்துவிடாதபடி தோட்டத்தைச் சுற்றிலும் மின் வேலி அமைத்துள்ளார். இந்நிலையில் கரும்புக் காட்டிற்குள் நுழைய முயன்ற ஒரு ஆண் யானை மற்றும் ஒரு பெண் யானை ஆகியவை மின்வேலியில் சிக்கி நேற்று உயிரிழந்தன.


▲ தாளவாடி அருகே மின்வேலியில் சிக்கி இறந்த யானைகள்.

வனப்பகுதிகளில் உள்ள விளைநிலங்களில் விளைபொருட்களைப் பாதுகாக்க வனத்துறை அனுமதியுடன் மின்வேலி அமைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால், வேலியில் குறைந்த மின் அழுத்தம் மட்டுமே பாய்ச்ச வேண்டும் என்ற விதிமுறை உள்ளது. விளைநிலத்தில் நுழைய முயலும் வனவிலங்குக்கு எச்சரிக்கையை ஏற்படுத்தும் வகையிலேயே மின்வேலி அமைக்கப்பட வேண்டும்.

மாறாக, விவசாயி கருப்புசாமி மின்வேலியில் அதிக மின் அழுத்தம் பாய்ச்சி இருந்ததால், யானைகள் இரண்டும் அடுத்தடுத்து உயிரிழந்து இருக்கலாம் என வனத்துறையினர் சந்தேகிக்கின்றனர். இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டுள்ள ஜீரஹள்ளி வனத் துறையினர், கருப்புசாமியைத் தேடி வருகின்றனர்.

### பணப்பயிருக்கு தடை வேண்டும்

மின்சார வேலியில் சிக்கி இரு யானைகள் இறந்த சம்பவம் குறித்து வேதனை தெரிவித்த சுற்றுச்சூழலியலாளர்கள், வனப் பகுதியையொட்டிய பகுதிகளில் வனவிலங்குகள் விரும்பி உண்ணும் கரும்பு போன்ற பணப் பயிர்களை பயிரிடுவதற்கு தடை விதிக்க வேண்டும்.

வனப்பகுதியில் உணவு இல்லாத நிலையில், தனக்கு பிடித்தமான கரும்புத் தோட்டம் அருகில் இருந்தால், இயல்பாகவே யானைகள் வரத்தான் செய்யும். எனவே, வனப்பகுதியில் யானைகள் விரும்பி உண்ணும் புல் வகைகள், தாவரங்கள் போதுமான அளவு உள்ளதா என்பதை வனத்துறையினர் கண்காணித்து, அவற்றை விளைவிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இந்த வேலியில் மனிதர் ஒருவர் தொட்டிருந்தாலும் மரணம் ஏற்பட்டிருக்கும் என்பதால், மின்வேலியில் அதிக மின்சாரம் பாய்ச்சுவதை கொடுங்குற்றமாக கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.







பஞ்சாபில் அரசுப் பணியாளர்கள் ஓய்வு பெறும் வயது 60—ல் இருந்து 58 ஆக குறைக்கப்படும். இதன் மூலம் இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

• **மன்பிரீத் சிங் பாதல்,** பஞ்சாப் நிதியமைச்சர் •





டெல்லி கலவரத்துக்கு காங்கிரஸ் தலைவர்களின் ஆத்திரமூட்டும் பேச்சுகளே காரணம். டெல்லியில் ஆட்சியில் உள்ள ஆத் ஆத்மி கட்சிக்கும் வன்முறையில் தொடர்பு உள்ளது.

• **ராம்தாஸ் அதவாலே,** மத்திய அமைச்சர் •



# சின்னச் சின்னதாய்...

## மகாராஷ்டிராவில் முஸ்லிம்களுக்கு 5% இடஒதுக்கீடு வழங்க திட்டம்

**மும்பை:** மகாராஷ்டிராவில் சிவசேனா, காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் ஆகிய கட்சிகள் 'மகாராஷ்டிர வளர்ச்சி முன்னணி' என்ற பெயரில் கூட்டணி ஏற்படுத்தி, ஆட்சி அமைத்துள்ளன.

இந்நிலையில் மாநில சட்டப்பேரவையில் நேற்று காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு தேசியவாத காங்கிரஸை சேர்ந்த அமைச்சர் நவாப் மாலிக் கூறும்போது, "மாநிலத்தில் அரசுக் கல்வி நிறுவனங்களில் முஸ்லிம்களுக்கு 5 சதவீத இடஒதுக்கீடு வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. இது தொடர்பான சட்டம் விரைவில் நிறைவேற்றப்படுவதை அரசு உறுதி செய்யும். வரும் கல்வி ஆண்டில் மாணவர் சேர்க்கை தொடங்குவதற்கு முன் இந்த சட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

ஆனால் சிவசேனா மூத்த தலைவரும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான ஏக்நாத் ஷிண்டே பின்னர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "மகாராஷ்டிராவில் எந்தவொரு சமூகத்தினருக்கும் இடஒதுக்கீடு அளிப்பது தொடர்பாக கூட்டணிக் கட்சித் தலைவர் ஒன்றுகலந்து பேசி முடிவு எடுப்பார்கள். முதல்வர் உத்தவ் தாக்கரே உரிய முடிவுகளை உரிய நேரத்தில் எடுப்பார் " என்றார். - பிடிஐ

## "கபில் மிஸ்ராவின் கருத்துகளை பாஜக அங்கீகரிக்கவில்லை"

**புதுடெல்லி:** குடியுரிமை திருத்தச் சட்டத்தை மையமாக வைத்து டெல்லியில் இரு தரப்பினர் நடத்திய போராட்டமானது மோதலாக வெடித்து கலவரமாக மாறியது. தலைநகர் டெல்லியில் நடைபெற்ற இந்தக் கலவரம் நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே, இந்தக் கலவரம் நடைபெறுவதற்கு முன்பாக பாஜக மூத்த தலைவர்கள் கபில் மிஸ்ரா, பர்வேஷ் வர்மா ஆகியோர் அந்தப் பகுதிகளில் பொதுக்கூட்டங்களில் பேசினர். வெறுப்புணர்வை தூண்டும் விதமாக அவர்களின் பேச்சே இந்த வன்முறைக்கு காரணம் என காங்கிரஸ் குற்றம்சாட்டி வருகிறது. இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக மத்திய அமைச்சர் ரவிசங்கர் பிரசாத்திடம் செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். அதற்கு பதிலளித்து அவர் கூறியதாவது:

கபில் மிஸ்ரா, பர்வேஷ் வர்மா ஆகியோரின் கருத்துகளை பாஜக ஏற்றுக்கொள்ளவோ, அங்கீகரிக்கவோ இல்லை. இதுதொடர்பாக கட்சித் தலைமை தமது நிலைப்பாட்டை ஏற்கனவே தெரிவித்துவிட்டது. தற்போது இந்த விவகாரம் நீதிமன்றத்தில் உள்ளது. கட்சி ரீதியாக அவரகள் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து பரிசீலித்து வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார். - பிடிஐ



▲ மேற்குவங்க தலைநகர் கொல்கத்தாவில் குடியுரிமை திருத்த சட்டத்துக்கு எதிராக தேசியக் கொடியை ஏந்தி நேற்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள். படம்: ஏஎப்பி

## முன்னாள் பாஜக எம்எல்ஏ மீது பாலியல் வன்கொடுமை வழக்கு

**தாணே:** மகாராஷ்டிராவின் தாணே மாவட்டம், மிரா-பாயந்தர் தொகுதி முன்னாள் எம்எல்ஏ நரேந்திர மேத்தா. பாஜகவை சேர்ந்த இவர் அக்கட்சியை விட்டு விலகுவதாக அண்மையில் அறிவித்தார்.

இந்நிலையில் நரேந்திர மேத்தா மீது பாயந்தர் நகர பெண் கவுன்சிலர் ஒருவர் பாலியல் வன்கொடுமை புகார் கூறினார். கடந்த ஆண்டு முதல் நரேந்திர மேத்தா தன்னை பாலியல் வன்கொடுமை செய்து வருவதுடன் தனது குடும்பத்தினரை அச்சுறுத்தி வருவதாக அப்பெண் கூறியிருந்தார்.இந்நிலையில் நரேந்திர மேத்தா மற்றும் அவரது கூட்டாளி சஞ்சய் தத்தாத்ரே மீது பாலியல் வன்கொடுமை மற்றும் அச்சுறுத்தல் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மிரா-பாயந்தர் காவல் நிலைய அதிகாரி தெரிவித்தார்.

இந்திய தண்டனைச் சட்டத்தின் 376-வது பிரிவு (பாலியல் வன்கொடுமை) மற்றும் எஸ்சி, எஸ்டி வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## கேஜ்ரிவால் மீதான அவதூறு வழக்கு விசாரணை நிறுத்தி வைப்பு

**புதுடெல்லி:** டெல்லியில் பாஜக உத்தரவின் பேரில் 30 லட்சம் வாக்காளர்களின் பெயரை தேர்தல் ஆணையம் நீக்கியுள்ளதாக அர்விந்த் கேஜ்ரிவால் மற்றும் அவரது கட்சியை சேர்ந்த சுஷில் குமார் குப்தா, மனோஜ் குமார், ஆதிஷி மர்லேனா ஆகியோர் கூறியதாகவும் இதனால் பாஜகவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறி டெல்லி பாஜக தலைவர் ராஜீவ் பப்பர் வழக்கு தொடர்ந்தார்.

இவ்வழக்கில் நால்வரையும் விசாரணைக்கு அழைக்க டெல்லி பெருநகர குற்றவியல் நடுவர் மன்றம் முடிவு செய்தது. இதனை அமர்வு நீதிமன்றம் உறுதி செய்தது. இதற்கு எதிராக கேஜ்ரிவால் உள்ளிட்டோர் தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கு டெல்லி உயர் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது வழக்கு விசாரணைக்கு நீதிபதி அனு மல்ஹோத்ரா இடைக்கால தடை விதித்தார். டெல்லி அரசும் ராஜீவ் பப்பரும் ஏப்ரல் 23-ம் தேதிக்குள் பதில் அளிக்க உத்தரவிட்டார்.

# சோனியா, ராகுலுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யக் கோரி மனு

● மத்திய அரசுக்கு உயர் நீதிமன்றம் நோட்டீஸ்

■ புதுடெல்லி

வெறுப்புணர்வை தூண்டும் வகையில் பேசியதாக காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி உள்ளிட்டோர் மீது வழக்குப் பதிவு செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு பதிலளிக்குமாறு மத்திய அரசுக்கு டெல்லி உயர் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

வடகிழக்கு டெல்லியில் குடியுரிமை திருத்த சட்ட எதிர்ப்பாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் கலவரமாக மாறியது.

இந்த விவகாரம் தொடர்பாக 'லாயர்ஸ் வாய்ஸ்' என்ற அமைப்பின் சார்பில் டெல்லி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

வெறுப்புணர்வை தூண்டும் விதமாக பேசி வரும் காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி, டெல்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா, ஆம் ஆத்மி எல்எல்ஏ அமானத்துல்லா கான், ஏஐஎம்எம் கட்சித் தலைவர் ஒவைசி ஆகியோர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வேண்டும் என அதில் கோரப்பட்டிருந்தது.

இந்த மனு மீதான விசாரணை, தலைமை நீதிபதி டி.என். படேல், நீதிபதி ஹரி சங்கர் ஆகியோர் முன்னிலையில் நேற்று நடைபெற்றது. இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், இந்த மனுவுக்கு பதிலளிக்குமாறு மத்திய அரசு, டெல்லி அரசு மற்றும் டெல்லி காவல்துறைக்கு நோட்டீஸ் அனுப்பி உத்தரவிட்டனர். - பிடிஐ

## கருத்துச் சித்திரம்

கருத்து: **ந.பகவதி,** கோவில்பட்டி.




▲ வாசகர்களே... இந்த இடம் உங்களுக்கு. கருத்துச் சித்திரத்துக்கான உங்கள் எண்ணத்தை முடிந்தவரையில் வரைந்தோ, எழுத்தில் விவரித்தோ அனுப்பிவையுங்கள். சிறந்த கருத்துகளைச் சித்திரமாக்க எங்கள் ஓவியர் காத்திருக்கிறார். cartoon@hindutamil.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ, 044-28552215 என்ற தொலைநகல் எண்ணுக்கோ உங்கள் எண்ணங்களை அனுப்பலாம். பிரசுரிக்கப்படும் கருத்துச் சித்திரங்களுக்குத் தக்க சன்மானம் காத்திருக்கிறது.

**உங்கள் அலைபேசி / தொலைபேசி எண் மற்றும் பின்கோடு ஆகியவற்றைத் தவறாமல் குறிப்பிட்டு அனுப்பவும்.**

### மரண தண்டனையை ரத்து செய்யக் கோரி

# நிர்பயா வழக்கு குற்றவாளி பவன் குப்தா சீராய்வு மனு தாக்கல்

■ புதுடெல்லி

தனது மரண தண்டனையை ரத்து செய்யக் கோரி நிர்பயா வழக்கு குற்றவாளிகளில் ஒருவரான பவன் குப்தா, உச்ச நீதிமன்றத்தில் நேற்று சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 2012 டிசம்பர் 16-ம் தேதி டெல்லியில் ஓடும் பேருந்தில் பிசியோதெரபி மாணவி 6 பேர் கும்பலால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். இதில் பலத்த காயமடைந்த அந்த மாணவி மருத்துவமனையில் உயிரிழந்தார். இதுதொடர்பாக 6 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் ஒருவர் திஹார் சிறையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். மற்றொருவர் 18 வயதுக்கு உட்பட்ட சிறுவன் என்பதால் 3 ஆண்டுகள் சிறை தண்டனைக்கு பிறகு விடுதலை செய்யப்பட்டார்.

பல்வேறு திருப்பங்களுக்குப் பிறகு நிர்பயா வழக்கு குற்றவாளிகள் நால்வருக்கும் மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கான வாரண்ட்டுகள் கடந்த மாதம் இரண்டு முறை பிறப்பிக்கப்பட்டன.



▲ பவன் குப்தா

ஆனால், குற்றவாளிகள் தங்கள் சட்ட வாய்ப்புகளை பயன்படுத்தியதால் அவர்களை தூக்கிலிடுவது தள்ளிப்போனது. இந்த சூழலில், குற்றவாளிகள் அனைவரையும் மார்ச் 3-ம் தேதி அதிகாலை தூக்கிலிடுமாறு டெல்லி நீதிமன்றம் கடந்த 17-ம் தேதி உத்தரவிட்டது.

இதையடுத்து, அவர்களின் மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கான பணிகளை திஹார் சிறை நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், நிர்பயா வழக்கு குற்றவாளிகளில் ஒருவரான பவன் குப்தா சார்பில் உச்ச நீதிமன்றத்தில் நேற்று சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், தனக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையையும், தூக்கிலிடுவதற்கான புதிய வாரண்ட்டையும் ரத்து செய்ய வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

அவர் தனது மனுவில் மேலும் கூறும்போது, "நான் 1996 அக்டோபர் 8-ம் தேதி பிறந்தேன். இதற்கு ஆதாரமாக பள்ளிச் சான்றிதழ் உள்ளது. குற்றம் நேர்ந்த போது நான் சிறுவன். இதை கருத்தில் கொண்டு எனது மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

நிர்பயா வழக்கு குற்றவாளிகளில் பவன் குப்தாவை தவிர மற்ற மூவரும் மரண தண்டனைக்கு எதிரான தங்கள் சட்ட வாய்ப்புகள் அனைத்தையும் பயன்படுத்திவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. - பிடிஐ

### சிஏஏ பற்றி எதிர்க்கட்சிகள் பொய் பிரச்சாரம்

# மதக் கலவரத்தை தூண்டுவதாக அமைச்சர் அமித் ஷா குற்றச்சாட்டு

■ புவனேஸ்வர்

குடியுரிமை திருத்த சட்டம் (சிஏஏ) பற்றி பொய் பிரச்சாரம் செய்வதன் மூலம் மதக் கலவரத்தை எதிர்க்கட்சிகள் தூண்டிவிடுவதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குற்றம்சாட்டியுள்ளார்.

ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் பாஜக சார்பில் சிஏஏ-க்கு ஆதரவாக நேற்று நடந்த கூட்டத்தில் அமைச்சர் அமித் ஷா கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:

காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து ரத்து, முத்தலாக் தடை சட்டம், ராமர் கோயில், சிஏஏ போன்ற நாட்டின் பாதுகாப்பு மற்றும் உணர்வுபூர்வமான, முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி தீர்வு கண்டுவருகிறார். நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், அண்டை நாடுகளில் இருந்து இந்தியாவுக்குள் சட்ட விரோதமாக ஊடுருவியவர்களை வெளியேற்றவும் சிஏஏ கொண்டு வரப்பட்டது. ஆனால், சிஏஏ பற்றி எதிர்க்கட்சிகள் பொய் பிரச்சாரம் செய்கின்றன. சிஏஏ-வால் முஸ்லிம்கள் குடியுரிமையை இழப்பார்கள் என்று பொய் பிரச்சாரம் செய்கின்றனர். இதன் மூலம் மதக் கலவரத்தை எதிர்க்கட்சிகள் தூண்டிவிடுகின்றன.

சிஏஏ பற்றி ஏற்கெனவே தெளிவுபடுத்தி இருக்கிறேன். இப்போதும் மீண்டும் சொல்கிறேன். சிஏஏ-வால் எந்த ஒரு இந்திய முஸ்லிமும் குடியுரிமையை இழக்கமாட்டார். பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கதேசம் ஆகிய நாடுகளில் மதரீதியாக துன்புறுத்தலுக்கு ஆளாகி இந்தியாவுக்கு அகதிகளாக வந்தவர்களுக்கு குடியுரிமை வழங்குவதற்காகவே சிஏஏ கொண்டுவரப்பட்டது. யாருடைய குடியுரிமையையும் பறிப்பதற்காக இச்சட்டத்தை கொண்டு வரவில்லை. சிஏஏ ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கை. காங்கிரஸ், கம்யூனிஸ்ட்கள், சமாஜ்வாதி, பகுஜன் சமாஜ் போன்ற கட்சிகளும் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி போன்றவர்களும் சிஏஏ பற்றி பொய்களை பரப்பி வருகின்றனர்.

இவ்வாறு அமித் ஷா பேசினார்.

# டெல்லியில் அமைதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

● குடியரசுத் தலைவருக்கு எதிர்க்கட்சிகள் கடிதம்

■ புதுடெல்லி

கலவரம் பாதித்த டெல்லியில் அமைதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கக் கோரி குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்துக்கு எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கடிதம் எழுதியுள்ளனர்.

தேசியவாத காங்கிரஸ், ராஷ்ட்ரீய ஜனதா தளம், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் டெல்லி கலவரம் தொடர்பாக குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்துக்கு நேற்று கடிதம் எழுதியுள்ளனர். அக்கடிதத்தில் கூறியிருப்பதாவது:

கலவரத்தால் பாதிக்கப்பட்ட டெல்லியில் உடனடியாக அமைதியை ஏற்படுத்தவும் இயல்பு நிலை திரும்பவும் குடியரசுத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக டெல்லி ஆளுநர் போன்ற சம்பந்தப்பட்ட பொறுப்பில் உள்ளவர்களுக்கு உத்தரவிட வேண்டும். பதற்றத்தை ஏற்படுத்தும் வகையில் பேசிய அனைவர் மீதும் வழக்குப் பதிவு செய்து வன்முறைக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். கலவரத்தால் வீடுகளை இழந்தவர்களுக்கு நிவாரண முகாம்கள் அமைத்து அவர்களுக்கு போதுமான பாதுகாப்பு வழங்க வேண்டும். கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மத நல்லிணக்க கூட்டங்கள் நடத்த எங்களை அனுமதிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆலோசனைகள் வழங்கும் வகையில் ஆலோசனை மையங்கள் திறக்க வேண்டும்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. இக்கடிதத்தில் தேசியவாத காங்கிரஸ் தலைவர் பிரபுல் படேல், ராஷ்ட்ரீய ஜனதா தளத்தின் மனோஜ் ஜா, திமுகவின் டி.ஆர்.பாலு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் டி.ராஜா உள்ளிட்டோர் கையெழுத்திட்டுள்ளனர்.

### சுவாமி சின்மயானந்தா மீதான பாலியல் வழக்கு


# டெல்லிக்கு மாற்றக் கோரும் மனுவை விசாரணைக்கு ஏற்றது உச்ச நீதிமன்றம்

■ புதுடெல்லி

முன்னாள் மத்திய அமைச்சர் சுவாமி சின்மயானந்தா மீதான பாலியல் வன்கொடுமை வழக்கை டெல்லிக்கு மாற்றக் கோரும் மனுவை உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது. வரும் 2-ம் தேதி இம்மனு விசாரணைக்கு வருகிறது.

உத்தரபிரதேச மாநிலம் சகரான்பூரில் சின்மயானந்தாவின் அறக்கட்டளை நடத்தும் சட்டக் கல்லூரி உள்ளது. இங்கு சட்டம் படித்து வந்த 23 வயது மாணவி ஒருவர் சின்மயானந்தாவுக்கு எதிராக பாலியல் வன்கொடுமை புகார் அளித்தார். தேசிய அளவில் பரபரப்பை ஏற்படுத்திய இந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்ற உத்தரவின் பேரில் உ.பி. அரசு சிறப்பு புலனாய்வுக் குழு அமைத்தது.

இக்குழு ஒரு மாத விசாரணைக்கு பிறகு சின்மயானந்தாவை கடந்த ஆண்டு செப்டம்பர் 20-ம் தேதி கைது செய்தது. சின்மயானந்தா தற்போது ஜாமீனில் உள்ளார்.



▲ சுவாமி சின்மயானந்தா

இந்நிலையில் இந்த வழக்கை டெல்லிக்கு மாற்ற வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் மாணவி முறையிட்டார்.

இம்மனு தலைமை நீதிபதி எஸ்.ஏ.பாப்டே தலைமையிலான அமர்வு முன் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மாணவி சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் கொலின் கான்சல்வ்ஸ், "உ.பி.யில் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக மாணவி கருதுவதால் பாலியல் வன்கொடுமை வழக்கை டெல்லிக்கு மாற்ற வேண்டும்" என முறையிட்டார்.

உத்தர பிரதேசத்தில் சின்மயானந்தாவுக்கு செல்வாக்கு உள்ளது. அவர் வழக்கின் சாட்சிகளை கலைக்க முயற்சிக்கிறார். மேலும் மாணவியின் உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கிறது என்றும் வழக்கறிஞர் கொலின் கான்சல்வ்ஸ் குற்றம் சாட்டினார்.

இதையடுத்து மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் வரும் 2-ம் தேதி விசாரிப்பதாக தெரிவித்தனர்.

இந்த விவகாரத்தில் சின்மயானந்தாவை அச்சுறுத்தி பணம் பறிக்க முயன்றாத மாணவியும் கைது செய்யப்பட்டார். பின்னர் அவருக்கு அலகாபாத் உயர் நீதிமன்றம் ஜாமீன் வழங்கியது.



▲ டெல்லி கலவரத்தால் பாதிக்கப்பட்ட மவுஜ்புரி பகுதியை டெல்லி துணைநிலை ஆளுநர் அனில் பைஜால் நேற்று பார்வையிட்டார். உடன், டெல்லி காவல் ஆணையர் ஸ்ரீவத்சவா.



▲ வன்முறை நிகழ்ந்த டெல்லியின் கராவல் நகர் பகுதியில் ஆய்வு செய்யும் தடயவியல் நிபுணர்கள். படங்கள்: பிடிஐ

### இடஒதுக்கீடு போராட்ட வழக்கு

# ஹர்திக் படேலுக்கு மார்ச் 6 வரை முன்ஜாமீன்

■ புதுடெல்லி:

குஜராத்தில் படேல் சமூக மக்களுக்கு இடஒதுக்கீடு கோரி 2015-ல் போராட்டங்கள் நடைபெற்றன. இதில் பல இடங்களில் கலவரம் ஏற்பட்டது. 12-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கொல்லப்பட்டனர். பொதுச் சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

இது தொடர்பாக போராட்டத்தை முன்னின்று நடத்திய ஹர்திக் படேல் மீது பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டன. பல வழக்குகளில் அவர் ஜாமீனில் உள்ளார். மேலும் சில வழக்குகளில் அவரை போலீஸார் தேடி வரும் நிலையில், அவர் தலைமறைவாக உள்ளார். கலவரம் தொடர்பான ஒரு வழக்கில் ஹர்திக் படேலின் முன் ஜாமீன் மனுவை குஜராத் உயர் நீதிமன்றம் கடந்த பிப்ரவரி 17-ம் தேதி நிராகரித்தது.

இந்நிலையில், தன் மீதான வழக்கை ரத்து செய்யக் கோரியும் முன்ஜாமீன் வழங்கக் கோரியும் உச்ச நீதிமன்றத்தில் ஹர்திக் படேல் மனு தாக்கல் செய்தார். இதை நீதிபதி யு.யு. லலித் , வினீத் சரண் ஆகியோர் கொண்ட அமர்வு நேற்று விசாரித்தது. மனு மீது பதிலளிக்க குஜராத் அரசுக்கு நோட்டீஸ் அனுப்பவும், மார்ச் 6-ம் தேதி வரை ஹர்திக் படேலுக்கு முன் ஜாமீன் வழங்கியும் உத்தரவிட்ட நீதிபதிகள் விசாரணையை ஒத்திவைத்தனர்.

# இந்தியாவின் கண்டுபிடிப்புகளால் உலகம் பயன் அடைகிறது

## ● அறிவியல் தினத்தில் பிரதமர் மோடி பெருமிதம்

■ புதுடெல்லி

இந்திய விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளால் இந்தியா மட்டுமன்றி ஒட்டுமொத்த உலகமும் பயன் அடைகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்திய விஞ்ஞானி சர் சி.வி.ராமனை பெருமைப்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 28-ம் தேதி தேசிய அறிவியல் தினம் கொண்டாடப்படுகிறது. அவர் கண்டுபிடித்த ராமன் விளைவு கோட்பாட்டை உலகுக்கு அறிவித்த நாள் பிப்ரவரி 28-ம் தேதியாகும். அன்றைய தினம் தேசிய அறிவியல் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.



▲ நரேந்திர மோடி

இதுதொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி ட்விட்டரில் நேற்று வெளியிட்ட பதிவுகளில் கூறியிருப்பதாவது:

தேசிய அறிவியல் தினத்தில் இந்திய விஞ்ஞானிகளின் திறமை, அர்ப்பணிப்பு உணர்வை பாராட்டுகிறேன். அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய விஞ்ஞானிகளின் புதுமையான கண்டுபிடிப்புகள் இந்தியாவுக்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த உலகத்துக்கும் பயன் அளிக்கிறது. அவர்களின் சேவை தொடர வேண்டும்.

அறிவியல் ஆராய்ச்சிக்கு ஏற்ற சூழலை உருவாக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இளைய தலைமுறையினர் அறிவியல் ஆராய்ச்சிகளில் ஆர்வம் காட்ட வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## மண்டல கவுன்சில் கூட்டத்தில் அமித் ஷா, மம்தா

■ புவனேஸ்வர்

கிழக்கு மண்டல கவுன்சிலில் பிஹார், ஜார்க்கண்ட், ஒடிசா, மேற்குவங்கம் உறுப்பினர்களாக உள்ளன. இந்த கவுன்சிலின் கூட்டம் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் புவனேஸ்வரில் நேற்று நடைபெற்றது.

இதில் ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக், மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி, பிஹார் முதல்வர் நிதிஷ்குமார் பங்கேற்றனர். ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரனுக்கு பதிலாக மாநில நிதித் துறை அமைச்சர் ராமேஸ்வர் ஓரான் கலந்து கொண்டார். கூட்டத்தை யொட்டி முதல்வர் நவீன் பட்நாயக் விருந்து அளித்தார். இதில் அமித் ஷா, மம்தா, நிதிஷ் குமார் பங்கேற்றனர்.




▲ உத்தரபிரதேசம், பிரயாக்ராஜ் நகரில் கங்கை நதிக் கரையோரம் படே அனுமன் கோயில் உள்ளது. இந்த கோயிலில் 26 அடி நீளம், 164 டன் எடை கொண்ட அனுமன் சிலை உள்ளது. அங்குள்ள திரிவேணி சங்கமத்தில் அனுமன் சிலைக்கு நேற்று புனித நீராடல் நடைபெற்றது. படம்: ஏஎப்பி

# ஆராய்ச்சியில் பெண்களின் பங்களிப்பு குறைவாக உள்ளது

## ● குடியரசுத் தலைவர் கவலை

■ புதுடெல்லி

அறிவியல் ஆராய்ச்சிப் பணியில் பெண்களின் பங்களிப்பு குறைவாக உள்ளது என குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் கவலை தெரிவித்தார்.

தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு டெல்லியில் நேற்று அறிவியல் விஞ்ஞானிகள் மத்தியில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பேசினார்.

அப்போது அவர் கூறும்போது, "கடந்த ஆண்டு சந்திரயான்-2 விண்கலம் விண்ணில் ஏவப்படும் போது நான் ஸ்ரீஹரிகோட்டா சென்றிருந்தேன். அப்போது பெண் விஞ்ஞானி ஒருவர் மிகுந்த அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றுவதை கண்டேன். அவர் தனது 6 மாத மகனை தனது பெற்றோரிடம் கொடுத்துவிட்டு திட்டப்பணியில் ஈடுபட்டிருந்தார்.

மிகுந்த உத்வேகம் பெற்ற பெண் விஞ்ஞானிகள் இங்கு இருந்தபோதிலும் நாட்டில் அறிவியல் ஆராய்சி மற்றும் மேம்பாட்டுப் பணியில் பெண்களின் பங்களிப்பு குறைவாகவே உள்ளது. உலகில் அறிவியல் ஆராய்ச்சியாளர்களில் 30 சதவீதம் பேர் பெண்களாக உள்ள நிலையில் நம் நாட்டில் 15 சதவீதம் பேர் மட்டுமே உள்ளனர்.



▲ ராம்நாத் கோவிந்த்

அறிவியல் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களில் இந்த எண்ணிக்கையில் எந்த வேறுபாடும் இல்லை. என்றாலும் குறைந்த எண்ணிக்கையிலான பெண்கள் மட்டுமே ஆய்வுப் பணியில் தங்கள் பங்களிப்பை செலுத்துகின்றனர்.

அறிவியலில் பெண்கள் உயர் கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையில் மத்திய பல்கலைக்கழகங்களில் அவர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும். இவ்வாறு ராம்நாத் கோவிந்த் கூறினார்.

# தீவிரவாதத்துக்கு எதிரான போரில் இந்தியாவுக்கு ஆதரவு அதிகரிக்கிறது

## ● மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் கருத்து

■ புதுடெல்லி

தீவிரவாதத்துக்கு எதிராக போரிடும் இந்தியாவுக்கு உலக நாடுகளின் ஆதரவு அதிகரித்து வருகிறது என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

விமானப்படை சார்பில் டெல்லியில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கில் அமைச்சர் ராஜ்நாத் சிங், முப்படைகளின் தளபதி பிபின் ராவத், விமானப் படைத் தளபதி ஆர்.கே.பதாரியா உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதில் அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசியதாவது:

தீவிரவாதத்துக்கு எதிரான போரில் உலக நாடுகள் ஒன்றிணைந்துள்ளன. உலக அமைதிக்காக பாகிஸ்தானில் செயல்படும் தீவிரவாத அமைப்புகளை அழிக்க இந்தியா நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக இந்தியாவுக்கு உலக நாடுகளின் ஆதரவு அதிகரித்து வருகிறது.

பாகிஸ்தானை சேர்ந்த தீவிரவாதி அந்த நாட்டில் விஐபி ஆக வாழ்ந்து வந்தார். இந்தியாவின் நடவடிக்கையால் அவர் இப்போது சிறையில் இருக்கிறார்.



▲ ராஜ்நாத் சிங்

தீவிரவாதம் மூலம் இந்தியாவுக்கு எதிராக மறைமுக போரில் பாகிஸ்தான் ஈடுபட்டு வருகிறது. பாலகோட் தாக்குதல் உட்பட பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் பாகிஸ்தானுக்கு தகுந்த பாடத்தை கற்பித்து வருகிறோம். தீவிரவாதத்துக்கு எதிரான போரில் இந்தியா தீரமாக செயல்படும்.

பாகிஸ்தானின் பாலகோட்டில் செயல்பட்ட தீவிரவாத முகாம்களை இந்திய விமானப்படை குண்டுகளை வீசி அழித்தது. இதன் மூலம் எல்லை தாண்டி பதுங்கி இருந்தாலும் தீவிரவாதிகளை இந்தியா அழிக்கும் என்பதை உலகுக்கு எடுத்துரைத்தோம். நமது ராணுவ வலிமை பன்மடங்கு அதிகரித்திருக்கிறது. நிலம், கடல், வான் என எந்த வகையில் அச்சுறுத்தல் எழுந்தாலும் இந்திய பாதுகாப்புப் படைகள் அவற்றை தகர்த்தெறியும். கடந்த 5 ஆண்டுகளில் நாட்டின் பாதுகாப்பு அதிகரித்திருக்கிறது. எல்லை தாண்டிய தீவிரவாதம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தீவிரவாத சதித்திட்டங்கள் முறியடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர் பேசினார்.

முப்படைகளின் தளபதி பிபின் ராவத் பேசும்போது, "கடினமான சூழ்நிலையில் இந்திய அரசியல் தலைமையும் ராணுவ தலைமையும் மிகச் சரியான முடிவை எடுத்துள்ளன. கார்கில், உரி தாக்குதல், புல்வாமா தாக்குதலின்போது எதிரிகளுக்கு தகுந்த பாடம் கற்பிக்கப்பட்டது" என்று தெரிவித்தார்.

விமானப்படைத் தளபதி பதாரியா பேசும்போது, "இந்திய விமானப்படையில் விரைவில் ரஃபேல் போர் விமானங்கள் சேர்க்கப்படும். இதன்மூலம் விமானப்படையின் பலம் மேலும் அதிகரிக்கும்" என்று தெரிவித்தார்.

## டெல்லி கலவரம் குறித்து

# கள ஆய்வு செய்ய 5 பேர் குழுவை அமைத்தது காங்கிரஸ்

■ புதுடெல்லி

டெல்லியில் கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கள ஆய்வு மேற்கொள்வதற்காக 5 பேர் அடங்கிய குழுவை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி நியமித்துள்ளார்.

டெல்லியில் குடியுரிமை திருத்தச் சட்ட ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் இடையே அண்மையில் ஏற்பட்ட மோதல் கலவரமாக மாறியது. இதில் 39 பேர் வரை பலியாகியுள்ளனர். 200-க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருக்கின்றனர்.

இந்நிலையில், இந்த கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்து அறிக்கை அளிப்பதற்காக 5 பேர் அடங்கிய குழுவை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி நேற்று நியமித்துள்ளார்.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் முகுல் வாஸ்னிக், கட்சியின் டெல்லி பொறுப்பாளர் சக்திசிங் கோஹில், ஹரியாணா காங்கிரஸ் கமிட்டி தலைவர் குமாரி செல்ஜா, முன்னாள் எம்.பி. தாரிக் அன்வர், மகளிர் அணித் தலைவர் சுஷ்மிதா தேவ் ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

டெல்லியில் உள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் 5 பேர் குழுவின் முதல் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் டெல்லி கலவரம் தொடர்பாக பல்வேறு விவகாரங்கள் விவாதிக்கப்பட்டன. வன்முறை தொடர்பான முக்கிய ஆதாரங்களை திரட்ட கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

இதன்பின் காங்கிரஸ் தலைமை அலுவலகம் ட்விட்டரில் நேற்று வெளியிட்ட பதிவில், "டெல்லியில் இன்னும் எத்தனை உயிரிழப்புகள் ஏற்படும். வெறுப்புணர்வை தூண்டும் பிரச்சாரத்தை பாஜக இனி மேலாவது நிறுத்துமா" என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினரின் ஆய்வறிக்கை சோனியா காந்தியிடம் சமர்ப்பிக்கப்படும் என காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் கூறும்போது, "கடந்த 4 நாட்களாக டெல்லியில் வன்முறை சம்பவங்கள் நடைபெற்று வருகின்றனர்.

கலவரத்தை கட்டுப்படுத்த மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை." என்று குற்றம் சாட்டினார். - பிடிஐ



## கோவிட்-19 வைரஸ் காய்ச்சலால்

# உலகம் முழுவதும் இதுவரை 2,858 பேர் உயிரிழப்பு

■ பெய்ஜிங்

உலகம் முழுவதும் கோவிட்-19 காய்ச்சலால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2,858 ஆக உயர்ந்துள்ளது.

சீனாவின் ஹுபெய் மாகாணம் வூஹானில் கடந்த ஆண்டு டிசம்பரில் கோவிட்-19 வைரஸ் காய்ச்சல் பரவுவது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த காய்ச்சல் தற்போது உலகம் முழுவதும் பரவியுள்ளது. சீனாவில் நேற்று முன்தினம் 44 பேர் காய்ச்சலால் உயிரிழந்தனர். 327 பேருக்கு புதிதாக காய்ச்சல் தொற்றியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதன்மூலம் கோவிட்-19 வைரஸ் காய்ச்சலால் சீனாவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2,788 ஆக உயர்ந்துள்ளது. 78,824 பேர் காய்ச்சலுக்கு சிகிச்சை பெறுகின்றனர்.



▲ தென்கொரியாவில் கோவிட்-19 வைரஸ் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது. இதன்காரணமாக அந்த நாட்டின் தலைநகர் சியோலில் முகமூடி வாங்குவதற்காக ஒரு கடையின் முன்பு நேற்று பெருந்திரளான மக்கள் வரிசையில் பொறுமையாக காத்திருந்தனர். படம்: பிடிஐ

### பள்ளிகளுக்கு விடுமுறை

சீனாவைவிட தென்கொரியாவில் கோவிட்-19 வைரஸ் காய்ச்சல் அதிவேகமாகப் பரவி வருகிறது. அந்த நாட்டில் நேற்று 571 பேர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக தென்கொரியாவில் 2,337 பேர் காய்ச்சலுக்கு சிகிச்சை பெறுகின்றனர். தென்கொரியாவின் உல்சன் நகரில் ஹுண்டாய் கார் ஆலை உள்ளது. அங்கு பணியாற்றும் ஊழியர் ஒருவருக்கு காய்ச்சல் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டதால் அந்த ஆலை மூடப்பட்டது.

ஜப்பானின் யோகோஹாமா துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ள டயமண்ட் பிரின்சஸ் கப்பலில் 705 பேருக்கு காய்ச்சல் பாதிப்பு உள்ளது. ஜப்பானின் இதர பகுதிகளில் 186 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஜப்பானின் ஹோக்கைடோ தீவில் சுகாதார அவசர நிலை அமல் செய்யப்பட்டுள்ளது. ஜப்பான் முழுவதும் நேற்று முதல் பள்ளிகளுக்கு ஒரு மாதம் விடுமுறை விடப்பட்டுள்ளது.

### ஈரானில் 26 பேர் உயிரிழப்பு

சீனாவுடன் நெருக்கமான தொடர்பை கொண்டுள்ள ஈரானில் கோவிட்-19 காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது. இந்தக் காய்ச்சலால் இதுவரை 26 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 245 பேருக்கு காய்ச்சல் பாதிப்பு உள்ளதாகவும் அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது. ஈரானில் 7 துணை அதிபர்கள் உள்ளனர். இதில் மசூமே எப்தேகர் என்ற பெண் துணை அதிபருக்கு காய்ச்சல் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மங்கோலிய அதிபர் பதுல்கா கடந்த 27-ம் தேதி சீன அதிபர் ஜி ஜின்பிங்கை பெய்ஜிங்கில் சந்தித்துப் பேசினார். அவர் நேற்று நாடு திரும்பினார். அதிபரும் அவரது குழுவினரும் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாக மங்கோலிய அரசு அறிவித்துள்ளது.

### ஐரோப்பாவில் அச்சம்

ஐரோப்பிய நாடான இத்தாலியில் கோவிட்-19 வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 650 ஆக உயர்ந்துள்ளது. அந்த நாட்டில் இதுவரை 17 பேர் உயிரிழந்துள்ளனர். முன்னெச்சரிக்கையாக இத்தாலியில் கால்பந்து விளையாட்டு போட்டிகள், ஆடை அலங்கார அணிவகுப்புகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

பிரான்ஸ், ஜெர்மனி, பிரிட்டனிலும் கோவிட்-19 காய்ச்சலால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. காய்ச்சல் பரவுவதை தடுக்க பிரிட்டனில் பள்ளிகளுக்கு 2 மாதங்கள் விடுமுறை விட ஆலோசிக்கப்பட்டு வருகிறது. ஐரோப்பாவின் பெரும்பாலான நாடுகளில் பொது நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் 60 பேருக்கு கோவிட்-19 காய்ச்சல் பாதிப்பு உள்ளது. அங்குள்ள கலிபோர்னியா மாகாணத்தில் நேற்று பெண் ஒருவருக்கு காய்ச்சல் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து அந்த மாகாணத்தில் 8,400 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஆப்பிரிக்க கண்டத்தில் எகிப்தில் ஒருவருக்கு கோவிட்-19 காய்ச்சல் பாதிப்பு இருப்பது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்நிலையில் ஆப்பிரிக்காவின் ஏழை நாடான நைஜீரியாவில் பணியாற்றும் இத்தாலிய இளைஞருக்கு காய்ச்சல் பாதிப்பு இருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டது. ஆப்பிரிக்க நாடுகளில் காய்ச்சல் பரவுவதை தடுக்க உலக சுகாதார அமைப்பு முன்னுரிமை அளித்து வருகிறது.

சீனாவையும் சேர்த்து உலகம் முழுவதும் கோவிட்-19 காய்ச்சலுக்கு இதுவரை 2,867 பேர் உயிரிழந்துள்ளனர். 83,731 பேருக்கு காய்ச்சல் பாதிப்பு உள்ளது.

உலக பொருளாதாரத்தில் சீனா, ஜப்பான், தென்கொரியா ஆகியவற்றின் பங்களிப்பு 24 சதவீதம் ஆகும். இந்த 3 நாடுகளும் கோவிட்-19 காய்ச்சலால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பால் உலக பொருளாதாரம் சரிவை நோக்கிச் செல்கிறது. அமெரிக்கா, ஐரோப்பா, ஆசிய நாடுகளின் பங்குச் சந்தைகள் கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ளன. கோவிட்-19 காய்ச்சலால் உலக பொருளாதாரத்தில் ரூ.72,16,550 கோடி வரை இழப்பு ஏற்படும் என்று ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

சீனா, தென்கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளில் ஏராளமான ஆலைகள் மூடப்பட்டிருப்பதால் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர். உலகம் முழுவதும் சுற்றுலா தொழில் முழுமையாக முடங்கியுள்ளது. விமான சேவை நிறுவனங்கள் பெரும் இழப்பை சந்தித்துள்ளது. கோவிட்-19 காய்ச்சலால் உலக பொருளாதாரம் சரிந்து வருவதால், இந்தக் காய்ச்சலை கட்டுப்படுத்த சர்வதேச நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று பொருளாதார நிபுணர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

# அமெரிக்கா, தலிபான் இடையே இன்று அமைதி ஒப்பந்தம்

■ வாஷிங்டன்

அமெரிக்கா, தலிபான் இடையே இன்று அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அல்-காய்தா தீவிரவாதிகளை அழிக்க கடந்த 2001 டிசம்பரில் ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா போர் தொடுத்தது. அல்-காய்தாவுக்கு ஆதரவு அளித்த தலிபான்களின் ஆட்சி அகற்றப்பட்டது. ஆப்கானிஸ்தானின் பாதுகாப்புக்காக அமெரிக்க ராணுவம் அங்கு முகாமிட்டுள்ளது.

கடந்த 18 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்க ராணுவத்துக்கும் தலிபான்களுக்கும் இடையே சண்டை நடைபெற்று வருகிறது.

இதனிடையே இருதரப்புக்கும் பொதுவான கத்தார் நாட்டில் அமைதி பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இதில் உடன்பாடு எட்டப்பட்டு கடந்த வாரம் ஒரு வார போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது. இதன் காரணமாக ஆப்கானிஸ்தானில் கடந்த ஒரு வாரமாக எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை.

இதைத் தொடர்ந்து கத்தார் தலைநகர் தோஹாவில் அமெரிக்கா, தலிபான்கள் இடையே இன்று அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது ரஷ்யா, ஈரான் உட்பட பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என்று தெரிகிறது. இந்தியா சார்பிலும் தூதர்கள் பங்கேற்பார்கள் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

அமைதி ஒப்பந்த விவரங்கள் ரகசியமாக வைக்கப்பட்டுள்ளன. இந்த விவரங்களை பகிரங்கமாக வெளியிட வேண்டும் என்று அமெரிக்காவின் ஜனநாயக கட்சியின் மூத்த தலைவர்கள் அதிபர் டொனால்டு ட்ரம்பிடம் வலியுறுத்தியுள்ளனர்.

## சிரியாவில் 33 துருக்கி வீரர்கள் உயிரிழப்பு

■ அங்காரா

சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் அந்த நாட்டு விமானப்படை நடத்திய தாக்குதலில் 31 துருக்கி வீரர்கள் உயிரிழந்தனர்.

சிரியாவில் ஷியா பிரிவை சேர்ந்த அதிபர் ஆசாத்துக்கும் சன்னி பிரிவைச் சேர்ந்த கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையே கடந்த 8 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அதிபர் ஆசாத்துக்கு ரஷ்யாவும் ஈரானும் ஆதரவு அளிக்கின்றன. கிளர்ச்சிப் படைகளுக்கு ஆதரவாக அமெரிக்காவும் துருக்கியும் செயல்படுகின்றன.

இந்நிலையில் சிரியாவின் இட்லிப் மாகாணத்தின் பெகுன் நகர் அருகேயுள்ள கிளர்ச்சிப் படைகளை குறிவைத்து அதிபர் ஆசாத்தின் விமானப்படை நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியது. அப்போது கிளர்ச்சிப் படையுடன் இருந்த 31 துருக்கி வீரர்கள் உயிரிழந்தனர்.

இதற்கு துருக்கி அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பும் துருக்கி வீரர்கள் உயிரிழப்புக்கு கடும் எதிர்ப்பை பதிவு செய்துள்ளது.

## ஐநா சபை கூட்டத்தில் இந்தியா ஆட்சேபம்

# தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் நிதியுதவி அளிக்க கூடாது

■ ஜெனீவா

"தீவிரவாதிகளுக்கு நிதியுதவி அளிப்பதை பாகிஸ்தான் உடனடியாக நிறுத்த வேண்டும்" என்று ஐநா சபையில் நடைபெற்ற மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்தில் பங்கேற்ற இந்திய பிரதிநிதி கண்டனம் தெரிவித்தார்.

ஜெனிவாவில் நடைபெற்ற 43-வது மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்தில் ஜம்மு காஷ்மீரின் மனித உரிமை மீறல் நடப்பதாக பாகிஸ்தான் விமர்சித்தது. அதற்கு பதிலளிக்கும் விதமாக, "தீவிரவாதிகளுக்கு நிதியுதவி அளிப்பதை பாகிஸ்தான் உடனடியாக நிறுத்த வேண்டும்.

தீவிரவாத முகாம்களை அவர்கள் உடனடியாக அகற்ற வேண்டும். ஜம்மு காஷ்மீரில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளைத் தடுத்து நிறுத்தும் முயற்சியை கைவிட வேண்டும். பாகிஸ்தான் தீவிரவாத குழுக்களின் சதித் திட்டங்களை முறியடித்து ஜம்மு காஷ்மீரில் சீரமைப்பு பணி வேகமாக நடைபெற்று வருகிறது. அங்கு இயல்பு நிலை விரைவில் திரும்பும்" என்று கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் பாகிஸ்தானுக்கு 10 அறிவுரைகளை வழங்கினார்:

தீவிரவாதிகளை தூக்கிப்பிடிப்பதைப் பாகிஸ்தான் தலைமை கைவிட வேண்டும். சட்டத்துக்கு புறம்பான ஆக்கிரமிப்புக்கு, எல்லை தாண்டிய பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு-காஷ்மீரில் இருந்து பாகிஸ்தான் விலகிச் செல்ல வேண்டும்.

பாகிஸ்தானில் வாழும் மதச் சிறுபான்மையினருக்கு எதிரான வன்கொடுமைகளை நிறுத்த வேண்டும். இந்து, சீக்கிய மற்றும் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த பெண்களையும் சிறுமிகளையும் துன்புறுத்தி அவர்களை மத மாற்றம் செய்யும் நடவடிக்கைகளை கைவிட வேண்டும்.

ஷியா முஸ்லிம்கள், அகமதியர்கள், இஸ்மாலியா, ஹஜாரா உள்ளிட்ட முஸ்லிம் இன மக்களுக்கு எதிரான மத துன்புறுத்தலை நிறுத்திக் கொள்ள வேண்டும். சிறுவர்களை தற்கொலை படை தாக்குதல் உள்ளிட்ட கொடூரமான தீவிரவாத செயல்களில் ஈடுபடுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இவ்வாறு இந்திய பிரதிநிதி பேசினார். - பிடிஐ

THE HINDU BusinessLine பக்கம்

| பி.எஸ்.இ. | என்.எஸ்.இ. | மாருதி சுசூகி | வேதாந்தா |
|---|---|---|---|
| 38,297.29 | 11,201.75 | 6,294.05 | 112.85 |
| -1,448.37 | -431.55 | +4.25 | -17.70 |
| -3.64% | -3.71% | +0.068% | -13.56% |

## சீனாவைத் தாண்டி பிற நாடுகளுக்குப் பரவும் 'கோவிட் 19'

# சர்வதேச பங்குச் சந்தையில் கடும் வீழ்ச்சி

● சென்செக்ஸ் 1,448 புள்ளிகள் சரிவு

■ புதுடெல்லி

'கோவிட் 19' (கரோனா வைரஸ்) சீனாவைத் தாண்டி பிற நாடுகளுக்கும் பரவி வருகிற நிலையில், உலகளாவியப் பொருளாதாரம் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. நேற்றைய தினம் உலக நாடுகளின் பங்குச் சந்தையில் கடும் சரிவு ஏற்பட்டது.



மும்பை பங்குச் சந்தையில் சமீப ஆண்டுகளில் இல்லாத அளவில் வீழ்ச்சி ஏற்பட்டது. நேற்றைய வர்த்தக முடிவில் மும்பை பங்குச் சந்தையில் 1,448 புள்ளிகள் குறைந்து குறியீட்டெண் 38,297.29 ஆக சரிந்தது. அதேபோல் தேசிய பங்குச் சந்தையில் 431.55 புள்ளிகள் சரிந்து குறியீட்டெண் 11,201.75-ஆக சரிந்தது. மொத்த அளவில் மும்பை பங்குச் சந்தை 3.64 சதவீதம் அளவிலும், தேசியப் பங்குச் சந்தை 3.71 சதவீதம் அளவிலும் வீழ்ச்சி அடைந்தன. இது சமீப ஆண்டுகளில் ஏற்பட்ட பெரும் வீழ்ச்சி என பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

சீனாவில் பரவிய கோவிட் 19, தற்போது பிற நாடுகளிலும் பரவத் தொடங்கியுள்ளது. அதன் நீட்சியாக பங்குச் சந்தையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இன்னும் சில மாதங்கள் கோவிட் 19 வைரஸ் தாக்கம் குறையும் என்றும், அதன்பிறகு பங்குச் சந்தை பழைய நிலையை அடையும் என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர். இருந்தபோதிலும் தற்போது ஏற்பட்டிருக்கும் சரிவு, பங்குச் சந்தை முதலீட்டாளர்களிடம் கடும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கப் பங்குச் சந்தை கடந்த 6 நாட்களில் 12 சதவீதம் அளவில் சரிவைக் கண்டுள்ளது. அதேபோல், ஆசியாவில் ஜப்பான் பங்குச் சந்தை 4 சதவீதம் அளவில் சரிந்துள்ளது.

### ரூ.11.4 டிரில்லியன் கோடி இழப்பு

இந்தியாவைப் பொறுத்தவரையில் கடந்த 6 தினங்களில் மட்டும் பங்குச் சந்தை முதலீட்டாளர்கள் ரூ.11.4 டிரில்லியன் கோடி அளவில் இழப்பைச் சந்தித்துள்ளனர். எண்ணெய் சுத்திகரிப்பு, நிதி நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் சந்தை மதிப்பு கடும் சரிவை எதிர்கொண்டுள்ளன. கடந்த 6 தினங்களில் மும்பை பங்குச் சந்தை 7 சதவீதம் அளவிலும், தேசியப் பங்குச் சந்தை 7.2 சதவீதம் அளவிலும் சரிந்துள்ளன.

ரிலையன்ஸ் இண்ட்ஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் சந்தை மதிப்பு கடந்த 6 நாட்களில் ரூ.1.04 டிரில்லியன் அளவில் குறைந்துள்ளது. அதேபோல் டிசிஎஸ் ரூ.53,133 கோடி, ஐசிஐசிஐ வங்கி ரூ.31,063 கோடி, ஹெச்டிஎஃப்சி ரூ.28,996 கோடி, இன்ஃபோசிஸ் ரூ.25,339 கோடி, ஹெச்டிஎஃப்சி வங்கி ரூ.24,270 கோடி அளவில் இழப்பைச் சந்தித்துள்ளன.

நேற்றைய வர்த்தக முடிவில் வேதாந்தா நிறுவனத்தின் பங்கு மதிப்பு 13.56 சதவீதம் அளவில் சரிந்தது. அதைத்தொடர்ந்து டாடா மோட்டார்ஸ் 10.74 சதவீதம் அளவிலும், டெக் மஹிந்திரா 7.7 சதவீதம் அளவிலும் சரிந்தன.

உலகளாவிய ஏற்றுமதியில் சீனா குறிப்பிடத்தக்க அளவில் பங்கு வகிக்கிறது. தற்போது அங்கு கோவிட் 19 பரவிவருவதால் உற்பத்தி முடங்கியுள்ளது. இதன் விளைவாக சீனாவை நம்பி இருக்கும் நாடுகள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன.

# மூன்றாம் காலாண்டில் ஜிடிபி 4.7 சதவீதம்

■ புதுடெல்லி



நடப்பு நிதி ஆண்டின் அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான மூன்றாம் காலாண்டில் இந்தியாவின் ஜிடிபி 4.7 சதவீதமாக உள்ளது. முந்தைய ஆண்டு இதேகாலத்தில் ஜிடிபி 6.6 சதவீதமாக இருந்தது. இந்தியா கடும் பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள நிலையில், ஜிடிபி தொடர் சரிவைக் கண்டுள்ளது.

இருந்தபோதிலும் செப்டம்பர் மாதத்துடன் முடிந்த இரண்டாம் காலாண்டோடு ஒப்பிடுகையில் ஜிடிபி 0.2 சதவீதம் உயர்ந்துள்ளது. நடப்பு நிதி ஆண்டின் இரண்டாம் காலாண்டில் கடந்த 6 ஆண்டுகளில் இல்லாத அளவில் ஜிடிபி 4.5 சதவீதமாக சரிந்தது.

மத்திய புள்ளிவிவரங்கள் அலுவலகம் நேற்று மூன்றாம் காலாண்டு ஜிடிபி விவரங்களை வெளியிட்டது. அதன்படி, நடப்பு நிதி ஆண்டில் ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான 9 மாதங்களில் வளர்ச்சி 5.1 சதவீதமாக உள்ளது. சென்ற நிதி ஆண்டு இதே காலகட்டத்தில் வளர்ச்சி 6.1 சதவீதமாக இருந்தது.

இந்நிலையில் நடப்பு ஆண்டில் மொத்த அளவில் வளர்ச்சி 5 சதவீதமாக இருக்கும் என்று மத்திய புள்ளி விவரங்கள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# இனிப்பு பலகாரங்களுக்கு இனி காலாவதி தேதி கட்டாயம்

■ புதுடெல்லி

இனிப்பு பலகாரங்களை விற்பனை செய்யும் கடைகள் இனி இனிப்புப் பொருட்களின் காலாவதி தேதியைக் கட்டாயம் குறிப்பிட வேண்டும் என்று இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாடு ஆணையம் தெரிவித்துள்ளது.

பேக்கிங் செய்யப்படாமல் விற்கப்படும் இனிப்புகளின் தயாரிப்பு தேதி, தயாரிப்புப் பொருட்கள் உள்ளிட்ட விவரங்கள் அப்பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும் பெட்டிகளில் குறிப்பிட வேண்டும் என்று உணவு பாதுகாப்பு ஆணையம் தெரிவித்துள்ளது.

கடைகளில் விற்கப்படும் இனிப்புகளின் தரம் குறித்து பல்வேறு புகார்கள் வந்த நிலையில், உணவு பாதுகாப்பு ஆணையும் இந்த முடிவை எடுத்துள்ளது. அதன்படி வரும் ஜூன் 1 முதல் இந்த புதிய நடைமுறையை கடைபிடிக்க வேண்டும் என்று உணவு வணிக செயல்பாட்டாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

ஏற்கெனவே பேக்கிங் செய்யப்பட்டு விற்கப்படும் பொருட்களில் காலாவதி தேதி, தயாரிப்புப் பொருட்கள் உள்ளிட்ட விவரங்களை குறிப்பிட வேண்டும் என்று விதி உள்ளது. இந்நிலையில் தற்போது பேக்கிங் செய்யப்படாமல் சில்லரையாக விற்கப்படும் இனிப்புகளுக்கும் அவ்விவரங்கள் குறிப்பிட வேண்டும்.

## 'கோவிட் 19' பாதிப்பு எதிரொலி

# சர்வதேச ஜிடிபி-யில் 25,000 கோடி டாலர் பாதிப்பு

● தொழிலகக் கூட்டமைப்பு பிஹெச்டிசிசிஐ கணிப்பு

■ புதுடெல்லி

சீனாவில் உருவெடுத்து உலகையே அச்சுறுத்தி வரும் கோவிட் 19 (கரோனா வைரஸ்) தாக்குதல் காரணமாக சர்வதேச ஜிடிபி கடுமையான பாதிப்புக்கு உள்ளாகும் என்று தொழில் வர்த்தக கூட்டமைப்பான பிஹெச்டிசிசிஐ குறிப்பிட்டுள்ளது.

நோய் பாதிப்பு காரணமாக விநியோக சங்கிலி அறுபட்டுள்ளது. இது சீனாவின் ஏற்றுமதியை மட்டும் பாதிக்கவில்லை, சீனாவிலிருந்து இறக்குமதி செய்யும் நாடுகளையும் பாதித்துள்ளது.

இத்தகைய சூழலில் நாம் உள்நாட்டு நுகர்வை அதிகரிக்க வேண்டும். இதன் மூலம் ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள சரிவை ஓரளவு ஈடுகட்ட முடியும் என்று சம்மேளனத்தின் தலைவர் டி.கே. அகர்வால் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அளவில் ஜவுளி வர்த்தகத்தில் சீனாவின் பங்களிப்பு 13 சதவீதமாக உள்ளது. இங்கிருந்து அமெரிக்கா, ஹாங்காங், ஜப்பான், கொரியா, வியட்நாம், ஜெர்மனி, இந்தியா, நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. சர்வதேச வர்த்தகம் பாதிக்கப்படுவதால் உலக பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இதனால் சர்வதேச சந்தை வேறு நாடுகளுக்கு மாறும் வாய்ப்பும் உள்ளது. இந்த நோயின் பாதிப்பு, அது தொடரும் தீவிரம் இவற்றை உள்ளடக்கியே சர்வதேச பொருளாதாரத்தின் எதிர்காலம் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கோவிட் 19 பாதிப்பால் சர்வதேச வளர்ச்சி 0.3 சதவீத பாதிப்பை ஏற்படுத்தும். இது டாலர் மதிப்பில் 25,000 கோடியாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

இத்தகைய சூழலில் இந்திய ஏற்றுமதியாளர்கள் தங்களது ஏற்றுமதி வாய்ப்புகளை பிரகாசப்படுத்திக் கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கோவையில் சர்வதேச பொறியியல் கண்காட்சி

■ சென்னை

இந்திய பொறியியல் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்ஸில் (இஇபிசி), சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் 'சர்வதேச பொறியியல் செயலாக்கக் கண்காட்சி'யை வரும் மார்ச் மாதம் 4ம் தேதி முதல் 6-ம் தேதி வரை கோவையில் நடத்த உள்ளது.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் 300-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்கின்றன. இஇபிசி இந்தியா, சிறு குறு நடுத்தர நிறுவனங்களை மேம்படுத்தும் வகையில் கடந்த 2012-ம் ஆண்டுமுதல்ஒவ்வொருஆண்டும் இத்தகைய கண்காட்சியை நடத்தி வருகிறது.

இதுவரை மும்பையில் 5 முறையும், சென்னையில் 3 முறையும் நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இந்திய அளவில் முக்கிய தொழில்நகரமாக உருவெடுத்துள்ள கோவையில் நடத்தப்பட உள்ளது. சிறு, குறு நடுத்தர நிறுவனங்களுக்கு புதிய தொழில்நுட்பங்களை கொண்டு செல்லும் வகையிலும், ஏற்றுமதிக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தரும் வகையிலும் இந்த ஆண்டு கண்காட்சி அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தங்கம் - வெள்ளி

சென்னை

| தங்கம் | | ரூபாய் |
|---|---|---|
| 22 கேரட் | 1 கிராம் | 4,064 |
| வெள்ளி | 1 கிராம் | 49.00 |

ரிலாக்ஸ்



▲ 'கன்னிமாடம்' படத்தில் இருந்து..

## ஒளிப்பதிவுக்கு கைதட்டல்!

சமீபத்தில் வெளியாகி வரவேற்பை பெற்றுவரும் 'கன்னிமாடம்' திரைப்படத்தின் ஒளிப்பதிவு பல தரப்பில் வெகுவாக பாராட்டை பெற்று வருகிறது.

இப்படத்தில் பணிபுரிந்த அனுபவம் குறித்து ஒளிப்பதிவாளர் இனியன் ஜே.ஹாரீஸ் கூறியபோது, "செய்யும் வேலையை உணர்வுப்பூர்வமாக ரசித்து செய்தேன், அவ்வளவுதான். இப்படம் எனக்கு மிக முக்கியமான அடையாளம். திரையரங்கில் ஒளிப்பதிவாளருக்கு தனியாக கைதட்டல் கிடைப்பது அபூர்வம். 'கன்னிமாடம்' படத்தில் எனக்கு அந்த பெருமை கிடைத்தது. 'ஐ கான்ட்ரஸ்ட்' என்ற உத்தியை இப்படத்தில் அதிகம் பயன்படுத்தினேன். ஒளிப்பதிவாளர்கள் பலரும் பாராட்டுகின்றனர். அதில் பணியாற்றியவர்கள் மீண்டும் கூட்டணி சேர உள்ளோம். கூடவே வேறு சில படங்களில் ஒளிப்பதிவு செய்வதற்கும் பேச்சு நடந்து வருகிறது" என்றார்.



▲ 'கயிறு' படத்தில் இருந்து..



▲ 'இந்தியன்-2' படப்பிடிப்பில் கமல், ஷங்கர் (கோப்புப் படம்)



▲ வைரமுத்துவுடன் 'ஓராங்குட்டான்' படக் குழுவினர்.

## உரையாடல் தீராது!

தமிழில் பொதுவாக, முன்னணி படங்களுக்கு பாடல் எழுதும் கவிஞர் வைரமுத்து நல்ல கதைக் களம் கொண்ட சிறிய பட்ஜெட் படங்களுக்கும் பாடல் எழுதி வருகிறார். அந்த வரிசையில் தற்போது 'ஓராங்குட்டான்' என்ற படத்துக்கு வைரமுத்து ஒரு காதல் பாடல் எழுதியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியிருப்பதாவது:

ஒரு புதுப் படம்.. எல்லோரும் இளைஞர்கள்.. பெரியவர் – சிறியவர் பார்த்து தமிழ் வினைப்படுவதில்லை. எந்த சிப்பியில் எந்த முத்தோ? பெரும் படம் போலவே இந்த சிறுபடத்துக்கும் ஒரு காதல் பாடல். படம்: ஓராங்குட்டான். இயக்கம்: மகிமைதாஸ். இசை: மாரிசக்தி. பாடகர்கள்: யது, ஜாஹ்நவி.

இது அந்த பாடல்..

*நண்பா!*
*எப்போது காதல் வாய்த்தது?*
*அப்போது என்ன நேர்ந்தது?*
*ஒரு சூறாவளி*
*இதயச் சிறுகூட்டில் சுழன்றதா?*
*ஒரு கோதாவிரி*
*முதுகின் நடுக்கோட்டில்*
*நகர்ந்ததா?*
*இலவம்பஞ்சு போலே*
*உடல் மிதந்து போகாதோ*
*உன்னை நினைத்தால்*
*வார்த்தை மொழியிழந்து போகும்*
*சொல் தீர்ந்து போனாலும்*
*உரையாடல் தீராது*
*கண்ணா! வினோத வேதனை*
*கண்தூங்கும் போதும்*
*காதல் சிந்தனை.*



▲ 'கோப்ரா' படத்தில் விக்ரமின் பல்வேறு தோற்றங்கள்.

## விருதுகளை அள்ளும் 'கயிறு'

சத்தமே இல்லாமல் சர்வதேச அளவில் 6 விருதுகளை பெற்றிருக்கிறது 'கயிறு' திரைப்படம். அமெரிக்காவில் நடைபெற்ற 'தி கிரேட் சினிமா நவ்' திரைப்பட விழாவில் சிறந்த படத்துக்கான விருது, மெக்சிகோவில் நடந்த '7 கலர்ஸ் பேச்சிலர்ஸ்' சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த நடிகருக்கான விருது உட்பட 6 சர்வதேச விருதுகளை இப்படம் வென்றுள்ளது. இதுதவிர, ரஷ்யாவில் நடந்த யூரேசியா சர்வதேச மாதாந்திர திரைப்பட விழா, இரானில் நடந்த சர்வதேச திரைப்பட விழா, லண்டன் சர்வதேச திரை விருது விழா உட்பட உலகம் முழுவதும் நடந்த 20 திரைப்பட விழாக்களிலும் இப்படம் முத்திரை பதித்துள்ளது.

"தினமும் காலையில் காளை மாட்டுடன் வீடு வீடாக சென்று குறிசொல்லும் பூம்பூம் மாட்டுக்கார இளைஞன் பற்றிய கதை. அவனுக்கு ஒரு பெண் மீது காதல் ஏற்படுகிறது. அவளை திருமணம் செய்ய வேண்டுமானால், தன் தொழிலை விடவேண்டிய சூழலுக்கு தள்ளப்படுகிறான். காதலா? தன் தந்தை வழியாக தனக்கு வந்த பாரம்பரியத் தொழிலா? என்ற இக்கட்டான சூழலில் என்ன முடிவு எடுக்கிறான் என்பதே கதைக் களம். உலக அளவில் இப்படம் விருதுகளை பெற்று வருவது மகிழ்ச்சி" என்கிறார் படத்தின் இயக்குநர் கணேஷ்.

## இயக்குநர் ஷங்கர் உருக்கம்!

இந்தியன் – 2 படப்பிடிப்பில் நடந்த விபத்து தொடர்பாக இயக்குநர் ஷங்கர் உருக்கமாக ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

ஒரு மாதம் முன்புதான் என்னிடம் உதவி இயக்குநராக சேர்ந்தார் கிருஷ்ணா. சேர்ந்த சில நாட்களிலேயே இவ்வளவு பெரிய திட்டத்தை நன்கு உள்வாங்கிக்கொண்டு, சிறப்பாக பணியாற்றி வந்தார். சரியான உதவி இயக்குநர் அமைந்துவிட்டார் என்ற என் சந்தோஷம் நீடிக்காதது துரதிர்ஷ்டம். அவரது மறைவு என்னை உலுக்கிவிட்டது. அன்று கிருஷ்ணாவின் வீட்டுக்கு சென்றபோது, அவரது தாய் என்னிடம் கதறி அழுதது கண்ணுக்குள்ளேயே நின்று என்னை இம்சிக்கிறது.

படப்பிடிப்பு தளத்தில் எனக்கு தேவைப்படும் போதெல்லாம் டீ, காபி, தண்ணீர், பிஸ்கெட் என்று எது கேட்டாலும் அருகிலேயே நின்று உடனுக்குடன் கொடுத்து உதவிய தயாரிப்பு உதவியாளர் மதுவை சவக் கிடங்கில் பார்த்து உடைந்துவிட்டேன்.

'இந்தியன்–2' படப்பிடிப்பில் ஒரு மாதம் வேலை இருக்கிறது என்று விரும்பி வந்து, தற்போதுதான் பணியில் சேர்ந்தவர் கலைப் பிரிவு சந்திரன் என்று கேள்விப்பட்டபோது துக்கம் தாளவில்லை.

எவ்வளவோ பாதுகாப்பும், முன்னேற்பாடுகளும் செய்தும் சற்றும் எதிர்பாராமல் நடந்த அந்த விபத்தை சிறிதும் ஜீரணிக்க முடியாமல் தவிக்கிறேன். நூலிழையில் நான் உயிர் பிழைத்தேன் என்பதைவிட, அவர்கள் உயிரிழந்துவிட்டார்களே என்ற வேதனைதான் என்னை வாட்டுகிறது. அவர்களது குடும்பத்தினர், படுகாயம் அடைந்தவர்கள் படும் துயரங்கள், கஷ்டங்களை பார்க்கும்போது, அந்த கிரேன் என் மீது விழுந்திருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு என்ன உதவி செய்தாலும், இழந்த உயிருக்கு ஈடாகாது. இருப்பினும் ஏதோ ஒரு வகையில் சிறு உதவியாக இருக்கும் என்று கருதி ரூ.1 கோடியை பாதிக்கப்பட்டோர் குடும்பங்களுக்கு அளிக்கிறேன். அவர்கள் இந்த துயரத்தில் இருந்து விரைவில் மீள மனப்பூர்வமாக பிரார்த்திக்கிறேன். விபத்து தந்த அதிர்ச்சி, வேதனை, மன உளைச்சலில் இருந்து மீள முயன்று கொண்டிருக்கிறேன்.

இவ்வாறு ஷங்கர் கூறியுள்ளார்.



ஸ்ரீநிதி ஷெட்டி

## விதவிதமான தோற்றத்தில் விக்ரம்!

ஒரே படத்தில் பல தோற்றங்கள், பல கதாபாத்திரங்களில் நடித்து சாதனை படைத்தவர்கள் சிவாஜி, கமல். அதேபோல, பல தோற்றங்களில் விக்ரம் நடிக்கும் திரைப்படம் 'கோப்ரா'. இப்படத்தின் முதல் தோற்றம் நேற்று வெளியாகியுள்ளது.

'இமைக்கா நொடிகள்' பட இயக்குநர் அஜய் ஞானமுத்து இயக்கிவரும் இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டுடியோ நிறுவனம் தயாரிக்க, ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார். இதில் கதாநாயகியாக 'கேஜிஎஃப்' புகழ் ஸ்ரீநிதி ஷெட்டி நடிக்கிறார். இப்படத்தில் விக்ரமின் 7 தோற்றங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. 8-வது தோற்றத்தில் நரம்புகள் புடைக்க திரும்பிக்கொண்டு நிற்கிறார் விக்ரம். தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய 3 மொழிகளில் இப்படம் தயாராகிறது. பிரபல கிரிக்கெட் வீரர் இர்ஃபான் பதான் இதில் நடிகராக அறிமுகமாகிறார். ஆக்ஷன் திரில்லராக உருவாகும் இப்படத்தில் இன்னும் பல தோற்றங்களில் விக்ரம் வர உள்ளதாக கூறப்படுகிறது.



கிறைஸ்ட்சர்ச்சிலுள்ள பேசின் ரிசர்வ் மைதான ஆடுகளத்தில் சிறிய அளவில் புற்கள் உள்ளன. இது வேகப்பந்து வீச்சாளர்களுக்கு உதவும் என்பதால் மகிழ்ச்சி. பந்துகளை இருபுறமும் நகர்த்த முடியும்.

● **டிரன்ட் பவுல்ட்,** நியூஸிலாந்து கிரிக்கெட் வீரர். ●





இந்த உலகக் கோப்பையில் இலங்கை அணியுடனான லீக் ஆட்டத்தை எளிதாக எடுத்துக்கொள்ள முடியாது. 2 தோல்விகளைக் கண்டுள்ளதால் இந்த ஆட்டத்தில் அந்த அணி சிறப்பாக விளையாடும்.

● **ஹர்மன்பிரீத்,** இந்திய கிரிக்கெட் மகளிர் அணி கேப்டன். ●

## திட்டமிட்டபடி டோக்கியோ ஒலிம்பிக் நடைபெறும்: ஐஓசி தலைவர் உறுதி



▲ தாமஸ் பேக்

■ **டோக்கியோ**

கோவிட்-19 வைரஸ் பிரச்சினை இருந்தாலும் திட்டமிட்டபடி டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் நடத்தப்படும் என்று சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி (ஐஓசி) உறுதி அளித்துள்ளது.

ஜப்பானின் டோக்கியோ நகரில் வரும் ஜூலை 24-ம் தேதி முதல் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் சீனாவின் வூஹான் நகரில் கோவிட்-19 வைரஸ் பரவி அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இது சீனா மட்டுமல்லாமல் ஜப்பான், தென் கொரியா, இந்தியா உள்ளிட்ட நாடுகளிலும் பரவியுள்ளது.

இதனால் ஜப்பானில் திட்டமிட்டபடி ஒலிம்பிக் போட்டி நடைபெறுமா என்ற அச்சம் எழுந்துள்ளது. இதுகுறித்து நேற்று முன்தினம் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் தலைவர் தாமஸ் பேக் கூறியதாவது:

டோக்கியோ நகரில் ஒலிம்பிக் போட்டி திட்டமிட்டபடி நடைபெறும். போட்டியை வெற்றிகரமாக நடத்துவது என ஐஓசி உறுதிபூண்டுள்ளது. கோவிட்-19 வைரஸ் ஜப்பானில் பரவியிருந்தாலும் போட்டியை திட்டமிட்டபடி நடத்துவது என முடிவு செய்துள்ளோம்.

இதற்காக ஜப்பான் சுகாதாரத்துறை அதிகாரிகள், உலக சுகாதார மையத்தின் (டபிள்யுஎச்ஓ) அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறோம்.

ஜப்பானில் கோவிட்-19 வைரஸை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே எடுத்து வருகிறார்.

இவ்வாறு அவர் கூறினார். – பிடிஐ



▲ கிறைஸ்ட்சர்ச் மைதான வளாகத்தில் நேற்று மின்சார ஸ்கூட்டரில் உல்லாச உலா செல்லும் இந்திய வீரர் சேத்தேஸ்வர் புஜாரா

படம்: பிடிஐ

### 2-வது டெஸ்ட் போட்டி இன்று தொடக்கம்

# நியூஸி. சவாலை எதிர்கொள்வோம்

● **பயிற்சியாளர் ரவி சாஸ்திரி நம்பிக்கை**

■ **கிறைஸ்ட்சர்ச்**

இந்தியா, நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான 2-வது டெஸ்ட் போட்டி கிறைஸ்ட்சர்ச் நகரில் இன்று தொடங்க உள்ளது. இந்தப் போட்டியில் நியூஸிலாந்து அணியின் சவால்களை எதிர்கொள்வோம் என்று அணியின் தலைமைப் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

நியூஸிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து இந்திய கிரிக்கெட் அணி விளையாடி வருகிறது. முதலில் நடைபெற்ற டி20 தொடரில் இந்தியா 5-0 என்ற கணக்கில அபார வெற்றி பெற்றது.

ஆனால் அதைத் தொடர்ந்து நடைபெற்ற ஒரு நாள் தொடரை 0-3 என்ற கணக்கில் முழுவதுமாக இழந்தது. இந்நிலையில் கடந்த வாரம் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில், இந்திய அணி படுதோல்வி கண்டது. இதனால் தொடரில் நியூஸிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி இன்று கிறைஸ்ட்சர்ச்சில் தொடங்கவுள்ளது. இந்தப் போட்டியில் வென்றால் மட்டுமே தொடரை இந்திய அணி சமன் செய்ய முடியும். ஒருவேளை தோல்வி கண்டாலோ அல்லது டிரா செய்தாலோ, தொடரை நியூஸிலாந்து அணி கைப்பற்றி விடும்.

எனவே போட்டியில் வெல்லும் நோக்கில் இந்திய அணி களமிறங்குகிறது.

இதுகுறித்து அணியின் தலைமைப் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி நேற்று கூறியதாவது: வெலிங்டனில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் நாங்கள்



சரியாக விளையாடவில்லை. ஆனால் எப்போதும் இதுபோன்ற தோல்வி ஏற்படுவது நல்லதுதான் என்று நான் நம்புகிறேன். இதுபோன்ற தோல்விதான் உங்களது மனநிலையை திறக்கும்.

நீங்கள் தோல்வியை சுவைக்கவில்லை என்றால் உங்கள் மனநிலை ஒரு முடிவை தீர்மானிக்கும் அல்லது அந்த முடிவை இறுதி செய்து விடும்.

நியூஸிலாந்தில் தோல்வியை சந்தித்தது நல்லதுதான். இதன் மூலம் கற்றுக்கொள்ள நமது அணியினருக்கு நல்ல வாய்ப்பு கிடைத்து இருக்கிறது. நியூஸிலாந்து அணி என்ன செய்கிறது? என்ன எதிர்பார்க்கிறது? என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. இது ஒரு நல்ல பாடம்.

2-வது டெஸ்டில் நியூஸிலாந்துக்கு எதிரான சவாலை எதிர்கொள்ள இந்திய வீரர்கள் தயாராக உள்ளனர். உலக சாம்பியன்ஷிப் போட்டியில் 8 ஆட்டங்களில் விளையாடி இருக்கிறோம். இதில் 7 ஆட்டத்தில் வெற்றி பெற்று இருக்கிறோம். ஒரு தோல்வி ஏற்பட்டதால் பயப்படத் தேவையில்லை. இந்த அணியின் பாதையை மாற்ற வேண்டும் என்று யாரும் நினைக்கவும் தேவையில்லை.

டெஸ்ட் கிரிக்கெட்டும், ஒருநாள் போட்டியும் முற்றிலும் வேறுபாடு கொண்டவை. இங்கிலாந்து, நியூஸிலாந்தில் டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடுவது முற்றிலும் வித்தியாசமானது. ஆனாலும் முதல் டெஸ்டில் ஏற்பட்ட தோல்விக்கு எந்த காரணங்களைச் சொல்லவும் நாங்கள் இங்கு வரவில்லை. அவர்கள் சிறப்பாக விளையாடினார்கள்.

அஸ்வின் உலகத்தரம் வாய்ந்த பந்து வீச்சாளர். இதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அவரது பேட்டிங்கில் முன்னேற்றம் அடைவது தேவையான விஷயமாகும். 2-வது போட்டியில் ரவீந்திர ஜடேஜா விளையாட வாய்ப்பு இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

- பிடிஐ



கிறைஸ்ட்சர்ச் மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் நியூஸிலாந்து வீரர் கேன் வில்லியம்சன் உள்ளிட்டோர்.

படம்: பிடிஐ

## இஷாந்த் சர்மா காயம்



கணுக்காலில் மீண்டும் காயம் ஏற்பட்டுள்ளதால் இந்தியாவின் வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா 2-வது டெஸ்டில் விளையாடுவது சந்தேகம் எனத் தெரியவந்துள்ளது.

நியூஸிலாந்துக்கு எதிரான முதல் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இஷாந்த் சர்மா 5 விக்கெட்கள் வீழ்த்தினார். இந்தத் தொடருக்கு முன் இவர் ரஞ்சி டிராபியில் டெல்லி அணிக்காக விளையாடினார். அப்போது கணுக்காலில் காயம் ஏற்பட்டது.

இதனால் நியூசிலாந்து தொடரில் பங்கேற்பாரா? என்ற கேள்வி எழுந்தது. ஆனால், கடைசி கட்டத்தில் உடற்தகுதியை நிரூபித்து முதல் டெஸ்டில் விளையாடினார். இந்நிலையில் இன்று 2-வது டெஸ்ட் கிறிஸ்ட்சர்ச்சில் தொடங்குகிறது. இந்நிலையில் இஷாந்த் சர்மாவுக்கு மீண்டும் கணுக்காலில் காயம் ஏற்பட்டுள்ளது. இதனால் இன்றைய போட்டியில் அவர் பங்கேற்பது சந்தேகம் எனக் கூறப்படுகிறது. நேற்று காலையில் வலைப்பயிற்சி மேற்கொண்ட இஷாந்த் சர்மா, மாலை நேரத்தில் பயிற்சி மேற்கொள்ளவில்லை. மருத்துவ பரிசோதனை செய்யப்பட்ட பின் காயத்தின் தன்மை குறித்து தெளிவான அறிக்கை வெளியிடப்படும் என்று பிசிசிஐ தெரிவித்துள்ளது.

# டெஸ்ட் போட்டி இல்லாமல் டி20 கிரிக்கெட் நிலைக்காது

● **ரிச்சர்ட் ஹாட்லி கருத்து**

■ **கிறைஸ்ட்சர்ச்**

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் இல்லாமல் டி20 போட்டிகள் நிலைத்து நிற்காது என்று நியூஸிலாந்து முன்னாள் பந்துவீச்சாளர் சர் ரிச்சர்ட் ஹாட்லி தெரிவித்தார்.

இதுகுறித்து நேற்று செய்தியாளர்களிடம் ரிச்சர்ட் ஹாட்லி கூறியதாவது:

டெஸ்ட், ஒருநாள், டி20 போட்டிகள் ஆகிய மூன்றிலுமே சரிசமமான அளவில் போட்டிகள் நடத்தப்பட வேண்டும். தற்போது அதிக அளவில் டி20 கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்படுகின்றன. கிரிக்கெட்டுக்கு அடிப்படையான விஷயமே டெஸ்ட் போட்டிகள்தான்.

எனவே அதை நாம் புறக்கணிக்கக்கூடாது. எனவே அடிக்கடி டெஸ்ட் போட்டிகள் நடத்துவதற்கு வழிவகை செய்யவேண்டும்.

டி20 கிரிக்கெட் போட்டிகள் அறிமுகம் செய்யப்பட்டது நிச்சயம் புரட்சிகரமான விஷயம்தான். அதனால் ஏராளமான சிறந்த வீரர்கள் நமக்குக் கிடைத்துள்ளனர்.

ஆனாலும் மூன்றுவிதமான



▲ ரிச்சர்ட் ஹாட்லி

கிரிக்கெட் போட்டிகளும் இருக்க வேண்டும். டெஸ்ட் போட்டிகள் இல்லாமல் டி20 போட்டிகள் நிலைக்காது. பழமையான டெஸ்ட் போட்டிகளை நாம் தொடராவிட்டால் டி20 போட்டிகளும் காணாமல் போய்விடும். அதற்கும் நாம் முன்னுரிமை தரவேண்டும். உலக கிரிக்கெட்டை டி20 போட்டிகள் ஆள்வதை நான் வெறுக்கிறேன்.

டி20 கிரிக்கெட் போட்டி உண்மையான கிரிக்கெட் போட்டிகளே அல்ல. உண்மையான கிரிக்கெட் போட்டி எதுவென்றால் அது டெஸ்ட் கிரிக்கெட்தான். இவ்வாறு அவர் கூறினார். - பிடிஐ

## செய்தித்துளிகள்

● நட்பு கால்பந்துப் போட்டியில் மார்ச் 31-ம் தேதி நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா, தஜிகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன.

● மகளிர் டி20 ஓவர் உலக கோப்பைப் போட்டியில் தாய்லாந்து அணியை 113 ரன்கள் வித்தியாசத்தில் தென் ஆப்பிரிக்க அணி வீழ்த்தியது.

● கோவிட் –19 வைரஸ் தாக்குதல் எதிரொலியால் சைப்ரஸில் நடைபெறவுள்ள உலக துப்பாக்கிச் சுடுதல் போட்டியிலிருந்து இந்திய அணி விலகியுள்ளது. சைப்ரஸ் நாட்டின் நிக்கோசியா நகரில் மார்ச் 4–ம் தேதி முதல் 13–ம் தேதி வரை உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடுதல் போட்டி நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

● மாஸ்கோவில் நடைபெற்று வரும் ஏரோபிளாட் ஓபன் செஸ் போட்டியில் இந்திய வீரர் அரவிந்த் சிதம்பரம் 4–வது இடம் பிடித்தார். 6.5 புள்ளிகளுடன் அரவிந்த் சிதம்பரம் 4–வது இடத்தைப் பிடித்தார். மற்றொரு இந்திய வீரர் அதிபன் 7–வது இடம் பிடித்தார்.

### உலக மகளிர் டி20 கிரிக்கெட்

# இன்று இந்தியா, இலங்கை பலப்பரீட்சை



▲ ஷபாலி வர்மா

■ **மெல்பர்ன்**

உலகக் கோப்பை மகளிர் டி20 கிரிக்கெட் போட்டியில் இன்று இந்தியா, இலங்கை அணிகள் பலப்பரீட்சை செய்யவுள்ளன.

ஐசிசி உலகக் கோப்பை மகளிர் டி20 கிரிக்கெட் போட்டி ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் குரூப்-ஏ பிரிவில் இன்று மெல்பர்னில் நடைபெறும் ஆட்டத்தில் இலங்கையுடன் இந்திய அணி மோதவுள்ளது.

ஏற்கெனவே நடைபெற்ற 3 லீக் ஆட்டங்களில் நடப்புச் சாம்பியன் ஆஸ்திரேலியா, வங்கதேசம், நியூஸிலாந்து ஆகிய அணிகளை இந்தியா வீழ்த்தி அரை இறுதிக்கு முன்னேறிவிட்டது. எனவே இந்த லீக் ஆட்டத்திலும் இந்திய அணி சிறப்பாக விளையாடும் என எதிர்பார்க்கலாம். இந்திய அணியின் நட்சத்திர வீராங்கனையாக ஷபாலி வர்மா உருவாகியுள்ளார். இந்த டி20 உலகக்கோப்பை தொடரில் அவர் 3 போட்டிகளில் 172.72 ஸ்ட்ரைக் ரேட்டில் 114 ரன்கள் குவித்துள்ளார். இது உலகக்கோப்பை சாதனை ஆகும். அவரிடமிருந்து மேலும் ஒரு சிறந்த இன்னிங்ஸை இன்று வெளிப்படக்கூடும்.

அதே நேரத்தில் கடந்த 2 லீக் ஆட்டங்களிலும் இலங்கை அணி தோல்வி கண்டு, அரை இறுதிக்குத் தகுதி பெற முடியாத நிலையில் உள்ளது.

**அணி விவரம்:**

**இந்தியா:** ஹர்மன்பிரீத் கவுர் (கேப்டன்), தானியா பாட்டியா, ஹர்லீன் தியோல், ராஜேஸ்வரி கெய்க்வாட், ரிச்சா கோஷ், வேதா கிருஷ்ணமூர்த்தி, ஸ்மிருதி மந்தனா, ஷிகா பாண்டே, பூனம் யாதவ், அருந்ததி ரெட்டி, ஜெமிமா ரோட்ரிக்ஸ், ஷபாலி வர்மா, தீப்த் சர்மா, பூஜா வஸ்த்ராகர், ராதா யாதவ்.

**இலங்கை:** சமாரி (கேப்டன்), ஹர்ஷிதா நீலாக்சி டி சில்வா, கவிஷா தில்ஹரி, அமா காஞ்சனா, ஹன்சிமா, அசினி குலசூர்யா, சுகந்திகா குமாரி, ஹசினி பெரேரா, உதேசிகா, சத்யா சந்தீபனி, அனுஷ்கா சஞ்சீவனி, சசிகலா சிறிவர்த்தனே, திலான மனோதரா, உமேஷா திமாஷினி.

## ஐ லீக் கால்பந்து சென்னை சிட்டி வெற்றி

■ **மும்பை:** ஹீரோ ஐ லீக் கால்பந்துப் போட்டியின் லீக் ஆட்டத்தில் சென்னை சிட்டி எப்சி அணி அபாரமாக விளையாடி இந்தியன் ஏரோஸ் அணியை வீழ்த்தியது.

மும்பை கூப்பரேஜ் ஸ்டேடியத்தில் இந்த லீக் ஆட்டம் நேற்று மாலை நடைபெற்றது. இதில் சென்னை சிட்டி எப்சி அணி 2–0 என்ற கோல்கள் கணக்கில் அபார வெற்றியைப் பதிவு செய்தது.

ஆட்டம் தொடங்கியதும் இரு அணி வீரர்களும் ஆக்ரோஷமாக விளையாடினர். இருப்பினும் முதல் பாதியில் கோல் எதுவும் விழவில்லை. ஆனால் 2–வது பாதியின் தொடக்கத்திலேயே சென்னை சிட்டி வீரர் அடோல்பா மிராண்டா அரவ்ஜோ கோலடித்தார். இதனால் சென்னை சிட்டி அணி 1–0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. அடோல்பா கோலடித்த 12–வது நிமிடத்திலேயே மற்றொரு கோலை அடித்தார் சென்னை அணியின் நட்சத்திர வீரர் கட்சுமி யுசா. இதனால் சென்னை அணி 2–0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. இறுதி வரை இந்த நிலை நீடிக்கவே சென்னை சிட்டி எப்சி அணி வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து சென்னை சிட்டி அணி 19 புள்ளிகளுடன் 3–வது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

## வெற்றி பெறுவோம்: பயிற்சியாளர்

எப்சி கோவாவுடனான அரை இறுதிப் போட்டியில் நாங்கள் வெற்றி பெறுவோம் என்று சென்னையின் எப்.சி. அணி பயிற்சியாளர் ஓவன் கோய்லே தெரிவித்தார்.

இதுகுறித்து நேற்று செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி:

முதல் அரை இறுதி ஆட்டத்தில் எப்சி கோவா அணியுடன் மோதுவது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்த சீசனில் எப்சி கோவா ஒரு மிகச் சிறந்த அணியாக முன்னேறியுள்ளது. அவர்கள் தொடர்ந்து முதலிடத்தில் இருப்பதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. மிகச் சிறப்பான ஆட்டத்தை அவர்கள் வெளிப்படுத்தி வருகிறார்கள். அதே நேரத்தில் சென்னையின் எப்சி அணியும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. தற்போது நாங்களும் நல்ல பார்மில் உள்ளோம்..

வீரர்களுக்கிடையே இருக்கும் நம்பிக்கையும் உறுதியும் நாளை நடைபெறவுள்ளன எப் சி கோவாவுக்கு எதிரான போட்டியில் எங்களை வெற்



▲ ஓவன் கோய்லே

றியை நோக்கி அழைத்து செல்லும் என நம்புகிறேன். சென்னை அணி வீரர்கள் மிகுந்த தன்னம்பிக்கையுடன் போட்டியை எதிர்கொள்வதால் வெற்றி பெறுவோம்.

இந்த ஆட்டத்தில் இரு அணிகளின் தற்காப்பு ஆட்டக்காரர்களும் மிகப்பெரிய பங்கை வகிப்பார்கள். அதேபோல இரு அணிகளின் முன்கள, நடுகள ஆட்டக்காரர்களும் மிகச் சிறந்த வீரர்களாக உள்ளனர். முன்கள ஆட்டக்காரர்கள் சிறப்பாக உள்ளதால் அவர்கள் எந்த நேரத்திலும் அணியின் வெற்றிக்கு உதவக்கூடும். நாம் எப்படி தடுப்பாட்டம் ஆடுவது என்பதில்தான் அணியின் வெற்றி தோல்வி அடங்கியுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

எப்சி கோவா அணி பயிற்சியாளர் கிளிப்போர்ட் மிராண்டா கூறும்போது, "பிளே-ஆப் சுற்றில் சென்னை போன்ற வலுவான அணியுடன் மோதுவது கடினமான விஷயம்தான். பிளே-ஆப் சுற்றில் சென்னை அணியுடன் மோதுவது தவிர்க்கப்படும் என எதிர்பார்த்தோம். ஆனால் சென்னை அணியுடன் மோதுவது என்பது இப்போது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. மிகச் சிறப்பான அணியாக சென்னை உருவாகியுள்ளது.

கடந்த 8 லீக் ஆட்டங்களில வெல்ல முடியாத அணியாக சென்னை அணி உள்ளது. எனவே இந்த ஆட்டம் எங்களுக்கு மிகவும் கடினமான ஒன்றாக இருக்கும். ஆனாலும் எங்களது இயற்கையான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம்" என்றார்.

### ஐஎஸ்எல் அரை இறுதி ஆட்டம்

# சென்னை - கோவா இன்று மோதல்

■ **சென்னை**

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் சென்னையின் எப்சி, எப்சி கோவா அணிகள் இன்று மோதவுள்ளன.

2019-20 சீசன் ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டிகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. அரை இறுதிக்கு எப்சி கோவா, சென்னையின் எப்சி, ஏடிகே (அட்லெடிகோ டி கொல்கத்தா), பெங்களூரு எப்சி அணிகள் முன்னேறியுள்ளன.

லீக் ஆட்டங்களின் முடிவில் முதலிடத்தை எப்சி கோவா அணியும், 2-வது இடத்தை ஏடிகே அணியும், 3-வது இடத்தை பெங்களூரு அணியும், 4-வது இடத்தை சென்னையின் எப்சி அணியும் பிடித்தன.

இதையடுத்து இன்று சென்னை நேரு விளையாட்டு அரங்கில் நடைபெறும் முதல் அரை இறுதி ஆட்டத்தில் சென்னையின் எப்சி அணியுடன், எப்சி கோவா அணி மோதவுள்ளது. லீக் ஆட்டங்களில எப்சி கோவா அணி 18 ஆட்டங்களில் விளையாடி 12 வெற்றி, 3 டிரா, 3 தோல்விகளுடன் முதலிடத்தைப் பிடித்து வலுவான நிலையில் உள்ளது.

அதே நேரத்தில் சென்னையின் எப்சி அணி 18 ஆட்டங்களில் பங்கேற்று 8 வெற்றி, 5 டிரா, 5 தோல்விகளுடன் 4-வது இடத்தைப் பிடித்தது. சென்னை அணியின் பயிற்சியாளராக இருந்த ஜான் கிரகோரி மாற்றப்பட்டு ஓவன் கோய்லே புதிய தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து சென்னை அணி கடந்த 12 போட்டிகளில் 24 புள்ளிகளை (7 வெற்றி, 3 டிரா) பெற்று பிளே-ஆப் சுற்றுக்கு முன்னேறியது.


சென்னை அணி வீரர் நெரிஜஸ் வால்ஸ்கிஸ் 13 கோல்களை அடித்து அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக உள்ளார்.

அதேபோல் ஆந்த்ரே ஷெம்பிரி, அனிருத் தாப்பா, எலி சாபியா, ரபேல் கிரைவெலரோ ஆகியோரும் அணிக்கு வெற்றி தேடித் தருவதில் முனைப்புடன் உள்ளனர்.

அதே நேரத்தில் கடந்த 5 ஆட்டங்களில் பெற்ற தொடர் வெற்றியின் உற்சாகத்தில் களம் இறங்குகிறது எப்சி கோவா அணி. அந்த அணி வீரர் பெர்ரான் கோரோமினாஸ் இதுவரை 14 கோல்களை அடித்து அசத்தியுள்ளார்.

அதைப் போல் பார்த்தோலோமியு ஒக்பெச்சே, ஹூகே போமஸ் ஆகியோரும் எதிரணியின் கள வியூகத்தை உடைக்கக் காத்திருக்கின்றனர்.

## ஊக்கமருந்து விவகாரம் சீன நீச்சல் வீரருக்கு தடை



■ **லாசேன்:** ஊக்கமருந்து விவகாரம் காரணமாக சீனாவின் பிரபல நீச்சல் வீரர் சுன் யாங்குக்கு 8 ஆண்டு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவர் ஒலிம்பிக் போட்டிகளில் மூன்று தங்கப் பதக்கம் பெற்றவர். விளையாட்டு வீரர்கள் அனைவரும் ஊக்க மருந்து பரிசோதனைக்கு உட்படவேண்டும் என்று உலக ஊக்க மருந்து தடுப்பு (டபிள்யூஏடிஏ) அமைப்பு தெரிவித்துள்ளது. அவர்கள் கேட்கும்போது ரத்தம், சிறுநீர் மாதிரிகளைத் தரவேண்டும் என்பது விதியாகும். ஆனால் 2018–ம் ஆண்டின்போது சுன் யாங் தனது ரத்தம், சிறுநீர் மாதிரிகளைத் தர மறுத்துவிட்டார். இதையடுத்து அவருக்கு தடை விதித்தது. இதை எதிர்த்து சுவிட்சர்லாந்திலுள்ள விளையாட்டுக்கான நடுவர் நீதிமன்றத்தில் (சிஏஎஸ்) வழக்கு நடைபெற்று வந்தது. இந்நிலையில் நேற்று அதன் தீர்ப்பு வெளியானது. அதன்படி சுன் யாங்குக்கு, உலக ஊக்க மருந்து தடுப்பு அமைப்பு விதித்த 8 ஆண்டு தடை செல்லும் என்று நடுவர் நீதிமன்றம் அறிவித்தது.